விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-3397)
021 222 5392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 03 ஞாயிற்றுக்கிழமை (17.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 029

## புதிய அரசியலமைப்புக்கு பிரி.யின் அழுத்தம் இல்லை

### ஹியூகோ ஸ்வயர் தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கு பிரித்தானியா எந்தவித அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை என்று பிரித்தானியாவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஹியூகோ ஸ்வயர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவர் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## கருத்துக் கணிப்பு நாளை ஆரம்பம்

(கொழும்பு)

அரசியல் அமைப்பு சீர்திருத்தம தொடர்பாக பொது மக்களின் கருத்துக்கணிப்பு எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கருத்துக்கணிப்பானது. கொழும்பு - விசும்பாயவில் அமை

16 ஆம் பக்கம் பார்க்க....

## சுவிஸ் செல்லும் பிரதமர் ரணில்



(கொழும்பு)

உலகின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும்பொருளாதார மாநாடு

15 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் கைதிகளின் விடுதலைக்கு சட்டத்தரணிகள் இடையூறா?

### அரசியல் கைதிகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளை விடுவிப்பதில் சட்டத்தரணிகள் எவரும் இடையூறாக இருக்கவில்லை என தெரிவித்துள்ள தமிழ் அரசியல் கைதிகள். யாழ்ப்பாணத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதன் ஆகியோர் கூறிய கருத்துக்களுக்கு அரசியல் கைதிகள் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

அரசியல் கைதிகள் மீதான அனைத்து வழக்கிலும் இருந்து விடுவித்து புனர்வாழ்வு அளிப்பதை சட்டத்தரணிகள் வரவேற்றார்களே தவிர புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்வதை நிராகரிக்கவில்லை எனவும் அரசியல் கைதிகள் தெரிவித்தனர்.

தேசிய தைப்பொங்கல் நிகழ்வு நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

15 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ்க் கலாசார உடையில் வெளிநாட்டுப் பெண்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ் நல்லூர் ஆலயத்தின் சுற்றுப்புறத்தில் தமிழர் கலாசார ஆடைகளுடன் வெள்ளைக்காரப் பெண்கள் வலம் வருவதை காண

15 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச அர்ப்பணிப்பு இன்மையே சமாதான முயற்சிகள் தோல்வி

### எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



(கொழும்பு)

பரந்துபட்ட சர்வதேச அர்ப்பணிப்பு காணப்பட்டிருந்தால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் வெற்றியடைந்திருக்கும என நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதான பிரதிநிதி எரிக

15 ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற விசாரணையின்போது வெளிநாட்டு நிபுணர்கள் தேவை!

### வலுப்பெற்று வரும் கோரிக்கைகள்

(கொழும்பு)

போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நிபுணர்கள உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகின்றது.

விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில எதிர்வரும் நாட்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இலங்கையின் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஆகியோர் இந்த விசாரணைகளை நெறிப்படுத்தவுள்ளனர்.

வெளிநாட்டு நிபுணர்கள் சிலர் இவ்விசாரணைகளின் பார்வையாளர்களாகவும். ஆலோசகர்களாகவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் போர்க்குற்றங்கள தொடர்பான விசாரணைகளில்

15 ஆம் பக்கம் பார்க்க....

## 55 இந்திய மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்



(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 55 இந்திய மீனவர்கள் நேற்றுச் சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

16 ஆம் பக்கம் பார்க்க....

## விபத்துக்களால் நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 1.30 மணியிளவில் குருநகர் கடற்கரை வீதியில் ஹயஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற குருநகரை சேர்ந்த தனராசன் சிறிதரன்

15 ஆம் பக்கம் பார்க்க....

## சிறுவர் துஷ்பிரயோகங்கள் வடக்கில் திடீர் அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாக வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சீர்திருத்த திணைக்களத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இவ்வாறான முறைப்பாடுகள் அதிகரித்து காணப்படுவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் பாலியல் துஷபிரயோகத்தினால் 149 சிறுவர்களும். பாலியல் சேஷ்டைகளினால் 18 சிறுவர்களும். உடல் சம்மந்தமான துஷபிரயோகத்தினால் 69 சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக

15 ஆம் பக்கம் பார்க்க....

# 60ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் வில்வராஜா சுதாகர்



அமரர்
வில்வராஜா சுதாகர்
மலர்வு :- 12.06.1974 உதிர்வு :- 21.11.2015

கடந்த 21.11.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வில்வராஜா சுதாகர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் **செவ்வாய்க்கிழமை (19-01-2016) முற்பகல் 11 மணியளவில் லட்சுமி மண்டபத்தில்** (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவ பீடத்திற்கும் இடையில்) நடைபெற வுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

**தயவுசெய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

மேலும், அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்தும் வைத்தியசாலைக்கும், வீட்டிற்கும் ஓடோடி வந்து பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும், ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் தொலைபேசி, முகநூல் மூலம் ஆறுதல் கூறியோருக்கும், இரங்கல் உரையாற்றியோருக்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரங்கள் வழங்கியும், பத்திரிகை, பதாகைகள் மற்றும் மலர் வளையங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் அன்னாரின் இறுதிக் கிரியை நல்ல முறையில் நடைபெற உதவி புரிந்தவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் இதுவரை எம்முடன் தோள் கொடுத்துக் கொண்டிருக்கும் நட்புக்கள், உறவுகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருநெல்வேலி (3305) -குடும்பத்தினர்




1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

யாழ். **கலாலயா** பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials) Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

(சி-3458)

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-01-2016**
**ஞாயிறு காலை 9.30 மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-01-2016**
**திங்கள் காலை 9.30 மணி**

- (B) பிளவுஸ், சாறி (B)பிளவுஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)





மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-


# மரண அறிவித்தல்

# Dr.நிரஞ்சன் சரவணபவன் நடராஜா



இலங்கையை பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப் பிடமாகவும் கொண்டிருந்த பிரபல நடிகரும், தயா ரிப்பாளருமான (சூரியா திரைப்படத்தின் கதாநாய கன்) Dr.நிரஞ்சன் சரவணபவன் நடராஜா அவர் கள் 14.01.2016 வியாழக்கிழமை அன்று கொழும் பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா-அற்புதமலர் தம்பதியினரின் அன்புமகனும், காலஞ்சென்ற பூலோகராஜா-பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், லலிதாவின் அன்புக் கணவரும், பாலாஜி, சத்யா, பிரஷாந்த் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மஞ்சுளாதேவி, மங்களேஷ்வரி, திருஞானபவன், சதாநந்தபவன் ஆகியோரின் அன்பு சகோதரனும், சந்திரமோகன், பிரபாகரன், தீபா, நீரஜா, சசிதரா, சசிதரன், ரவிதரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 18.01.2016 திங்கட் கிழமை அன்று காலை 10.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று கனத்தை மயானத்தில் தக னம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:-குடும்பத்தினர்**

(சி-3457)

## இலங்கையில் மற்றுமொரு மாணிக்கக்கல் கண்டெடுப்பு!

இலங்கையின் தம்புள்ளை, எலஹெர பிரதேசத்தில் மிகப் பெரிய நீலநிற மாணிக்கக் கல் ஒன்றுநேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அதன் நிறை 4800 கரட் என்றும், 485 கிராம் எடை கொண்டதும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அதன் பெறுமதி தொடர்பான சரியான விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

இதற்கு முன்னர் அண்மையில் இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட மிகப்பெரிய நீலநிற மாணிக்கக் கல்லின் பெறுமதி 300 மில்லியன் டொலர்கள் என அதன் உரிமையாளர் அறிவித்திருந்தார்.

அந்த நீலநிற மாணிக்கக் கல்லின் நிறை 1404.49 கரட என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அதை விட அதிக நிறையுடைய மற்றுமொறு நீலநிற மாணிக்கக் கல்லே இவ்வாறு தம்புள்ளை, எலஹெர பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டுளளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.நா.சபை தொடர்ந்தும் இலங்கைக்கு உதவும்

## வதிவிடப் பிரதிநிதி மீண்டும் வாக்குறுதி



**(கொழும்பு)**

**ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் இலங்கை மக்களின் நலனுக்காக அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும்என்று ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப்பிரதிநிதி சுபினாய்நண்டி மீண்டும் வாக்குறுதி வழங்கியுள்ளார்.**

இலங்கையில் பணிக் காலம் முடிவடைந்து செல்லும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி சுபினாய் நண்டி நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து பிரியாவிடை பெற்ற போதே இந்த உறுதி மொழியை அவர் வழங்கினார்.

இலங்கையில் இருந்து செல்லும் நண்டி எதிர்வரும் பெப்ரவரியில் ஐக்கிய நாடுகளின் நியூயோர்க்க தலைமையகத்தின் அரசியல் பிரிவில் ஆசிய பசுபிக் பிரிவுத் தலைவராக செயற்படவுள்ளார்.

இலங்கையில் அவர் சுமார் நான்கரை வருடங்கள் பணி புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மகிந்தவின் வெள்ளை வான் கடத்தல்!

## ரகசியத்தை வெளியிட்ட விமலின் ஆதரவாளர்

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதிமகிந்தராஜபக்ஷவெள்ளை வானில் நபர்களை கடத்தி சென்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது திருடர்களை பிடிப்பதில்லை என கூறியதற்கு கடந்த காலங்களில் கடத்தல், காணாமற் போக செய்தல் மற்றும் வெள்ளை வான் கலாசாரம் போன்றவை இருந்தன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த கால கட்டங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லையா? என ஊடகவியலாளர் ஒருவர் வினவியதற்கு,

ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டமைக்கு தான் கடுமையாக எதிர்ப்பு வெளியிட்டதாகவும், அது மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி மாத்திரம் அல்ல. அவ்வாறான கடத்தல்கள் ஜே.ஆர்.பிரேமதாஸவின் ஆட்சியிலும் இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து கொலைகளும் மகிந்தவினால் மேற்கொள்ளப்படவில்லை. மகிந்த ஆட்சியில் வெள்ளை வான் கலாசாரம் காணப்பட்டது. எனினும் நல்ல மனிதன் ஒருவரை இந்த நாட்டில் நான் கண்டதில்லை. அத்துடன் நாட்டிற்கு சேவை செயத ஒருவரும்அந்த வெள்ளை வானில் கடத்தி செல்லப்பட்டு கொலை செய்யப்படவில்லை.

வெள்ளை வானில்பாதாள உலகத்தினர் கடத்தப்பட்டனர், தீவிரவாதிகள் கடத்தப்பட்டனர், அந்த காலகட்டத்தில் இருந்த பிரதான பிரச்சினைகளை தீர்த்து கொள்வதற்கு தடையாக இருந்தவர்கள் மாத்திரமே கடத்தி செல்லப்பட்டுள்ளனர்.

வெள்ளை வானில் கடத்தி செல்லப்பட்டவர்கள் மறைக்கப்பட்டார்களா? இல்லை என்றால் கொலை செய்யப்பட்டார்களா? என்பது எனக்கு தெரியாது. எனினும் கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல விடயங்களுக்கு 2015ஆம் ஆண்டும் ஜனவரி மாதம் 08ஆம் திகதி விடை கிடைத்தது.

எனினும் இதன் மூலமாக எதிர்பார்த்தளவுக்கு நல்லாட்சியினுள் மக்களுக்கு கிடைக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மோசடிகள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் ஆயிரத்து 400 இற்கும் அதிகமான முறைப்பாடுகள்

பல்வேறு விடயங்கள் தொடர்பில் 1400 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் பாரிய ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்குக் கிடைத்துள்ளன.

கடந்த நவம்பர் மாத இறுதியில் சுமார் 900 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததாக ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்தார்.

பாரிய ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் பொதுமக்கள் இன்னும் தெளிவு பெறவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் மார்ச் மாதத்துடன் ஆணைக்குழுவின் கால எல்லை நிறைவடைவதாகவும் லெசில் டி சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

## மைத்திரியையும் மகிந்தவையும் இணைப்பதற்கு மீண்டும் முயற்சி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை இணைக்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள்சிலர் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்வரும் உள்ளுராட்சி மன்ற தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை பலமுள்ள கூட்டமைப்பாக தயார்படுத்தவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, பாராளுமன்றத்தில் தனியாக இயங்கி வரும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற பொது தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை பாடமாக கொண்டு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக குறித்த தரப்பினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கல்பிட்டி பிரதேசசபை உறுப்பினர் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல்

கல்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கல்பிட்டி பிரதேச சபையிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் உறுப்பினரின் வீட்டின் மீதே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதிகாலை 12.15 மணியளவில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது குறித்த பிரதேச சபை உறுப்பினரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் வீட்டுக்குள் இருந்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குறித்த குண்டு வீட்டின் முன்வாசலில் வெடித்துள்ளது. இதனால் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. இது தொடர்பில் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லையெனவும்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(இ-7)

## முதலாம் வகுப்பிற்கு வாய்ப்பின்றி 2ஆயிரம் மாணவர்கள் வீடுகளில்

முதலாம் வகுப்பிற்கு அனுமதி கிடைக்காத 2000இற்கும அதிகமான மாணவர்கள், வீடுகளில் இருப்பதாக இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின பொதுச்செயலாளர், ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதலாம் வகுப்புக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான தேசிய நிகழ்வு கடந்த 14ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இடம்பெற்று நிறைவடைந்துள்ள நிலையில் இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவ்வாறு 2000 மாணவர்களுக்கு முதலாம் தரத்திற்கான அனுமதி கிடைக்கவில்லை என கூறும் குற்றச்சாட்டை கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்கும் தேசிய பாடசாலைகளில் வாய்ப்பு கிடைக்காத போதும் தமது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள சிறந்த பாடசாலைகளில் அனுமதி பெற்றுக் கொடுப்பது தமது கடமையென கல்வி அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

17.01.2016

(தை 03, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு

அட்டமி மாலை 5.39 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 1.35 மணிவரை

சுபநேரம் 9.35-11.05 மணிவரை

இராகுகாலம் 5.05-6.35 மணிவரை

அட்டமி-நவமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அத்தம், சித்திரை | | |
| சூரி | | | ராகு |
| புத | சனி<br>சுக் | செவ் | குரு |

**மீனம்:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், இறை வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**மேடம்:** கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள்.

**இடபம்:** பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்வீர்கள், சுபசெலவுகள் கூடும் நாள்.

**மிதுனம்:** எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும், மற்றவர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், குடும்ப பொறுப்புக்கள் கூடும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், போசன சுகமுண்டு, பிறரது ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்:** பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், ரோசபயமுண்டு, பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பேச்சில் இனிமை ஏற்படும், புதிய திட்டங்கள் கைகூடும்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம்,இலல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், கௌரவமான நாள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

# கூட்டு எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு அமைச்சர் பதவி கிடையாது!

## அரசாங்கம் திட்டவட்டம்

சிறிசேன-ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதற்கு கூட்டு எதிர்க்கட்சியின் 20ற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ள போதிலும் அவர்களிற்கு அமைச்சரவை பதவிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது என அரசாங்கம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

மேலும் 19ஆவது அரசமைப்பு மாற்றத்தின்கீழ் அமைச்சரவை பதவிகளை அதிகரிக்க முடியாது என்பதையும் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. தற்போது அரசாங்கத்துடன் இணையமுயற்சிக்கும் கூட்டு எதிர்க்கட்சியினரில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் 19ஆவது திருத்தத்தின்கீழ் அமைச்சர்களின் எண்ணிக்கையை 53 ஆக அதிகரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை எதிர்த்தவர்கள் என்பதை பிரதமரும் ஜனாதிபதியும் அவர்களிற்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரதியமைச்சர் பதவிகளில் மாத்திரம் சில வெற்றிடங்கள் காணப்படுகின்றன, கூட்டு எதிர்கட்சியைசேர்ந்தவர்கள் எவராவது அரசாங்கத்திற்கு ஆதரவளித்தால் அவர்களி ற்கு அந்த பதவிகளை வழங்குவது குறித்து ஆராயலாம் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ராஜபக்ஷ அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவிவகித்த கூட்டு எதிர்க்கட்சியின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாக வும், பிரதியமைச் சர் பதவிகள் போன் றவற்றை ஏற் றுக்கொண்டு அரசாங்கத்துடன் இணைய தயார் என தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் ஜனாதி பதியும் பிரதமரும் இது குறித்த இறுதி முடிவை எடுக்கவில்லை எனவும் அரசியல் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (எ-11)


## விசா விண்ணப்பித்தல்

2003ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்க Green Card விசா விண்ணப்பிப்பதில் அனுபவமிக்க எமது நிறுவனத்தில், UK, Canada, USA, உற்பட ஐரோப்பிய நாடுகளின் விசா விண்ணப்பப்படிவங்களை எமது நிறுவனத்தின் நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்று மிகச்சரியாக பூர்த்தி செய்துகொள்ளலாம்.

எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையின் எந்த ஒரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம். (c-3459)

**BRISTOL CYBER CAFE**
No, 8/3/4, Bristol Street, Colombo 01.
Tel:0112 393919 / 0774276579
www.bristolcc.biz Reg:W/A 44843


## பொலிஸ் நாட்குறிப்பில் மகிந்தவின் புகைப்படம் விசாரணைக்கு பணிப்பு

பொலிஸ் பரிசோதகர்கள் சங்கம் வெளியிட்டுள்ள 2016ஆம் ஆண்டுக்கான நாட்குறிப்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பின்னணி புகைப்படத்துடன் கூடிய பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோனின் பழைய புகைப்படம் பிரசுரிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பொலிஸ் தலைமையகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. பொலிஸ் பரிசோதகர்கள் சங்கம் வெளியிட்டுள்ள நாட்குறிப்பை அச்சிடும்போது பொலிஸ்மா அதிபரின் புகைப்படம் தாமதமாகின்ற காரணத்தால் பழைய புகைப்படமொன்றை அச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதால் இந்த சிக்கல் ஏற்பட்டுள்ளது.

குறித்த நாட்குறிப்பு அச்சிடப்பட்ட பின்னர் பொலிஸ்மா அதிபர் அமர்ந்திருக்கும் ஆசனத்துக்கு பின்னால் முன்னாள் ஜனாதிபதியின் புகைப்படம் காணப்படுவதால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக தோழர்
ந.சிவகுமார்
(விற்பனையாளர்)
நல்லூர் ப.நோ.கூ சங்கம்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
**நவரத்தினம் சிவமணி**
15.01.2016 வெள்ளிக்கிழமையன்று காலமானார். அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம் (3310)

கூட்டுறவு, ஊழியர் தொழிற்சங்கம்
கிளை நல்லூர் ப.நோ.கூ.சங்கம்





## பழுதுபார்த்தல்

அனைத்து விதமான தையல் மிசின்களும் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

சூரி:-0770258694 (3318)

## காணி விற்பனைக்கு

A9 வீதி நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் கோவில் பாதை ஆரம்பத்தில் 27 பரப்பு காணியும், உடைந்த வீடு கிணற்றுடனும் 7 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்களுக்கு:-0778730129 (3316)

## வான் வாடகைக்கு

யாழ்-கொழும்பு,
கொழும்பு-யாழ்
உள்ளூர் சேவைகள் மற்றும்
வெளிமாவட்டங்களுக்கும்
சென்று வர சாரதியுடன்
வான் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0778273992
0756991492
0779064755 (3311)




## க.பொ.த (உ/த) பரீட்சை வடக்குக்கு முதலிடம்

2015ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில், அகில இலங்கை அளவில் வட மாகாணமும், யாழ்ப்பாண மாவட்டமும் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளன. பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சிறந்த அதிகளவு மாணவர்கள் சித்தியடைந்த மாகாணமாக வட மாகாணமும், சிறந்த மாவட்டமாக யாழ்ப்பாண மாவட்டமும் சாதனை படைத்துள்ளன.

பரீட்சை திணைக்களத்தின் ஆய்வுகளின் அடிப்படையில் வட மாகாணத்தில் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களின் வீதம் 65.23 ஆகும். பரீட்சை திணைக்களத்தின் ஆய்வுகளின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களின் வீதம் 66.32 ஆகும். மாகாண மட்டத்தில் சப்ரகமுவ, மேல், ஊவா மற்றும் தென் மாகாணங்கள் முறையே 2-ம், 3-ம், 4-ம் மற்றும் 5-ம் இடங்களைப் பெற்றுக்கொண்டுள்ளன. மாவட்ட மட்டத்தில் இரத்தினபுரி, மன்னார், மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் 2-ம், 3-ம், 4-ம் மற்றும் 5-ம் இடங்களைப் பெற்றுக்கொண்டுள்ளன. கடந்த 2014-ம் ஆண்டில் சிறந்த மாகாணமாக சப்ரகமுவ மாகாணமும், சிறந்த மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டமும் பதிவாகியிருந்தன. (எ-11)


## ☆☆☆ Hotel Lux Etoiles

**நற்செய்தி**

எமது விடுதி 2016 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நமது சகல வாடிக்கையாளர்களுக்கும் தங்களுக்கு விரும்பிய பானங்களை தாங்களாகவே எடுத்து வந்து நமது விடுதியின் விசேட பக்க உணவையோ, பிரதான உணவையோ நம்மிடம் பெற்றுச் சுவைக்கலாம். வெளியில் இருந்து கொண்டு வரப்படும் ஒவ்வொரு பானங்களுக்கும் இடவசதி, பானம் அருந்தும் கோப்பை வசதி வழங்குவதால் அப்பானங்களின் குறிப்பிட்ட விகிதாசார விலை அறவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்துடன் வெளியில் இருந்து கொண்டு வரப்படும் எந்தவொரு உணவும் சுகாதாரப் பாதுகாப்பை முன்னிட்டு உள்ளே அனுமதிக்கப்பட மாட்டாது.

குறிப்பு:

சொந்தப் பானம் கொண்டு வருபவர்கள் முற்பகல் **11** மணியிலிருந்து பிற்பகல் **2** மணிக்குள் உட்பிரவேசிக்கவும். பிற்பகல் **5.30** மணியிலிருந்து **8.30** மணிக்குள் உட்பிரவேசிக்கவும். (C-3462)

மேல் விபரங்களுக்கு:
**Hotel Lux Etoiles**
No.34, Chetty Street Lane, Nallur, Jaffna.
Tel:021 222 3966, 072 222 3966, Fax:021 222 0606
Email:Reserve.luxetoils@yahoo.com
www.luxetoiles.com Facebook:luxetoiles pool bar
Youtube:Best Hotel Jaffna Hotel in Jaffna

## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**
திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப 9.00 - பி.ப 1.00 வரை
சனி, ஞாயிறு தினங்களில் மு.ப 9.00 - பி.ப 5.00 வரை
**104, 4**ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
* மதசார்பற்றது * ரகசியம் பேணப்படும்
(சி-3460)

## காணி விற்பனை

ஆறுகால்மடம் மானிப்பாய் வீதியில் உள்ள தென்னம் தோட்டக் காணி உடன் விற்பனைக்குண்டு. (ஆறுகால்மடம், பஸ் நிலையத்திற்கு முன்பாக) (3314)

தொடர்புகளுக்கு:கருணாகரன் 0769057577


## 19 ஆயிரம் சி.டிகளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது

ரத்னப்பிட்டிய-பொரலஸ்கமுவ பிரதேசத்தில் 19,000 போலி இறுவட்டுக்களுடன் நபர ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிரிஹான குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டிற்கு அமையவே இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டதாகவும் இதற்காக நுகேகொட நீதவான் நீதிமன்றிடம் பிடி யாணைக்கான அனுமதி பெறப்பட்டதன் பின்னரே இந்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சந்தேகநபரிடமிருந்து அதிகமாக சிங்கள திரைப்படங்களே கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)


சரவணா ரெக்ஸ் நல்லூர்
(வேறு கிளைகளி இல்லை)
Saravana Tex
"உங்கள் இனிமையான தருணங்களை அலங்கரித்திடும் வண்ணமயமான பட்டுசேலைகள்"
* திருமண பட்டு சாறிகள்
* கொட்டன் சாறிகள்
* பன்சி சாறிகள்
* ரெடிமேற் சல்வார்கள்
மிக கவர்ச்சியான மலிவு விலையில்
"தரம் மலிவு இரண்டும் ஒரே இடத்தில்"
சரவணா ரெக்ஸ்
இல.526, 529 பருத்தித்துறை வீதி,
நல்லூர், (சிவன் கோயில் அருகில் )
(வேறு கிளைகள் இல்லை)
(C-3400)





## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துதல்

18.01.2016 திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையினை மாநகர சபை மேற்கொள்ளவுள்ளது. கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டு மாநகர சபை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தண்டம் அறவிடப்படுவதோடு ஏழு நாட்களுக்கு மேல் உரிமை கோரப்படாத கால்நடைகளை ஏலத்தில் விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே உரிமையாளர்கள் தங்களது கால்நடைகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆணையாளர்
யாழ் மாநகர சபை
(C-3456)

CIMA
Chartered Institute of Management Accountants

# WISDOM JAFFNA
THE PLACE FOR CIMA

உங்களது
உயர் கல்வி...
உயர்ந்த நோக்குடன்...
உங்களை நாடி...

## Create Your Own Success Story...

Strategic Level
Management Level
Operational Level
Certificate Level

Commencement Dates:
18th January 2016
(Weekday Batch)
REGISTRATIONS NOW ON..!

## After O/Level or A/Level Start CIMA Certificate Level @ Wisdom...

Fast Track your Future to become a Chartered Global Management Accountant (CGMA)
with the new generation professional business qualification, CIMA and a BSc Degree...

Call us to guide you better
**076 777 0747**
www.wisdombusiness.com

## Fast Track your Future to become a Chartered Global Management Accountant (CGMA)
with the new generation professional business qualification, CIMA and a BSc Degree...

**For students after O/Level Exam**

2016 → 2018

Mid January → February → March → April → Mid May
Weekday Classes - 4 Months
(Optional Weekend Classes - 6 Months From March to August)

A/Level 2 Years
Operational Level 6 Months → Management Level 6 Months → Strategic Level 6 Months
Weekend Classes

**For students after A/Level Results**

2016 → 2017 → 2018

Mid January → February → March → April → Mid May
Weekday Classes - 4 Months
(Optional Weekend Classes - 6 Months From March to August)

June '16 - November '16: Operational Level 6 Months (Weekday or Weekend Classes)
December '16 - May '17: Management Level 6 Months (Weekend Classes)
June '17 - November '17: Strategic Level 6 Months (Weekend Classes)

BSc Accounting Degree from ROBERT GORDON UNIVERSITY ABERDEEN

CIMA + Degree in 2 Years

## Introduce your friends for CIMA Certificate Level and get REWARDED

1 Friend – 5% discount on the course fees
2 Friend – 10% discount on the course fees
3 Friend – 20% discount on the course fees
4 Friend – 30% discount on the course fees
5 Friend – 50% discount on the course fees

## உங்களுக்கான விசேட சலுகை..!

நீங்கள் 2015 ஆகஸ்ட்
க.பொ.த உயர்தரப் பரீட்சை முடித்தவராயின்

3A சித்திகள் கொண்டிருப்பின்
கற்கை கட்டணத்தில்
25%
கழிவு வழங்கப்படும்

அகில இலங்கை மட்டம் 100 ற்குள்
கற்கை கட்டணத்தில்
50%
கழிவு வழங்கப்படும்

நீங்கள் 2015 டிசம்பர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை முடித்தவராயின் கற்கைக் கட்டணத்தில் 25% கழிவு வழங்கப்படும்
இச்சலுகை 2016 ஜனவரி 18 ஆம் திகதி வரை மட்டுமே!

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

(C-3395)

Wisdom Business Academy - Jaffna
The Specialist in CIMA Education
154A/1, Navalar Road, Jaffna.
E : Jaffna@wisdombusiness.com
021 222 07 27
021 720 0777
ROBERT GORDON UNIVERSITY ABERDEEN
CIMA Chartered Institute of Management Accountants

# யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கு அனுமதிமறுத்த பாதுகாப்புத்தரப்பினர்

உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் யாழ்ப்பாணத்து ஊடகங்களை அனுமதிப்பதில் கடும் தயக்கம் காட்டியதோடு தென்னிலங்கை ஊடகங்களை உள்ளே அனுமதித்து விட்டு யாழ்.ஊடகங்களை உள்ளே அனுமதிக்க முடியாது என இராணுவம் மற்றும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு கூறியதால் ஊடகவியலாளர்களுக்கும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவிற்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் பலாலியில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் நிகழ்விற்கு யாழ்.ஊடகவியலாளர்களும் பிரதமர் அலுவலகத்தினால் அழைக்கப்பட்டிருந்தனர். இதன்படி நேற்று முன்தினம் காலை பலாலி உயர்பாதுகாப்பு வலய எல்லைக்கு சென்ற ஊடகவியலாளர்கள் உள்ளே செல்வதற்கு இராணுவத்திடம் அனுமதி கேட்டனர்.

எனினும் உள்ளே செல்வதற்கு யாழ்.ஊடகங்களுக்கு அனுமதி இல்லை எனவும் தென்னிலங்கை ஊடகங்கள் மற்றும் ஜனாதிபதி ஊடகங்களுக்கு மாத்திரமே அனுமதி உள்ளது எனவும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு கூறியது. இதனால் கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட யாழ். ஊடகவியலாளர்கள், அங்கிருந்து செல்ல இராணுவத்திற்கு மறுப்பு தெரிவித்தனர்.

இதனால் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவிற்கு ஒன்றும் செய்யமுடியாமல் போக, எட்டுப்பேரினை மாத்திரம் அதிலும் தகவல் திணைக்கள அடையாள அட்டை வைத்திருப்போரினை மாத்திரம் உள்ளே செல்ல அனுமதிப்பதாக கூறியது. எனினும் இதற்கு மறுப்பு தெரிவித்த யாழ்.ஊடகவியலாளர்கள் அனைவரும் உள்ளே செல்ல அனுமதிக்க வேண்டும் என முரண்பட்டனர்.

பின்னர் உயர்மட்டத்துடன்தொடர்பு கொண்ட பாதுகாப்பு பிரிவு அனைவரும் செல்வதற்கு அனுமதியளித்தது. ஒருவாறு உள்ளே செல்ல, அங்கு தொலைபேசிகளை கொண்டு செல்ல முடியாது என பாதுகாப்பு தரப்பால் மீண்டும் ஊடகவியலாளர்களுக்கு தடை போடப்பட்டது.

அப்போதும் எமது உரிமைகளை எதற்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது என முரண்பட்ட ஊடகவியலாளர்கள், அனைவரும் நிகழ்வை புறக்கணிப்பதாக கூறி வெளியேறினர். இதனால் ஒன்றும் செய்ய முடியாத நிலைக்கு சென்ற பாதுகாப்பு பிரிவு மீண்டும் உயர் மட்டத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தொலைபேசி கொண்டு செல்வதற்கான அனுமதியை பெற்றுக்கொடுத்தது.

இந்நிலையில் 4 ஊடகவியலாளர்களது பெயர்கள் தமது பட்டியலில் இல்லை என அவர்களை திரும்ப வெளியேற்றினர். இறுதி வரை அவர்களுககான அனுமதி வழங்கப்படவிலலை. எனினும் வீரசிங்கம் மண்டபத்திற்குள் செல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாணத்து ஊடகவியலாளர்கள் சென்ற வாகனம் இந்நிலையில் அனுமதிக்கப்படாது. கடற்படை தமது பேருந்து ஒன்றிலேயே தமது கண்காணிப்பின் கீழே ஏற்றி சென்றனர். பின்னர் வரும் போது வீதியில் சுமார் அரைமணிநேரம் காக்க விட்ட இராணுவம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வு முடிவுறும் நிலையில்தான் அழைத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# அரசால் அனுப்பப்படும் கடிதங்கள் தற்போதும் சிங்கள மொழியில்தான்

## வடக்கு முதல்வர் குற்றச்சாட்டு; பிரதமர் ரணில் மறுப்பு

அரச திணைக்களங்களிற்கு மத்திய அரசால் அனுப்பப்படும் கடிதங்கள் சிங்கள மொழியில் தற்போதும் அனுப்பப்படுவதாக, வட க்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனகுற்றம்சாட்டிய தனை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதலமைச்சர் கூறியது தவறு என அவரது முன்னிலையிலேயே கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் நிகழ்வின் போது பிரதம விருந்தினராக பிரதமர் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோர் கலந்து கொணடிருந்தனர். முதலில் வடக்கு மாகாண முதலமைச்சர் பிரதமரை வைபவ ரீதியாக அழைத்து வந்திருந்தார்.

பின்னர் மேற்படி நிகழ்வில் முதலில் முதலமைச்சர் உரையாற்றினார் .அதன் போது அரச திணைக்களங்களுக்கு மத்திய அரசால் அனுப்பப்படும் கடிதங்கள் இப்போதும் சிங்கள மொழியிலேயே அனுப்பப்படுவதாக குற்றஞ்சாட்டினார். இருப்பினும் முதலமைச்சர் அவ்வாறு கூறியது தவறு என சுட்டிக் காட்டியிருந்தார். ஆரம்பத்தில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கதைத்து கொண்டிருந்த முதலமைச்சர் மற்றும் பிரதமர் ஆகியோர், பிரதமர இவ்வாறு முதலமைச்சர் கூறியதனை தவறு என்றதும், தமக்கிடையே கதைத்து கொள்வதனை இருவரும் நிறுத்தி கொண்டனர். (இ-4)

# வட மாகாண அமைச்சரவையில் மாற்றம் கொண்டு வர வேண்டும்

## முதலமைச்சரிடம் உறுப்பினர்கள் கோர முடிபு

வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களிற்கிடையில் இன்று நடைபெறவுள்ள சந்திப்பின் போது வடக்கு மாகாண அமைச்சர்கள் சிலரை மாற்றிய மைக்குமாறு உறுப்பினர்களால் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்களுக்கு இந்நிலை ஏற்படலாம் என கருதப்படுகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று இன்று முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இச்சந்திப்பு முதலமைச்சர் மீது அதிருப்தி கொண்ட சில மாகாண சபை உறுப்பினர்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளன. எனினும் முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களிற்கிடையிலான உறவை மேம்படுத்தும் வகையில் அனைத்து ஆளுங்கட்சி உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்களின் நான்கில் சில அமைச்சர்களை மாற்றுமாறு உறுப்பினர்களால் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது. வினைத்திறன் அற்ற செயற்பாடுகள், உறுப்பினர்களுடன் கலந்துரையாடாமை போன்ற காரணங்களாலேயே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளதாக ஆளும் தரப்பு உறுப்பினர் ஒருவர் வலம்புரியிடம் கூறினார்.

கடந்த இருவருடங்களின் போது வினைத்திறன் அற்ற நிலையில் செயற்பட்டு வரும் மாகாண சபையின் அமைச்சர்கள் சிலர் உறுப்பினர்களோடு கலந்தாலோசிக்காமல் செயற்படுவதாகவும், வடக்கு மாகாண சபையின் பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியினை முழுமையாக செலவழிக்கவில்லை எனவும் மேற்படி அமைச்சுக்கள் மீது உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சில உறுப்பினர்கள் நான்கு அமைச்சுக்களின் அமைச்சர்களையும் மாற்றி அமைக்குமாறும் கோரிக்கை முன்வைக்கவுள்ளதாகவும், அந்தந்த அமைச்சுக்களுக்கான மாறறு பெயர்களையும் முதலமைச்சரிடம் பரிந்துரை செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-4)




# மாணவர்களுக்கு அன்பளிப்பு



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மற்றும் இராமநாதன் கல்லூரி மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரிக்கு 10 புதிய வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்பட்டன. இவ் வெற்றிக் கிண்ணங்கள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் தலைமை செயலகத்தில் வைத்து கல்லூரி பிரதி அதிபர் இந்திரா தவநாயகத்திடம் வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கத் தின் தலைவர். கு.பகீரதனால அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (இ-15)

# பொங்கல் விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொங்கல் தின விழா நிகழ்வுகள் பிரதான மண்டபத்தில் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதமவிருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்லுவல்கள், விளையாட்டுத்துறைமற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். இந்து ஆரம்பபாடசாலை ஓய்வுநிலை அதிபர் மு.திருஞானசம்பந்தபிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# எம்.ஜி.ஆரின் பிறந்தநாள் நிகழ்வுகள் கல்வியங்காட்டில்

எம்.ஜி.ஆர் இன் பிறந்ததினத்தை முன்னிட்டு யாழ்.எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கத்தினால் இன்றையதினம் பயனாளிகளுக்கு உடுபுடைவைகள் வழங்கிவைக்கப்படவுள்ளது.

இன்றையதினம் காலை 8 மணிக்கு கல்வியங்காட்டில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலையடியில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில் பிறந்ததின கொண்டாட்டத்தினை அடுத்து தெரிவுசெய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு உடுபுடைவைகள் வழங்கி வைக்கப்படவுள்ளது. (இ-9)

# அலங்கார உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை, மானிப்பாய் வீதி, அருள்மிகு ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதன் கிழமைதிருவூஞ்சல்நடைபெற்றுமஹேஸ்வரபூஜையும்நடைபெறும். (இ-7)

## வடக்கு மாகாணத்தின்

# முதலமைச்சர் ஆளும் கட்சி உறுப்பினர்களிடையே யாழ்ப்பாணத்தில் இன்று இரண்டாம் கட்ட சந்திப்பு

வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான இரண்டாம் கட்ட சந்திப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இதன் போது முதலமைச்சர் முக்கிய அறிவிப்பொன்றை வெளியிடுவார் என நம்பப்படுகின்றது.

முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களுக்கிடையிலான உறவை மேம்படுத்தும் வகையில் இந்த வருடத்திலிருந்து ஒவ்வொரு மாதத்தின் முதலாவது வெள்ளிக்கிழமைகளில் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் முனெனடுக்கப்பட்டுள்ளன.


இதன் முதற்கட்டமாக இம்மாதத்தின் முதலாவது வெள்ளிக்கிழமையின் போது உறுப்பினர் ஆனல்டின் ஏற்பாட்டில் சந்திப்பொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இச் சந்திப்பு அதிருப்தியாளர்கள் சந்திப்பு என்றே ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. எனினும் வடக்கு மாகாண முதலமைச்சர் இதில் அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.


எனினும் அன்றைய தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஒருவருட பதவியேற்பு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காக தாம் கொழும்பு செல்லவுள்ளதாக முதலமைச்சரின் கவனத்திற்கு சில உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்டது. இதனை அடுத்து முதலமைச்சருடனான சந்திப்பின் காலம் மாற்றம் செய்யப்பட்டு 11 ஆம் திகதி சந்திப்பு பிற்போடப்பட்டு அன்றைய தினம் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது வடக்கு மாகாண முதலமைச்சர் மீது சில உறுப்பினர்கள் பல விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையை சீர்குலைப்பதாகவும் முதலமைச்சர் மீது சில உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டி, அனைவரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பாக செயற்பட வேண்டும் எனவும் வினைத்திறன்மிக்க மாகாண சபை நிர்வாகத்தை வடக்கு மாகாண சபை மேற்கொள்ள் வேண்டும் எனவும் தமிழர் தீர்வு திட்டத்தில் அனைவரும் ஓரணியில் நின்று செயற்படல் வேண்டும் எனவும் சில உறுப்பினர்கள் கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் சில உறுப்பினர்கள் இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைத்தமையால், இது தொடர்பான மேலதிக விடயங்கள் அன்றைய தினம் கலந்துரையாடுவது நிறுத்தப்பட்டது.


இதன் போது “இங்கே முக்கியமான பல விடயங்கள் பேசப்பட்டிருக்கின்றன, அவை குறித்து நான் குறிப்புகளை எடுத்திருக்கின்றேன். இந்நிகழ்வின் ஆரம்பத்தில் நான் முன்வைத்த ஒரு சில விடயங்கள் மாகாணசபையின் செயற்பாடுகளில் காணப்படும் ஒரு சில குறைபாடுகளுக்கான தீர்வுகளாக இருக்கும். இன்னும் பல விடயங்கள் குறித்துப் பேசவேண்டியிருக்கின்றது. அத்தகைய விடயங்கள் குறித்து விரிவான ஒரு கலந்துரையாடலை எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடத்துவோம், அதன்போது மிக முக்கியமான தீர்மானங்களைப் பெறக்கூடியதாக இருக்கும் என்று முதலமைச்சர் பதிலளித்திருந்தார்.

இந்நிலையில் இன்றைய தினம் இரண்டாம் கட்ட சந்திப்பு முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டம் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அயூப் அஸ்மின் தலைமையில் அதிருப்தியாளர் கூட்டமாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. எனினும் இது அதிருப்தியாளர் கூட்டம் அல்ல, முதலமைச்சர் உறுப்பினர்கள் சந்திப்பு மட்டுமே என சில மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (இ-4)





வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரைப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை பட்டம் ஏற்றும் போட்டி இடம்பெற்றது. இதில் 40 இற்கும் மேற்பட்ட வடிவிலான பட்டங்கள் ஏற்றப்பட்டன. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உதய சூரியன் உல்லாசக் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புச் சுவரினை நாடா வெட்டித் திறந்து வைத்தார். இந் நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரன் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)




## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 ஆவது வீதியில் 3 ஆம் இலக்க தொடர்மாடி இணைந்த குளியலறையுடன் கூடிய 2 அறை வீடு நாள்/ கிழமை/ மாத வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 837 8597 (2989)



## தவறிவிட்டது

19, புலவனார் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் எனும் முகவரியினையுடைய இரத்தினசிங்கம் செந்தூரன் (970691987V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் யாழ்.இந்துக் கல்லூரிக்கும் கல்வியங்காட்டிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-077 616 3980

# கண்ணீர் அஞ்சலிகள்

## சின்னத்துரை கோபாலுபிள்ளை



மண்ணில்
15
10
1934

விண்ணில்
13
01
2016

வேலணையூரின் மைந்தனாய் வந்து
சாதனைகள் பல படைத்தவரே சாரத்தீயமுடன் வாணிப மதிலும்
வல்லவனாய் திகழ்ந்தவரே நன்மக்களை நானிலத்தில் தந்து
நலன் பேணி உழைத்தவரே பெரு விருட்சமாகி கிளைபரப்பி
விழுதுகளாய் நாம் வாழ வைத்தவரே காலமெல்லாம் உடனிருந்து
எமை காத்திடுவாய் என்றிருந்தோமே
பொல்லாத காலனும் பொறுக்க முடியாமல்
நோய்வடிவில் வந்து கவர்ந்தானே
நெஞ்சமதில் வஞ்சமற குடிபுகுந்த உந்தன் ஆத்ம சாந்திக்காய்
அஞ்சலிக்கின்றோம்.

17.01.2016 இன்று ஞாயிற்றுக்கிழமை
இல.15, சங்கிலியன் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில்
முற்பகல் 10 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்
கிரியைக்காக சாட்டி இந்து
மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்
நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உன் பிரிவால் துயருறும்
கீர்த்தனா ஸ்ரோர்ஸ்
உரிமையாளரும் குடும்பத்தினரும்
077 335 3644

இல. 20, இராமலிங்கம் வீதி;
திருநெல்வேலி கிழக்கு

(3303)

மூன்று மாவட்டங்களை மையப்படுத்தி

# சுற்றுலா கப்பல் சேவைத்திட்டம்

சுற்றுலா கப்பல் சேவை யொன்றை ஆரம்பிப்பது குறித்து இலங்கை கப்பல் கூட டுத்தாபனம் கவனம் செலுத்தியுள்ளது.

கொழும்பு. காலி மற்றும் திருகோண மலை பிரதேசங்களை மையமாகக்கொண்டு சுற்றுலா கப்பல் சேவையை ஆரம்பி கக நடவடிக்கை எடுத் துள்ளதாக இல ங்கை கப்பல் கூட்டுத் தாபனத்தின் தலை வர் சஷி தனதுங்க நேற்று கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வுஒன் றில் தெரி வித்தார்.

குறிபாக, கொழும்பு நகரை பிரதான மைய மாகக் கருதி இந்த சேவையை ஆரம் பிக் கவுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

காலி மாவட்டத்தி ற்கும் அதற்கேற்ற கேந்திர முக்கியத் துவத்தை வழங்குவ துடன, திருகோண மலை துறை முகத் தையும் கட்டியெழு ப்புவதற்கு நடவடி க்கை எடுக்கப்படவு ள்ளது என இல ங்கை கப்பல் கூட்டுத் தாபனத்தின் தலை வர் மேலும் தெரிவி த்தார். (இ-7)

## அறிவித்தல்
## மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை

வழ.இல: மணநீக்கம் /921

விமல்சன் பெண் நஜிந்தினி,
(கதிர்காமத்தம்பி மகள் நஜிந்தினி,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி
– வழக்காளி

எதிர்

தளயசிங்கம் விமல்சன்,
காந்திஜி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
எதிராளி

(2937)

மேற்குறித்த எதிராளியாகிய உமக்கு மேலே பெயர் குறித்துள்ள வழக்காளி சார்பாக சட்டத்தரணி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எதிர்வரும் 26.01.2016ஆம் திகதி தவணையிடப்பட்டுள்ளது. அதற்கு எதிராக ஏதாவது ஆட்சேபனை இருப்பின் 26.01.2016 ஆம் திகதி காலை 9.00 மணியளவிலோ அல்லது அதற்கு முன்பாக இந் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதுடன் குறித்த திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் ஆட்சேபனை சமர்ப்பிக்கத் தவறின் இவ் வழக்கானது மறு கட்சிக்காரர் இன்றி ஒருமுகமாக விளங்கி தீர்ப்பளிக்கப்படும் என்றும் உமக்கு இத்தால் மேலும் அறிவிக்கப்படுகிறது. அத்துடன் பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீவிர் இந் நீதிமன்றத்தில் தோன்றாவிடின் உமக்கு சட்டமுறையான சகல அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படுவதற்கான முகவரியை கூறும் விபரக் குறிப்பொன்றை இந் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுகிறீர்.

பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.

## அறிவித்தல்
## மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை

வழ.இல: மணநீக்கம்/1099/2015

சுஜீவன் பெண் இராஜரூபினி
(இராசதுரை மகள் இராஜரூபினி)
வராத்துப்பளை,
பருத்தித்துறை.
– வழக்காளி

எதிர்

ஜீவானந்தன் சுஜீவன்,
137/1 ,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
எதிராளி

(2945)

மேற்குறித்த எதிராளியாகிய உமக்கு மேலே பெயர் குறித்துள்ள வழக்காளி சார்பாக சட்டத்தரணி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எதிர்வரும் 26.01.2016ஆம் திகதி தவணையிடப்பட்டுள்ளது. அதற்கு எதிராக ஏதாவது ஆட்சேபனை இருப்பின் 26.01.2016 ஆம் திகதி காலை 9.00 மணியளவிலோ அல்லது அதற்கு முன்பாக இந் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதுடன் குறித்த திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் ஆட்சேபனை சமர்ப்பிக்கத் தவறின் இவ் வழக்கானது மறு கட்சிக்காரர் இன்றி ஒருமுகமாக விளங்கி தீர்ப்பளிக்கப்படும் என்றும் உமக்கு இத்தால் மேலும் அறிவிக்கப்படுகிறது. அத்துடன் பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீவிர் இந் நீதிமன்றத்தில் தோன்றாவிடின் உமக்கு சட்டமுறையான சகல அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படுவதற்கான முகவரியை கூறும் விபரக் குறிப்பொன்றை இந் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுகிறீர்.

பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.


Study & Work in
Singapore

Hotel Management, Business Management etc.
- அடிப்படை தகைமை O/L மட்டும்
- பாடநெறிக் கட்டணம் தவணை முறையில்
- No Need Bank Balance
- விசாவின் பின் பணம் செலுத்தும் வசதி
- Transfer Option to USA, Australia, New Zealand

STUDY, WORK & SETTLE IN
CANADA
விசாவின் பின் பணம் செலுத்தும் வசதி

USA, UK, AUSTRALIA
NEW ZEALAND
STUDENT & VISIT VISA

ONLINE VISA FORM FILLINGS
USA, CANADA, UK, EUROPE,
MALAYSIA, AUSTRALIA, INDIA
சிறந்த முறையில் செய்து தரப்படும்.

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk

FLEX Graphic

# மகிந்த, அரசுக்கு சவால் அல்ல

## நிதியமைச்சர் ரவி தெரிவிப்பு

**மஹிந்த அணி புதிய கட்சி அமைத்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதென்பது அரசாங்கத்திற்கு ஒரு சவால் அல்ல. நாட்டு மக்கள் இன்று அச்சமின்றி சுதந்திரமாக வாழ்கின்றனர். எனவே அச்சுதந்திரத்தை மீள இழப்பதற்கு மக்கள் தயாராக மாட்டார்கள் என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தைப் பொங்கல் திருநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் ரவி கருணாநாயக மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புதிய கட்சியொன்றை அமைத்துப் போட்டியிட போவதாக தெரிவித்துள்ளனர். இது அரசுக்கு ஒரு சவால் அல்ல.

மீண்டும் நாட்டை ஊழல் மோசடிகள் நிறைந்த யுகமாக மாற்றுவதற்கு இடமளிக்கமாட்டோம். இம்முறை தைப்பொங்கல் திருநாள் நாட்டில் அனைத்து மக்களும் உண்மையான இலங்கையர்கள் என்ற எண்ணத்துடன் வாழும் நிலையிலேயே கொண்டாடப்படுகின்றது. இதற்கான ஜனநாயகத்தை நாம் வெற்றி கொண்டோம். அந்த ஜனநாயகம் இன்று பாதுகாக்கப்படுகின்றது.

நாட்டில் அனைத்து மக்களும் இன்று இலங்கையர்களாக வாழும அடித்தளம் போடப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் மக்களின் சட்டைப் பைகளில் இருந்தவைகள் கொள்ளையடிக்கப்பட்டன. எனவே இவ்வாறானவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு மக்கள் தயாராக இல்லை.

ஜனாதிபதியும், பிரதமரும் நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுப்பதற்கான பயணத்தை ஆரம்பித்துள்ளனர். நாட்டை அழித்து ஒருவருக்கொருவர் மோதலில் ஈடுபடும் யுகத்திற்கு இன்று முடிவு கட்டடப்பட்டுள்ளது. மக்கள் இன்று அச்சமின்றி சுதந்திரமாக வாழ்கின்றனர்.

எனவே, மீண்டும் இவ்வாறான யுகத்தையும், வெள்ளை வேன் கலாசாரத்தையும் ஏற்படுத்த மக்கள் முயற்சிக்க மாட்டார்கள். இதனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது கூட்டணியும் எந்தக் கட்சியில் தேர்தலில்களமிறங்கினாலும் தோல்வி நிச்சயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சு.க.எடுத்த தீர்மானம் மிகவும் நியாயமானது

### கம்மன்பில கூறுகிறார்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் வேறு கட்சியொன்றில் போட்டியிட எடுத்துள்ள தீர்மானம் மிகவும் நியாயமானது என தூய ஹெல உறுமயவின் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தோல்வியடைவதாகவும், மகிந்தவுக்கு பிரதமர் பதவி வழங்குவதில்லையெனவும் அறிவித்ததன் மூலம், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவைப் பெற்றுக் கொடுத்த மைத்திரிபால சிறிசேன வின் தலைமைத்துவத்தை நம்ப முடியாது என ஸ்ரீ.ல.சு.க. உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் விளககியுள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடு குறித்து மக்களின் எதிர்ப்பு அதிகரித்துள்ளது.

இதனால், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானால், அரசாங்க எதிர்ப்பு கட்சியொன்றில் மக்களிடம் வாக்குக் கேட்க வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அன்னம் கூட்டணிக்கு எதிராக கிடைத்த 58 இலட்சம் வாக்குகளும் இன்னும் அரசாங்கத்துக்கு எதிராக காணப்படுகின்றன.

62 இலட்சம் வாக்குகளை வழங்கி அரசாங்கம் அமைத்த மக்களில் பலர் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கத் தயாராகவுள்ளதாகவும் உதய கம்மன்பில மேலும் கூறியுள்ளார். (இ-7)

## சு.க. பிளவடைந்தால் ஐ.தே.கவுக்கு நன்மை

### ஜோன் செனவிரட்ன சுட்டிக்காட்டு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவடைந்தால் அதன் நன்மை ஐக்கிய தேசியக் கட்சிக்கே கிடைக்கும் என அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அரசியல் பிரதிநிதிகள் வேறு அரசியல் கூட்டமைப்பு அல்லது கட்சியொன்றின் ஊடாக தேர்தலில் போட்டியிட்டால் அதன் முழு நன்மையும் ஐக்கிய தேசியக் கட்சியையே சாரும். எனவே தூர நோக்குடன் சிந்திக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தனிக்கட்சி அமைப்பது, கூட்டணி அமைத்து பிளவடைந்து போட்டியிடுவது போன்றன குறித்து முயற்சிக்கக் கூடாது.

வேறு கட்சியில் அல்லது கூட்டணியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலவீனப்படுத்தும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கடசியின் உறுப்பினர்களும், கூட்டு எதிர்க் கட்சியின் உறுப்பினர்களும் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டும்.

அவ்வாறு போட்டியிடத் தவறினால் அதன் நன்மை ஐக்கிய தேசியக் கட்சியை நச்சயம் சென்றடையும் என அமைச்சர் ஜோன செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

மகந்த தரப்பினர் தனியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து சிங்கள ஊடகமொன்று கேள்வி எழுப்பிய போது பதலளித்த அமைச்சர் செனவிரட்ன இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)




- 1377 - பாப்பாண்டவர் பதினோராம் கிரெகரி தனது ஆட்சியை உரோமுக்கு மாற்றினார்.
- 1524 - இத்தாலிய நாடுகாண் பயணி ஜியோவன்னிடா வெரசானோ சீனாவுக்கான தனது பயணத்தை ஆரம்பித்தார்.
- 1595 - பிரான்சின் நான்காம் ஹென்றி ஸ்பெயின் மீது போரை அறிவித்தான்.
- 1648 - இங்கிலாந்தின் லோங் நாடாளுமன்றம் முதலாம் சார்ல்சுடனான தொடர்புகளை அறுத்தது. இதன் மூலம் இங்கிலாந்தின் உள்நாட்டுப் போர் இரண்டாம் கட்டத்தை அடைந்தது.
- 1773 - கப்டன் ஜேம்ஸ் குக் அண்டார்க்டிக் வட்டத்தை அடைந்த முதல் ஐரோப்பியன் ஆனான்.
- 1819 - சைமன் பொலிவார் கொலம்பியக் குடியரசை அறிவித்தார்.
- 1852 - ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்வால் போவர் குடியேற்றங்களை அங்கீகரித்தது.
- 1893 - ஹவாயில் அமெரிக்க கடற்படையின் தலையீட்டால் அரசி லிலியோகலானியின் அரசு கவிழ்க்கப்பட்டது.
- 1899 - பசுபிக் பெருங்கடல் பகுதியில் வேக் தீவை ஐக்கிய அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டது.
- 1917 - கன்னித் தீவுகளுக்காக ஐக்கிய அமெரிக்கா $25 மில்லியனை டென்மார்க்கிற்குக் கொடுத்தது.
- 1928 - லியோன் ட்ரொட்ஸ்கி மொஸ்கோவில் கைது செய்யப்பட்டார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் போலந்தின் வார்சா நகரைக் கைப்பற்றினர்.
- 1945 - சோவியத் படைகள் நெருங்கியதை அடுத்து அவுஷ்விட்ஸ் வதை முகாமிலிருந்து நாசிகள் வெளியேற ஆரம்பித்தனர்.
- 1946 - ஐ.நா பாதுகாப்பு அவை தனது முதலாவது கூட்டத்தை நடத்தியது.
- 1951 - சீன மற்றும் வடகொரியப் படையினர் சியோல் நகரைக் கைப்பற்றினர்.
- 1961 - கொங்கோ ஜனநாயகக் குடியரசின் பிரதமர் பாட்ரிஸ் லுமும்பா இராணுவப் புரட்சியின் பின் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1973 - பேர்டினண்ட் மார்க்கோஸ் பிலிப்பீன்சின் நிரந்தர ஜனாதிபதி ஆனார்.
- 1991 - வளைகுடாப் போர் ஆரம்பித்தது.

**பிறப்புகள்**

- 1706 - பெஞ்சமின் பிராங்கிளின், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர், எழுத்தாளர் (இ. 1790)
- 1911 - ஜோர்ஜ் ஸ்டிக்லர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1991)
- **1917 - எம். ஜி. இராமச்சந்திரன், தமிழ்நாட்டின் முதலமைச்சர் (இ. 1987)**
- 1942 - முகமது அலி, அமெரிக்கக் குத்துச் சண்டை வீரர்
- 1977 - என். சொக்கன், தமிழக எழுத்தாளர்
- 1982 - டுவேன் வேட், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புகள்**

- 1961 - பாட்ரிஸ் லுமும்பா, கொங்கோ ஜனநாயகக் குடியரசின் பிரதமர் (பி. 1925)
- 2002 - கமீலோ ஜோஸ் சேலா, நோபல் பரிசு பெற்ற ஸ்பானிய எழுத்தாளர் (பி. 1916)
- 2009 - கமில் சுவெலபில், செக் நாட்டுத் தமிழறிஞர் (பி. 1927)
- 2010 - ஜோதிபாசு, இந்தியா மேற்குவங்க மாநிலத்தில் நீண்டநாள் முதல்வராக இருந்தவர் (பி. 1914)


### எம்.ஜி.ஆர்



எம்.ஜி.ஆர் என்ற பெயரில் புகழ் பெற்ற, மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் ஜனவரி 17, 1917 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தமிழ்த் திரைப்பட நடிகராகவும் 1977 முதல் இறக்கும் வரை தமிழ்நாட்டின் தொடர்ந்து மூன்று முறை முதலமைச்சராகவும் இருந்தவர்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 | 120-140 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 60 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 250-300 | 300 | 360 | 600 | 300 |
| தக்காளி | 60 | 60 | 60 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 40 | 40 | 40 |
| கோவா | 140 | 120 | 80 | 140 | 140 | 100 |
| கரட் | 180 | 260 | 180 | 180-400 | 200 | 200 |
| பூசணி | 60 | 40 | 45 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | 60 | 60 | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 120-180 | 100 | 130 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70-90 | 65 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 150 | 160 | 150 | 150 | 240 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 100 | 160 | 170 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 70 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 150 | 150 | 150 | 150 | 160 | 200 |
| லீக்ஸ் | 120 | 100 | 90 | 100-160 | 160 | 120 |
| பீற்றூட் | 180 | 180 | — | — | 280 | — |
| கறிமிளகாய் | 300 | — | — | 300 | 400 | 300 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — | — |
| போஞ்சி | 180 | — | 180 | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 90 | — | 120 | — |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 35 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 60 | 120 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 180 | 120 | 100 | 160 | 160 | 100 |
| வெங்காயப்பூ | 200 | 160-200 | — | 200 | 240 | 150 |
| முள்ளங்கி | 50 | 60 | — | 60 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 15 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 50 | 40 | — | 80 | — |



வடக்கு மாகாண தைப்பொங்கல் விழா கிளி/விவேகானந்த வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் தலைமையில் மூவினத் தலைவர்களும் இணைந்து விழாவை சிறப்பித்ததைப் படங்களில் காணலாம். (படங்கள்:- கிளிநொச்சி செய்தியாளர்)

# பாதை சீரின்மையால் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகள் இடைநிறுத்தம்

## மாணவர்கள், பொதுமக்கள் அவதி

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவியிலிருந்து கொல்ல விழாங்குளம் அம்பாள்புறம் ஊடாக போக்குவரத்து சேவைகள் நிறுத்தப்பட்டதால் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மல்லாவியிலிருந்து அனைத்து இடங்களுக்குமான பேருந்து சேவைகள் இவ் வீதியூடாக இடம்பெற்று வந்த நிலையில் தற்போது பாதை சீரின்மையை காரணம் காட்டி அனைத்து பேருந்து சேவைகளும் வடகாடு ஊடாக செல்கின்றது இதனால் வன்னி விழாங்குளம் பாடசாலைக்கு செல்கின்ற 55 மாணவர்களும் மாங்குளம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு செல்லும் 15 மாணவர்களுமாக கிட்டத்தட்ட 70 இற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் அம்பாள்புறம் கொல்ல விளாங்குளம்



பிரதேசத்தை சேர்ந்த இந்த வழியில் வசிக்கின்ற கிட்டத்தட்ட 500 இற்கு மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த 1500 அங்கத்தவர்கள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது

அனைத்து பேருந்து வண்டிகளுமே இந்த வீதியூடாகவே போக்குவரத்து செய்து வந்ததாகவும் தற்போது ஒரு பேருந்து மட்டுமே இந்த வீதியூடாக போக்குவரத்திலீடுபட்டு வருவதாகவும் அந்த பேருந்துதும் 8.10 மணியளவில் தமது கிராமத்திற்கு வருவதாகவும் இதனால் மாங்குளம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு செல்லும் மாணவர்கள் பாடசாலையை சென்றடைய முதலாவது பாடம் முடிவடைந்து விடுவதாகவும் சில வேளைகளில் அந்த ஒரு பேருந்து சேவையும் நடைபெறுவதில்லை எனவும் பாடசாலை சென்று திரும்பிச் செல்ல தமக்கு போக்குவரத்து இடம்பெறுவதில்லை எனவும் தாம் நடந்து செல்வதாகவும் மாணவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர் தமக்கு ஒரு பாடசாலை சேவையை அல்லது உரியநேரத்திற்கு பாடசாலைக்கு செல்லக் கூடிய வகையில் ஒரு பேருந்து சேவையை வழுங்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை இப்பகுதியில் வாழ்கின்ற பொதுமக்கள் தமது தேவைகளுக்காக நகர்ப் பகுதிகளுக்கு செல்வதாயின் பலமைல் தூரம் நடந்து சென்று பேருந்து சேவையை பெற வேண்டியுள்ளதாகவும் வெளியிடங்களுக்கு சென்றால் திரும்பி வீடு செல்ல போக்குவரத்துசேவை இல்லையெனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து சீரான போக்குவரத்து சேவையை ஒழுங்கு செய்து பாடசாலை மாணவர்கள் பொது மக்களின் போக்குவரத்து பிரச்சினையை சீர் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்

# இணையத்தளம் அங்குரார்ப்பணம்

(உருத்திரபுரம்)

கிளிநொச்சியை தலைமையகமாகக் கொண்டு கல்விப் பணியிலும் சமூகப் பணியிலும் அறப் பணியிலும் பெரும் தொண்டாற்றி வரும் கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிலையம் தனது உத்தியோக பூர்வ இணையத்தளத்தை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்யவுள்ளது.

இவ் வைபவம் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால் பயனாளிகள், பல்கலைக்கழக உதவி பெறுவோர், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கல்விவளர்ச்சி அறக்கட்டளையினர் கேட்டுள்ளனர்.

இதற்கான இணையத்தள முகவரி www.kedt.lk ஆகும். (2-298)

# வாரம் ஒரு தகவல்

## தன்னம்பிக்கை

உங்களைச் சுற்றி ஊழிக்கால இருள் படர்ந்திருந்தாலும் பரவாயில்லை; உங்கள் உள்ளத்தில் மட்டும் நம்பிக்கையின் சிறு ஒளிக்கீற்றாக இரு ந்தால் போதும், நீங்கள் என்றாவது ஒருநாள் வெளிச்சத்திற்கு வந்தே தீருவீர்கள்.

சக்தி நிலையில் தன்னம்பிக்கையும்
முக்தி நிலையில் கடவுள் நம்பிக்கையும்
கை கொடுக்கும் என்கிற சின்ன சூட்சுமத்தைப் புரிந்து கொண்டால் குழப்பம் இல்லை ...சண்டையும் இல்லை?

தன்னம்பிக்கையை அழித்து வாழ்வில் முன்னேற முடியாத சார்பு மனோபாவத்தை கடவுள் நம்பிக்கை ஏற்படுத்துகிறது என்பது பகுத்தறிவுவாதிகளின் குற்றச்சாட்டு. தன்னம்பிக்கை மெல்ல மெல்ல அகங்காரமாகி இறைவனை அடைய முடியாத படி ஆன்மாவைத் தடை செய்கிறது என்பது ஆன்மீகவாதிகளின் அபிப்பிராயம். தன்னம்பிக்கை கூட ஒரு வகையான கடவுள் நம்பிக்கைதான் என்று புரிந்து கொண்டு உலகத்தை ஜெயிக்கலாம். என்னுள் இருக்கும் ஜீவசக்தி என்னை இயக்குகிறது.என் மனோசக்திதான் வெற்றி தருகிறது. ஜீவசக்தியும் மனோசக்தியும் பராசக்தியின் திரிபுகளே.எனவே தன்னம்பிக்கையின் ஒரு கோணம்.

முன் பின் தெரியாத நபரை, ஒரு குழந்தை பார்க்க நேர்ந்தால், அம்மா என்று உதட்டைப் பிதுக்கிக் கொண்டு தாயிடம் போய் ஒட்டிக் கொண்டு, அவள் முந்தானைக்குள் ஒளிந்து கொள்வது போல் பலர் பூஜை அறையில் சாமிப் படங்களுக்குப் பின்னால் பதுங்குகிறார்கள். இயந்திரங்களுக்குள் புதைந்து போகிறார்கள் அல்லது தகடுகள் தாயத்துகள் என்கிற தூக்கில் தொங்குகிறார்கள். கோயிலுக்குப் போவதும் சாமி கும்பிடுவதும் தவறில்லை. ஆனால் கோயில் மாற்றிக் கோயில்,சாமி மாற்றி சாமி,பூஜை மாற்றி பூஜை என்று ஒளிந்து கொள்பவர்கள், இறைவனை வேண்டும் போது பிரச்சினைகள் வராமல் காப்பாற்று என்று வேண்டாதீர்கள்.பிரச்சினைகளைச் சந்திக்கும் பலத்தையும் ஜெயிக்கும் அறிவையும் அடையாளம் காட்டும் படி வேண்டுங்கள்.

பெருவாரியான நமது பிரச்சினைகள் நமது கற்பனைகள்,கனவுகள்.உண்மையில் நமக்கும் அவற்றுக்கும் சம்பந்தமே இருக்காது.தேவையற்ற இடத்தில் தேவையற்ற முறையில் அந்தப்பிரச்சினைக்குள் நம்மை நுழைத்துக் கொண்டு நாமாகவே துன்பத்தை வரவழைத்துக் கொள்வோம். கொஞ்சம் விழித்துக் கொண்டால், விழிப்பு உணர்ச்சி இருந்தால் நிம்மதியாக இருக்கலாம்.

# தாஜுடீனின் தொலைபேசி கலந்துரையாடல் இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது

(கொழும்பு)

பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுடீனின் கொலையுடன் தொடர்புடைய பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இதனுடன் சம்பந்தப்பட்ட முன்னாள் அரசாங்கத்தின் உயர்பீட நபர் ஒருவருக்கும் இடையே சம்பவ தினத்தன்று தொலைபேசி கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இந்த தொலைபேசி கலந்துரையாடலுக்கான ஆதாரங்கள் தங்களிடம் இல்லை என்று தெரிவித்திருந்த தொலைபேசி சேவை வழங்கும் தனியார் நிறுவனம், தற்போது அதற்கான ஆதாரங்கள் அனைத்தையும் விசாரணை நடத்தும் பிரிவினரிடம் ஒப்படைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இந்த ஆதாரங்களை இரகசிய பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வசிம் தாஜுடீன் கடந்த 2012 ஆம் ஆண்டு கொழும்பு நாரஹேன்பிட்டியில் தீயில் கருகியிருந்த கார் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதுவொரு விபத்து என முன்னர் கூறப்பட்டிருந்த போதிலும், இது திட்டமிடப்பட்ட ஒரு கொலை என்று நீதிமன்றத்தில் தெரிவித்த இரகசிய பொலிஸார், பாதுகாப்பு கமெராக்களில் பதிவாகிய காணொலி ஆதாரங்களையும் சமர்ப்பித்திருந்தனர்.

இந்த காணொலிகளை வெளிநாட்டிற்கு எடுத்துச்சென்று, ஆய்வு நடத்துவதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இந்த நிலையிலேயே தற்போது தொலைபேசி கலந்துரையாடல் ஆதாரங்களும் இரகசிய பொலிஸாரிடம் சிக்கியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோசித ராஜபக்ஷ வசிம் தாஜுடீனின் படுகொலையுடன் தொடர்புபட்டிருப்பதாக குற்றச்சாட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



யாழ்.கரவெட்டி பிரதேச செயலக கிராமத்திற்குட்பட்ட கள உத்தியோகத்தர்கள் மற்றும் கரவெட்டி சுகாதார பணிமனை உத்தியோகத்தர்கள், பொலிஸ்உத்தியோகத்தர்கள், கரவெட்டி சுகாதார வைத்திய உத்தியோகத்தர்கள் இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து அல்வாய் தெற்கில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தில் அமையில் ஈடுபட்ட போது.. (படங்கள் கரணவாய் செய்தியாளர்)

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 08.01.2016-27.07.2017 வரை

**இரண்டில் ராகு வருகிறது! திரண்ட செல்வம் இனி சேரும்!**
**கட்டளையிட்டால் செய்யக் காத்திருக்கும் பல பேரைக்**
**கைக்குள் வைத்திருக்கம் கடக இராசி நேயர்களே!**




**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

உங்கள் ராசிநாதன் சந்திரன் வளரந்து தேயும் கிரகம். எனவே உங்களுக்கு வாழ்வில் வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வந்து கொண்டே இருகக்கும். 'மனதுகாரகன்' என்று சந்திரன் வர்ணிக்கப்படுகிறார். எனவே சிந்தனை ஆற்றலால் நீங்கள் சிறப்புகளைப் பெறுவீர்கள். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உடையவர்களாக விளங்குவீர்கள்.

சேவை மனப்பான்மை அதிகம் பெற்றவர்கள் நீங்கள். நினைத்ததை முடித்துக் காட்டுவதில் முதலிடம் பிடிப்பர்கள். உங்கள் வேகத்திற்கும், விவேகத்திற்கும் ஈடு இணை கிடையாது. நண்பர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பீர்கள். மாற்றுக் கருத்துடையோரை மறுநிமிடமே மாற்றியமைத்து விடும் ஆற்றல் பெற்றவர் நீங்கள். யாரை எப்படி அணுகினால் காரியம் சாதிக்கலாம் என்ற கலையைக் கற்று வைத்திருப்பீர்கள். ஏற்ற, இறக்கம் வாய்ந்த வாழ்க்கையைப் பெற்ற உங்களுக்கு இந்த ராகு-கேது பெயர்ச்சி எப்படி இருக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

### தனவரவைக் கொடுக்கும் இரண்டாமிடத்து ராகு!

தக்கவிதத்தில் செலவிட வைக்கும் அஷ்டமத்து கேது!

இதுவரை கன்னி ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மீன ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும், தனது வான்வெளிப் பயணத்தில் 8.1.2016 அன்று பின்னோக்கி வந்து உங்கள் பிரச்சினைகள் தீர வழி செய்யப் போகிறார்கள்.

இரண்டாமிடத்து ராகுவால் உங்கள் முனனேற்றம் சிறப்பான விதத்தில் அமையப் போகின்றது. இருப்பினும் பணப்புழக்கம் அதிகரிக்கும் இந்த நேரத்தில் கடன்களைத் தீர்ப்பது நல்லது. நீண்டநாளைய ஆசைகள் நிறைவேறும். நிலம் வாங்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இதுவரை பணம் வருவதில் இருந்த தடை அகலும். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கையும் உயரும்.

உங்களின் சுய ஜாதகத்தின் அடிப்படையிலும், உங்கள் மனைவி, மக்கள் சுயஜாதகத்தின் அடிப்படையிலும் ராகு பலன்களைக் கொடுப்பார். எனவே ராகு எந்த நட்சத்திரக் காலில் இணைந்திருக்கிறார். எந்தெந்த கிரகங்கள் எல்லாம் பார்க்கின்றன என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப பலன்களை வாரி வழங்க, செய்ய வேண்டிய பரிகாரங்கள் என்ன?, எந்த சிறப்பு ஸ்தலத்திற்கு சென்றால் நன்மை கிட்டும் என்பதைப் பற்றி அறிந்து கொண்டு அதன்படி செயறபட்டால் ஏராளமான இனிய சம்பவங்கள் நடைபெறும்.

குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான

# இரண்டில் வரும் ராகு திரண்ட செல்வத்தை அளிக்கும்!

சம்பவங்கள் நிறைய நடைபெறும். மங்கல ஓசை கேட்கும். படிப்பிறகேற்ற வேலை கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு அது கிடைத்து பண வரவு கூடும். எதிர்காலத்தை இனிமையாக்கிக் கொள்ள என்னவழி என்பதை நண்பர்கள் எடுத்துரைப்பர். கடை திறப்பு விழாக்களையும், கம்பெனி திறப்பு விழாக்களையும் காணும் நேரமிது.

தொழில் வளர்ச்சிக்கு மூலதனம் போட பணம் இல்லையே என்று ஏங்கியவர்களுக்கு கூட்டாளிகள் புதிதாக வந்திணைந்து உறுதுணை புரிவர். அடுத்தவர் நலனில் அக்கறை காட்டியவர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். தாய் வழி ஆதரவு பெருகும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். வெளிநாட்டிலிருந்து ஆதரவுக் கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

### அஷ்டமத்து கேதுவால் ஆதாயம் உண்டா?


எட்டாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் அலைச்சல் அதிகரித்தாலும், ஆன்மகத்திற்காக ஒரு தொகையைச் செலவிட்டு மகிழ்ச்சி அடைவீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி விரயங்களை சுபவிரயமாக்கிக் கொள்வது நல்லது.

வாகனங்களை மாற்றலாமா? என்ற சிந்தனையும், புதிய வாகனங்களை வாங்கலாமா? என்ற எண்ணமும் உருவாகும். உறவினர்களிடம் பழகும் பொழுது கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. எதிரிகளை உதிரியாக்குவது அன்பு ஒன்றுதான். எனவே அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயத்தை அதிகம் பெற முடியும்.

மாற்றங்கள் அதிகமாக வந்தாலும், வரும் மாற்றம் நல்ல மாற்றமா? என்பதை அறிந்து செயறபடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுங்கள். ஒவ்வொரு நாளும் விழிப்புணர்ச்சியுடன் செயறபடுவது நல்லது. பேச்சில் நிதானம் அவசியம் தேவை. இல்லையேல் விவகாரங்களைச் சந்திக்க நேரிடும். பொருளாதாரத்தில் கண்ணும், கருத்துமாக இருப்பது நல்லது. வரவிற்கேற்ற செலவு வரும்.

இந்த நேரத்தில் கேதுவை மட்டும் வழிபட்டால் போதாது. அதன் வால் பகுதியாக இருக்கும் ராகுவையும் கட்டாயம் வழிபட வேண்டும். எனவே பூரணமாக சர்ப்ப சாந்திகளை மேற்கொள்வது நல்லது. 6, 8, 12 ஆகிய இடங்களில் சர்ப்ப கிரகங்கள் உலா வரும் பொழுது வழிபாடுகள் தான் உங்கள் வளர்ச்சியைக் கூட்டும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

அஷ்டமத்து கேதுவால் அற்புதப் பலன்களைப் பெறவும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவும், மதிப்பு, மரியாதை, மகிழ்ச்சி, மன அமைதி போன்றவை கிடைக்கவும், உங்கள் சுய ஜாதகத்தில் ராகு- கேதுக்களின் நிலையறிந்து, அதற்கு ஏற்ற நாளில் வழிபாடுகளை மேற்கொண்டால் மேலும் நற்பலன்களைப் பெற இயலும்.





### பாதசாரப்படி ராகு தரும் பலன்கள்!

ராகு, சிம்ம ராசிக்குள் அடியெடுத்து வைக்கும் பொழுது சூரியன், சுக்ரன், கேது ஆகிய மூன்றின் சாரத்திலும் சஞ்சரிக்கிறார். அதன் மூலமாக நமக்கு ஏற்படும் பலன்களை அறிந்து நாம் செயறபடுவது நன்மையை வழங்கும்.

சூரியன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும்பொழுது (8.1.2016 முதல் 10.3. 2016 வரை): பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். மனதளவில் செய்ய நினைத்த காரியத்தை மறுநிமிடமே செய்து முடிப்பீர்கள். ஆயினும் பகை கிரகத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் உறவினர்களால் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். கடுமையாக முயற்சித்தும் கட்டடப் பணி நிறைவேறவில்லையே என்று கவலைப்படுவீர்கள். வேலை வாய்ப்பிற்காக வெளிநாடு சென்றவர்கள் மீண்டும் திரும்பும் வாய்ப்பு கிட்டும். இக்காலத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பதோடு வடக்குநோக்கிய அம்பிகையையும் வழிபட்டு வருவது நல்லது.

ராகு பகவான் சுக்ர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (11.3.2016 முதல் 16.11.2016 வரை): பயணங்களால் பலன் கிடைக்கும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இட மாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும். மனக்கவலை மாற மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு செய்வர். பணப்புழக்கம் அதிகரிக்கும் விதத்தில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரலாம்.

ராகு பகவான் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (17.11.2016 முதல் 26.7.2017 வரை): மிகமிக கவனம் தேவை. எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச்செய்வது நல்லது. விரயங்கள் கூடும். தொழில் நடத்தும் சிலர் நெருக்கடி காரணமாக அதை மூடிவிடலாமா? என்று சிந்திப்பர். வீண் விவாதங்களால் உறவு பகையாகலாம். இக்காலத்தில் ராகு-கேது வழிபாடும், சர்ப்ப சாந்தியும் செய்வது நல்லது.

### பாதசார அடிப்படையில் கேது தரும். பலன்கள்!

கேது, கும்ப ராசிக்குள் அடியெடுத்து வைக்கும் பொழுது, குரு, ராகு, செவ்வாய ஆகிய மூன்று சாரங்களிலும் சஞ்சரிக்கின்றார். அப்பொழுது எப்படிப்பட்ட பலன்களை வழங்குவார் என்பதை பார்ப்போம்.

குரு சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (8.1.2016 முதல் 13.7.2016 வரை): பெற்றோர் வழி உறவில் பிரியம் கூடும். தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பிரியத்திற்கு ஆளாக நேரிடும். சம்பள உயர்வு பற்றிய சந்தோஷ தகவல் வந்து சேரலாம்.

கேது, ராகு காலில் சஞ்சரிக்கும் பொழுது (14.7.2016 முதல் 22.3.2017 வரை): அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். ஆற்றல் மிக்கவர்களின் ஆலோசனை முன்னேற்றத்திற்கு வித்திடும். கூட்டு முயற்சியல் மாற்றம் ஏற்படும். கூட்டாளிகள் விலகுவர். தடைகளும், தாமதங்களும் ஆட்கொள்ளும் நேரம் இது என்பதால் திசா புத்திக்கேற்ற வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

கேது செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (23.3.2017 முதல் 26.7.2017 வரை): விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். வீடு, இடம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குழந்தைகளின் வெளிநாட்டு முயற்சிக்கு வித்திடுவீர்கள். பழைய நண்பர்களின் பழக்கத்தால் புதிய திருப்பங்கள் ஏற்படும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள்.

### வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!

இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகு ஏராளமான நறபலன்களை வழங்கவும், எட்டாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் வெற்றி வாய்ப்புகள் வீடு வந்து சேரவும் வாரம் தோறும் வாலில் மணி கட்டிய ஆஞ்ச நேயரை வழிபட்டு வாருங்கள். மேலும் பௌர்ணமி தோறும் விரதமிருந்து நாராயணரை வழிபட்டால் நலமும் வளமும் கிடைக்கும்.

(நாளை சிம்மம்)

# அரசாங்கத்திற்கு 3.1 பில்லியன் ரூபாய்களை அவன்கார்ட் நிறுவனம் செலுத்த வேண்டும்

அவன்கார்ட் கடல்பாதுகாப்பு சேவை நிறுவனம் அரசாங்கத்துக்கு 3.1 பில்லியன் ரூபாய்களை செலுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. பாரிய ஊழல்கள் மற்றும் ஊழல்களுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழு இவ்வாறு கோரியுள்ளது.

2012- 14 ஆம் ஆண்டு கால நிலுவையாகவே இந்த தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளதாக ஆணைக்குழு அறிவித் துள்ளது.

அவன்கார்ட் நிறுவனம் கடலில் வெளிநாட்டு கப்பல் களுக்கு பாதுகாப்பை வழுங்கி வந்த நிறுவனமாகும்.

குறித்த நிறுவனம் அதிகளவான பண சம்பாதிப்பில் ஈடுபட்டபோதும் அதில் குறைந்தளவான தொகையே அரசாங்கத்துக்கு செலுத்தி வந்த தாகுற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அதன் நடவடிக்கைகளை கடற்படையினருக்கு கீழ் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தேரர்களுக்கான சட்ட விதிகள் மீளாய்வு செய்யப்படவேண்டும்

### மகிந்த வலியுறுத்தல்

(கொழும்பு)



பௌத்த தேரர்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்கு விதிகள் குறித்து மீளாய்வு செய்யப்பட வேண் டும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

அந்த யோசனையினூடாக விகாரைகளுடனான மக்களின் தொடர்பு தூரமாவதற்கு வாய்ப்பிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தைப்பொங்கலை முன்னிட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மயூரபதி அம்மன் கோவிலில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பின்னர் அவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே இதனை தெரிவித்தார். (இ-7)

## தேசிய துறவிகள் சங்கம். அனுமதிப்பத்திரம் கோரல்

இந்த நாட்டிலுள்ள பௌத்த துறவிகளுக்கும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என தேசிய துறவிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சங்கத்தின் தலைவர் வகமுல்லே உதித்த தேரர் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே இவ்வாறுகோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், வெளி நாட்டிலுள்ள துறுவிகளுக்கு அந்த நாட்டு அரசாங்கம் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கியுள்ளதைப் போன்று இலங்கையிலுள்ள பௌத்த துறவிகளுக்கும் வழங்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேரவாத பிக்குகள் சங்கத்தை பதிவு செய்வது தொடர்பில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டமூலத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் தேரர் இதன்போது கருத்து வெளியிட்டார். (இ-7)

## செய்தித்துளி

### பரிசளிப்பு வைபவம் இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை சதுரங்க சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2015 ஆம்ஆண்டிற்கான - இளையோருக்கான சதுரங்க போட்டியில் முதல் மூன்று இடங்களை (ஒவ்வோர் வயதுப் பிரிவிலும்) பெற்ற வீர, வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் இடம்பெறும். (இ)

### பிக்குகள் தொடர்பான விசேட சட்ட மூலம் மகாநாயக்க தேரர்களின் தீர்மானத்துக்கு

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பிக்குகள் தொடர்பான விசேட சட்ட மூலம் மூன்று நிக்காயாக்களின் மகாநாயக்க தேரர்களிடமும் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த சட்ட மூலம் தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் முன்வைக்கும் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் தயாராகவுள்ளதாக பௌத்த மத விவகார அமைச்சர் விஜதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறித்த சட்ட மூலம் தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் திருத்தங்களை கொண்டுவருவதாயின் அதனை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### இலங். கடற்படை அதிகாரி கனடாவில் அடைக்கலம்?

இலங்கைக் கடற்படையின் முக்கிய அதிகாரியொருவர் அரசியல் புகலிடம் கோரி கனடாவில் தஞ்சமடைந்திருப்பதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடற்படையின் முக்கிய பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரியொருவரே தன் குடும்பத்தினருடன் தற்போது கனடாவில் அரசியல் தஞ்சம் கோரியிருப்பது குறித்த செய்தியில் இருந்து மேலும் தெரிய வந்துள்ளது.

இலங்கையில் இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது துன்புறுத்தல்களை மேற்கொண்டுள்ளதாகவும் அது குறித்து தான் சாட்சியமளிக்க தயார் என்றும் குறித்த கடற்படை அதிகாரி, கனேடிய அரசாங்கத்தின் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். (இ-7)

### சாட்சி பெறும் நடவடிக்கைகளிலிருந்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விலகல்

எம்பிலிப்பிட்டிய சுமித் பிரசன்ன ஜயவர்தனவின் உறவினர்கள் சார்பாக சாட்சி பெறும் நடவடிக்கைகளில் இருந்து விலகிக் கொள்வதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான ருவான் குணசேகர கூறியுள்ளார்.

மரண விசாரணை சாட்சிகளை பெறும் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக பொலிஸ்மா அதிபரினால் வேறொருவர் நியமிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

எம்பிலிப்பிட்டியவில் ஒரு பிள்ளையின் தந்தையினது மரணம் தொடர்பான விசாரணைகளில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சம்பந்தப்பட்டிருந்ததனால் சட்டத்தரணிகளாலும் உயிரிழந்தவரின் குடும்ப உறுப்பினர்களாலும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### அரசின் தவறுகளை சுட்டிக்காட்டும் அளவுக்கு அதிகாரம் இருக்கின்றது

தற்போதைய அரசாங்கத்தின் தவறுகள் மற்றும் குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதற்குரிய ஆற்றல் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கு இருந்ததாக கடற்றொழில் மற்றும்நீரியல வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டே அந்தப் போராட்டத்தை செய்வதற்கு தமக்கு முடிந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். (இ-7)

### சுவீடன் நாட்டு பெண்மணி கடலில் மூழ்கி உயிரிழப்பு

தங்கல்ல-மாரகொல்ல கடற்பரப்பிற்கு நீராட சென்ற சுவீடன் நாட்டுப்பெண்ணொருவர் கடலில் மூழ்கி நேற்றுக் காலை பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த 80 வயதான பெண்ணொருவரே பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்தப் பெண் கடந்த சில நாட்களுக்கு முன்பே இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் இவர் தங்கல்ல பிரதேச விடுதி ஒன்றில் தங்கியிருந்ததாகவும் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்கல்ல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

### ஆட்டோ மோதி சிறுவன் மரணம்

கோவிலுக்கு செல்லும் வழியில் ஆட்டோ ஒன்றால் மோதுண்டு பலத்த காயங்களுக்குள்ளாகி கண்டி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 8 வயது சிறுவன், சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஹற்றன் போடைஸ் பிரதான வீதியின் டிக்கோயா பட்டல்கலை பகுதியில் இவ்விபத்து நேற்று இரவு 7.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இவ்விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆட்டோவின் சாரதியை ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜரபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

### பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் இடம்பெற்றன.

இதில் போசகராசா, மா.சங்கர் ராஜ், தலைவராக இ.துரைசிங்கம், செயலாளராக ப.நிமலகாந்தன், பொருளாளராக தி.சுதர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா:19 1/4<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/5409 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம் கார்த்திகை<br>கி.பா: 50உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:பட்டதாரி லண்டன் குடியுரிமை<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5412 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 31 1/4<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில் பிரான்ஸ் PR<br>தொ.இ: B/5410 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 33<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்துபெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5413 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 116 செவ் 8 இல்<br>உய்ரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA/ அரசதொழில்<br>தொ.இ: B/5414 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 33<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: 8ம் தரம்<br>தொ.இ: G/5416 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 69சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/5415 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 34செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/ கட்டார்எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5417 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# விசுவமடுவில் நகைக்கடை உடைத்து

## 4 லட்சம் பெறுமதியான ஆபரணங்கள் திருட்டு!

(விசுவமடு)

**விசுவமடு சந்திக்கு அருகாமையில் இருந்த தங்க ஆபரணக்கடையின் பின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 4லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களைத் திருடியுள்ளதாகவும் இரும்பு பெட்டகத்தினுள் வைக்கப்பட்டிருந்த சுமார் 32 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை எடுப்பதற்கு முயற்சித்த வேளை அது கைகூடாமையால் கைவிட்டுச் சென்றுள்ளதாகவும் கடை உரிமையாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு விசுவமடு சந்திக்கு அருகாமையிலுள்ள புளியடி சந்தியில் அமைந்துள்ள கதிர் ஆபரணக்கடையில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நேற்றுக்காலை உரிமையாளர் கடையைத் திறப்பதற்கு முற்பட்ட வேளை பின்கதவு உடைக்கப்பட்டமை தெரிய வந்தது.


இதனையடுத்து அவர் கடையினுள்நுழைந்த போது அங்கு பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள் திருட்டு போயிருந்தமை தெரிய வந்தது.

அத்துடன் இரும்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்களை உடைத்து எடுப்பதற்கு இரும்பு வெட்டும் கருவி ஒன்றைப் பயன்படுத்திய போதும் அம் முயற்சி கைகூடாமையை அடுத்து கைவிட்டுள்ளதாக உரிமையாளரினால் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பின்னர் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குத்தகவல் வழங்கப்பட்டு அவ்விடத்திற்கு விரைந்த கைரேகை நிபுணர்கள், பொலிஸார், தடயவியல் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் விசாரணைகளைமேற்கொண்டதுடன் கைரேகைப் பதிவுகளையும் எடுத்தனர்.

அத்துடன் நகைகளை துப்புரவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் சல்வர் திரவம் நிலத்தில் ஊற்றப்பட்டதனால் அதில் திருடர்களின் கால்கள் பட்டு கடையின் உட்புறப் பகுதிகளிலும் வெளிப்புறப்பகுதிகளிலும் பதியப்பட்டுள்ளன. இதனையும் பொலிஸார் பதிவு எடுத்தனர் என கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார். மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசுவமடு பகுதியில் இரவு வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுவதாகவும் கடந்த வாரம் 10ஆம் கட்டைச்சந்தியிலும் வீடொன்றின் கதவை உடைத்து உள் நுழைந்து திருட்டில் ஈடுபட்டிருந்த வேளை வீட்டு உரிமை யாளரினால் திருடன் கையும் மெய்யுமாக அகப்பட்ட சம்பவம் அண் மையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-295)






## வவு/இந்துக் கல்லூரியின் வைரவிழா நாளை மறுதினம்

(மல்லாவி)

வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட வவு/இந்துக் கல்லூரியின் வைரவிழா நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு கல்லூரி ஒன்றுகூடல்மண்டபத்தில்கல்லூரிஅதிபர் தலைமையில்நடைபெறும்.

இவ்விழாவின் முன்னோடி நிகழ்வாக நேற்று சனிக்கிழமை காலை 6மணியளவில் வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்கள் இருபாலாரும் பங்கேற்ற வீதியோட்ட நிகழ்வு நடைபெற்றது.

விழாநடைபெறவுள்ள தினத்தன்று காலை வவுனியா அகிலேஸ்வரர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நடைபெற்று அங்கிருந்து விருந்தினர்கள் நடைபவனியாக கல்லூரி மண்டபத்திற்கு அழைத்து வரும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்துகலை நிகழ்வுகள் இடம்பெறுமென விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-15)

## வித்தியாபுர 10 வீட்டுத்திட்ட கிராமத்தின் பிரதான வீதி கவனிப்பாரற்ற நிலையில்

(மாமூலை)

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள வித்தியாபுர பத்து வீட்டுத்திட்டக்கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியானது இற்றைவரை யாரும் கவனிப்பாரற்ற நிலையில் சேறும் சகதியுமாக காணப்படுகின்றது.

இப்பாதை பயணம் செய்ய முடியாத நிலையில் தற்போது உள்ளது. மேற்படி கிராமத்தில் பெருந்தொகையான மக்கள் வசித்து வருகின்றனர்.

இவ்வீதியில் மழை காலங்களில் சுமார் 3 தொடக்கம் 4 அடி ஆழத்திற்கு நீர் தேங்கி காணப்படுவதாகவும் இதனால் பாடசாலை செல்லும் மாணவர்களைத் தோள்களில் சுமந்தே வீதியைக் கடக்க வேண்டியுள்ளதாகவும் இவ்வீதியைப் புனரமைத்துத்தருமாறு பல்வேறு தடவைகள் வேண்டுகோள் விடுகப்பட்ட போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் ஒரு தடவை இவ்வீதியை பார்வையிட்டு செப்பனிட்டுத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-301)

## விசமத்தனமான முறையில் ஒட்டப்படும் சுவரொட்டிகளால் பொதுமக்கள் குழப்பம்

### முள்ளியவளை பொலிஸாரை நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள்

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு- கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நீராவிப்பிட்டி, கிச்சிராபுறம் ஆகிய பகுதிகளில்சிலர் விசமத்தன மான முறையில் சுவரொட்டிகளை ஒட்டி மக்களின் இயல்பு வாழ்வைக் குழப்புகின்றனர் என பிரதேச மக்கள் சுட்டிக் காட்டுவதோடு இவ்வாறனவர்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென முள்ளியவளை பொலிஸாரிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, இவ்வாறான சுவரொட்டிகள் நேற்று மேற்படி பகுதிகளில்பரவலாக ஒட்டப்பட்டிருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே முள்ளியவளை பொலிஸார் மக்களைக் குழப்புகின்றவர்களை கண்டு பிடித்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

## முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி; 65வது ஆண்டு நிறைவு விழா இன்று

(முள்ளியவளை)

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிறுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாடசாலையின் ஆரம்பகால அதிபராக கடமையாற்றிய ஓய்வு நிலை அதிபர் சி.இராசநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக முல்லை. கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர்ரி.தேவதாஸ் கௌரவ விருந்தினர்களாக அயல் பாடசாலையின் அதிபராகிய ந.இராமநாதன் ஓய்வு நிலை உத்தியோகத்தராகிய எஸ். துரைராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் பாடசாலை கல்வியிலும் விளையாட்டிலும் ஏனைய துறைகளிலும பிரகாசித்து வெற்றியீட்டி சாதனைகள் பல படைத்து பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் மாணவ முதலவர்களிற்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மாணவர்களிற்கான பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி. கமலாம்பாள் இராசநாயகம் வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

இந்நிகழ்வுகளில் பெற்றோர்கள்,பழைய மாணவர்கள, நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கல்லூரிச் சமூகத்தினர் கேட்டுள்ளனர்.(2-302-292)

## சிலாவத்துறையில் பொதுநூலகம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையினால் நடப்பாண்டில் நெல்சிப் திட்ட நிதி 70 இலட்சத்து 30ஆயிரம் ரூபா ஒதுக்கீட்டில் மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட முசலி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சிலாவத்துறையில் பொது நூலகம் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முசலி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சிலாவத்துறையில்பொதுநூலகம்ஒன்று அமைக்கப்பட வேண்டு மென பிரதேச மக்கள்,மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், வடக்கு மாகாண சபையின் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினர்கள் ஆகியோரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து நெல்சிப் திட்டத்தின் ஊடாக 70 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி வடக்கு மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கட்டடத்திற்கான வேலைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டு 5மாதங்களினுள் பூர்த்தி செய்யப்பட்டு பொது நூலகம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது. (2-15)

## வடபிராந்திய இ.போ.சவின் மூலமே அதிகூடிய வருமானம் கிடைக்கின்றது

### வடபிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

(முள்ளியவளை)


நாட்டிலுள்ள இ.போ.சபைகளின் 12 பிராந்தியங்களில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் வடபிராந்தியமே வருமானம் கூடியதும் சிறந்த சேவையை வழங்கும் பிராந்தியமாக முதன் நிலையை தக்கவைத்துக் கொண்டுள்ளது என வடபிராந்திய முகாமையாளர் உபாலி கிரிபத்துடுவ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவிலிருந்து தண்டுவான் கிராமம் வழியாக யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவிற்குமான பேருந்து சேவைகள் கடந்த 14ஆம திகதி காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் முல்லைத்தீவிலிருந்து தண்டுவான் கிராமம் ஊடான பேருந்து சேவையை தண்டுவான் பாடசாலைக்கு முன்பாக இருந்து ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடபிராந்தியத்திலுள்ள 7 இ.போ.ச சாலைகளில் 250 பேருந்துகள் மட்டுமே உள்ளதாகவும் ஆனால் வடபிராந்தியத்தில் மொத்தமாக ஆயிரத்து 450 தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதாகவும் அவர் தெரிவித்தார். மாணவர்களிற்கு பருவ கால சீட்டு வழங்கும்போது பொதுவான பயணக் கட்டணத்திலிருந்து 10 வீதமும் அரச ஊழியர்களிற்கு பருவ கால சீட்டு வழங்கும்போது 35 வீதமும் மட்டுமே அறவிடப்படுவதாகவும் கூறி னார். மேலும் பொது மக்களின் ஒத்துழைப்புடன் மட்டுமே தமது சேவைகளை விஸ்தரிக்கவும் தொடர்ந்து நடத்தவும் முடியும் என நம்பிக்கை வெளியிட்ட அவர் இதற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார். (2-302)







கிளிநொச்சி இரணைமடு குளத்தின் மாபெரும் 96ஆவது ஆண்டுப் பொங்கல் விழா நேற்றுக் காலை 9மணியளவில் அருள் மிகு கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றிலில் நடைபெற்றதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-கிளிநொச்சி-1 செய்தியாளர்)

கடுமையான சொற்கள், கசப்பான சொற்கள் பலவீனமான கொள்கையின் அறிகுறி. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தைப்பொங்கல் தினத்தில் பிரதமர் கூறிய துயரச் செய்தி

தேசிய தைப்பொங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தபோது அந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, காணாமல்போனவர் கள் பெரும்பாலும் இறந்திருக்கலாம் என்று கூறியமை தமிழ் மக் கள் மத்தியில் மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.

காணாமல்போனவர்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்ட போது, காணாமல்போனவர்களின் உறவுகள் தங்களின் சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தனர்.

விசாரணை முடிவுகள் என்ன என்பதை அறிய ஆவலாக இருந்த நேரத்தில், காணாமல்போனவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்திருக்கலாம் என்று பிரதமர் ரணில் கூறியமை மிகப்பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையை பிரதமர் ரணில் கூறிய செய்தி தகர்த்தெறிந்து விட்டது.

காணாமல்போன தங்கள் உறவுகள் மீண்டு வருவர் என்று நம்பியிருந்த நேரத்தில், காணாமல்போனவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்து விட்டனர் என்று பிரதமர் ரணில் சர்வசாதாரணமாக கூறியமை இந்த நாட்டில் இறப்பை அறிவிப்பதிலும் இனத்துவப் பாகுபாடு உள்ளது என்பதை நிரூபித்துள்ளது.

காணாமல்போனவர்கள் சிங்களவர்களாக இருந்தால் அவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்து போயிருக்கலாம் என்ற செய்தியை சிங்கள மக்களின் பண்டிகைத்தினம் ஒன்றில் கூறினால் அதன் தாக்கம் எவ்வாறாக இருக்கும் என்பதை கூறிய வர்கள் உணர்ந்திருப்பர்.

ஆனால் தமிழ் மக்கள் சிறுபான்மையினர். அவர்களின் மரணச் செய்தியை எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் சொல்லலாம் என்று ஆட்சித் தலைவர்கள் நினைப்பதுதான் இந்த நாட்டில் இருக்கக்கூடிய பேரவலமாகும்.

எதுவாயினும் காணாமல்போனவர்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். காணாமல்போன தமது உறவுகள் தொடர்பில் சாட்சியம் அளித்தவர்களுக்கு உரிய பதிலை வழங்குவது கட்டாயமானதாகும். இவற்றை வலியுறுத்த வேண் டிய பொறுப்பு தமிழ் அரசியல் தலைமைக்கு உண்டு. இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டால் எல்லாம் சரியாகி விடும் என்று நினைப்பது மகாதவறு.

காணாமல்போன தங்களின் உறவுகளுக்கு நடந் தது என்ன என்பதை அறிவதற்காக, வருடக் கணக் கில் கண்ணீர் விடும் பெற்ற தாயின்; கட்டிய மனைவியின்; உற்ற உறவினர்களின் ஏக்கம் தீர்க்கப்பட வேண்டும்.

இவற்றை விடுத்து எழுந்தமானமாக, காணாமல்போனவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்திருக்கலாம் என்றால்; அவர்களை கொன்றது யார்? காணாமல் போகச் செய்தது யார்? யாருடைய ஆட்சியில் இவை நடந்தன? இவற்றைச் செய்தவர்கள் இனங்காணப்பட்டார்களா? இதுபோன்ற பல கேள்விகளுக்கும் பதில் கூறியாக வேண்டும்.

இதைவிடுத்து காணாமல்போனவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்திருக்கலாம் என்றால் அதன் பொருள், நாங்கள் ஆட்சியாளர்கள்; நீங்கள் எங்களால் ஆளப்படுபவர்கள்; எனவே நாங்கள் சொல்வதை நீங்கள் கேட்டாக வேண்டும்; இது தான் சட்டமும் நியதியும் என்ற இறுமாப்பில் கூறுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

அதிலும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் இருந்த மேடையில் அவருக்குப் புரியாத மொழியில் காணாமல்போனவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்துவிட்டனர் என்று பிரதமர் ரணில் கூறியமை வெளிநாட்டு சாட்சியத்தையும் பிற்காலத்தில் சான்றுப்படுத்துவதற்காகவா? என்று எண்ணத்தோன்று வதில் தவறில்லை.

## சிங்கப்பூர் பெண்ணிடம் சில்மிசம் அரசியல் பிரமுகர் கைதானார்

சிங்கப்பூரில் அந்நாட்டுப் பெண் ஒருவரிடம் தகாத முறையில் நடந்துகொள்ள முயற்சித்த இலங்கை அரசியல்வாதியொருவர் சிங்கப்பூர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

மத்திய மாகாண சபையின் உறுப்பினர்கள் அண்மையில் சிங்கப்பூருக்கு மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் போது இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்ட ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் சிங்கப்பூர்வாசியான பெண்ணொருவரின் உடலை தகாத முறையில் ஸ்பரிசிக்க முயன்றுள்ளார்.

இதனையடுத்து சிங்கப்பூர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ள குறித்த அரசியல்வாதி, பொலிஸ் நிலையத்துக்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

குறித்த மாகாண சபை உறுப்பினருடன் சிங்கப்பூர் சுற்றுலாவை மேற்கொண்டிருந்த ஏனைய மாகாண சபை உறுப்பினர்கள் நேற்று நாடுதிரும்பியுள்ள போதிலும், பொலிசாரினால் கைது செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர் இதுவரை நாடு திரும்ப வில்லை என்றும் தெரிய வந்துள்ளது. (எ-11)

## பத்து அதிபர்கள்மீது மோசடி குற்றச்சாட்டு

(கொழும்பு)

10 அதிபர்களுக்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதையடுத்து கொழும்பிலுள்ள முன்னணி பாடசாலைகளில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதிபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் பிரதானமானதாக அமைச்சின் சுற்றுநிருபத்தை மீறி சட்டவிரோதமாக பெற்றோர்களிடமிருந்து பணம் பெற்றுள்ளதாகவும் அவ் அதிகாரி கூறினார்.

இதேவேளை கணக்காய்வாளர்களின் அறிக்கை கிடைத்தவுடன் குற்றம் நிரூபிக்கப்பட்டால் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

ஆரம்பகட்ட விசாரணைகளில் பாடசாலைகளில் கட்டடம் அமைக்க பெற்றோர்களிடமிருந்து பணம் பெற்றமை, அமைச்சின் அனுமதியின்றி மேலதிக வகுப்புக்களை நடத்தியமை என்பவற்றுடன்தொடர்புபட்டவையாகவுள்ளதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ)

## விபத்தினையடுத்து வாகன நெரிசல்

பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தியில் நேற்று பகல் 12.30 மணியளவில் காருடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் கார் பலத்த சேதத்துக்குள்ளானது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி வீதி வழியாக பயணித்த காரை அதே வழியாக பயணித்த மோட்டார் சைக்கிள் பின்புறமாக மோதியதில் மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படாத போதும் காரின் பின்பகுதி சேதத்திற்குள்ளாகியுள்ளது.

இதையடுத்து கார் சாரதி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் தனது காரையும் அப்புறப்படுத்த மறுத்தார்.

இதனால் நடு வழியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரினால் சிறிது நேரம் வாகன நெரிசல் ஏற்பட்டது.

மோட்டார் வாகன உரிமையாளருக்கும் கார் சாரதிக்கும் இடையில் சமரசம் ஏற்பட்டதை அடுத்து கார் அப் புறப்படுத்தப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டது. (எ)

## கானா முதல் கல்வாரி வரை

கலிலேயாவில் உள்ள கானாவூரில் திருமணம் ஒன்று நடைபெற்றது. இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். இயேசுவும் அவருடைய சீடரும் அத் திருமணத்திற்கு வந்திருந்தனர். அன்று திருமண வீடுகளில் திராட்சை இரசமும் தாராளமாகப் பரிமாறப்படுவது வழக்கம். எதிர்பாராதவிதமாக திடீரென திருமண விழாவில் திராட்சை இரசம் தீர்ந்து போய்விட்டது. திருமண வீட்டார் குழம்பியிருக்க இயேசுவின் தாய் அன்னை மரியா அவர்களின் அவமானத்தை போக்க தம மகன் இயேசுவிடம் பரிந்து பேசினார். புதுமை நிகழ்த்தக்கூடிய நேரம் இன்னும் வரவில்லையென்று இயேசு தம் தாயிடம் கூறுகிறார். இருப்பினும் தாய்

### பரமபிதா காட்டிய பாதை

சொல்லைத் தட்டாத மைந்தன் இயேசு தண்ணீரை சுவைமிக்க திராட்சை இரசமாக மாற்றிக் கொடுத்தார். இதுவே இயேசுசெய்த முதல் புதுமை என பைபிளில் யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்படுகிறது. இயேசுவின் புதுமைகள் நம்பிக்கைக்கு அளிக்கப்பட்ட நன்கொடைகள. விசுவாசத்துக்கு அளிக்கப்பட்ட விருதுகள். உறுதியை வளர்க்கப் பவனி வந்த அவனியின் ஆச்சரியங்கள்.

யோவான் நற்செய்தியின்படி இயேசுவின் தாய் அன்னை மரியா கானாவிலும் கல்வாரியிலும் இயேசுவுடன் காட்சிப்படுத்தப்படுகிறார். அதாவது இயேசு தன்னுடைய பொதுப் பகிரங்கப் பணி வாழ்வின் தொடக்கத்திலும் இறுதியிலும் அன்னைமரியா அவருடன் இருக்கிறார். இந்த இரண்டு இடங்களி லும் : கானாவிலும் கல்வாரியிலும் - இயேசு தன் தாயை 'பெண்ணே" என்று அழைக்கிறார். இந்த இரண்டு இடங்களிலும் விசேட நேரம் குறிப்பிடப்படுகிறது.. கானாவில் இயேசு தன் மீட்பின் பணியின் தொடக்கத்தில் இங்கு தனது நேரம் வரவில்லை என்கிறார். ஆயினும் தன் தாய் அன்னை மரியாவின் வேண்டு கோளுக்கு இணங்கி புதுமை நிகழ்த்துகிறார். இருப்பினும் இந்த செயலுடன் யோவான் குறிப்பிடும் விசேட நேரம் ஆரம்பமாகிறது. யோவான் குறிப்பிடும் இந்த விசேட மகிமையின் நேரம் 'நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்" என இயேசு குறிப்பிடும் போது கல்வாரியில் வந்தடைகிறது எனலாம். கானாவிலும் மூன்றாம்நாள்தான் திருமணம் நடைபெறுகிறதாக பைபிள் குறிப்பிடுகின்றது. பைபிளின் படி மூன்றாம் நாள் என்பது பரிசுத்த நேரமாகிய பாஸ்க்காப் பணியின் பூர்த்தியை குறிக்கின்றது. இந்த மூன்றாம் நாள் கானாவில் தொடங்கியது பரிசுத்த நேரம் கல்வாரியில் நிறைவேறுகிறது.

இயேசு இன்று 'பெண்ணே' என அழைக்கும் அன்னை மரியா இயேசுவினுடைய பொதுப் பகிரங்கப்பணி வாழ்வின் ஆரம்பத்தில் இறுதியிலும் அவருடன் இருக்கிறார். அன்னை மரியாவை இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் தாரகை என்று வர்ணித்தால் அது சாலப்பொருந்தும். ஒடுக்கப்பட்டோருக்கும், ஓரங்கட்டப்பட்டோருக்கும் சார்பாக வாதிட்டதோடு நின்றுவிடாமல், அவர்களுக்கு உயரிய பங்கைப் பெற்றுத் தந்தார் அன்னை மரியா. திருமண வீடுகளில் முதற் பந்திகளில் பணக்காரர்களும், செல்வாக்கு நிறைந்தவர்களும்தான் அமர்வது வழக்கம். அவர்களுக்கெல்லாம் திராட்சை இரசம் போதியளவு கிடைத்து விட்டது. ஆனால், கடைசிப் பந்தியில் அமர்ந்த ஏழை, எளியவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், திருமண வீட்டாரால் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்று கரு தப்படாதோர் என பலர் அமர்ந்திருப்பர். இவர்களுக்குத்தான் இரசம் அன்று குறைபட்டுவிட்டது என்கிறார்கள் பல அறிஞர்கள். மற்றவர்கள் அதைப்பற்றி அதிகம் அக்கறைப்பட்டுக் கொள்ளாத சூழலில்தான் அன்னை மரியா துணிந்து, நீதியுணர்வுடனும், நம்பிக்கையுடனும் இயேசுவை அணுகுகிறார். தனது நேரம் வரவில்லை என்று இயேசு மறுப்பு தெரிவித்த பிறகும் கூட அவரை வலியுறுத்தி தண்ணீரைத் திராட்சை இரசமாய் மாற்றும் அருஞ்செயலை - தன் முதல் அற் புதச் செயலை இயேசு நிறைவேற்றக் காரண மா னார். எனவே, ஒதுக்கப்பட்ட கடைசிப் பந் தில் அமர்ந்திருந்தவர்கள் முதல் பந்திகளில் அமர்ந்து இரசம் குடித்த செல்வாக்கு மிக்கோரைவிட அதிக சுவை நிறை ந்த, நல்ல இரசத்தை அவர்கள் மனம் நிரம்பும்வரை அனுபவிக்க முடிந்தது. இவவாறு, ஒதுக்கப்பட்டோருக்கு அதிக தரமும், அளவும் மிக்க திராட்சை இரசம்



கிடைத்தது. எனவே, அன்னை மரியாவை இட ஒதுக்கீட்டின் தாய் என்று பெருமையுடன் அழைக்கலாம் அல்லவா.

அற்புதங்கள் நிகழ்த்தும் சக்தி தன் மகனிடம் இருப்பதை அன்னை மரியா உணர்ந்திருந்தாலும், அந்த சக்தி மற்றவருக்கு மட்டுமே பயன்பட வேண்டுமேயொழிய, தன் நலனுக்காக அல்ல என்பதில் அவர் தெளிவாக இருந்தார். மரியாவின் இந்த வேண்டுகோளுக்கிணங்க, இயேசு ஆற்றிய புதுமையே தனிச்சிறப்புப் பெறுகின்றது.

திராட்சை இரசம் தீர்ந்து விட்டது என அன்னை மரியா இயேசுவிடம்

ம. பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

கூறும்போது 'பெண்ணே", அதைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும், எனது நேரம் இன்னும் வரவில்லையே" என்று மரியா கானாவில் பெற்ற பதில் மனதைக் கடினப்படுத்தியதாகத் தோன்றுகிறது. இருந்த போதிலும், மரியா பிரச் சினையை இறைவனின் கரங்களில் வைக்கி றார்.

பிறரின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற அவ ரின் அக்கறை, இயேசுவின் அந்த நேர த்தை வேகமடையச் செய்கின்றது. கானாவில் கலியாண வீட்டில் மகிழ்ச்சி, ஆனந்தம் அனைவரையும் ஆட்கொளகிறது. கல்வாரியில் மரியா இயேசு தன்னையும் அன்புச்சீடரையும் தனியாக விட்டுவிடாமல் பாதுகாப்பாக விட்டுச் செல்லும் போதும்: 'பெண்ணே", இவரே உன் மகன் பின்னர் தன் அன்புச் சீடரிடம் இவரே உன் தாய் என கூறி செல்லும்போது மகிழ்ச்சி, ஆனந்தம் அங்கு அனைவரையும் ஆட்கொள்கிறது. எனவே எம்மையும் எம் பிரச்சினைகளையும் இறைவனின் கரங்களில் ஒப்படைப்போம் மகிழ்ச்சி, ஆனந்தம் கானாவையும் கல்வாரியையும் கடந்து எம் வீடுகளிலும் ஆட்கொள்ளும்.

## சிட்னி சர்வதேச டென்னிஸ்

# சானியா - ஹிங்கிஸ் ஜோடி தொடர்ச்சியாக 30ஆவது வெற்றி

சிட்னி சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா- மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் சிட்னி சர்வதேச டென்னிஸ் போட்டி நடந்தது.

இதில் மகளிர் இரட்டையர் பிரிவின் இறுதிப் போட்டியில் சானியா மிர்சா (இந்தியா)-மார்ட்டினா ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி. பிரான்ஸின் கரோலின் கார்சியா - கிறிஸ்டினா மிலாட னோவிக் ஜோடியை எதிர்த்து விளையாடியது.

இதில் எதிர் அணியின் தாக்குதல் ஆட்டத்தை சமாளிக்க முடியாத சானியா- ஹிங்கிஸ் ஜோடி ஒரு கட்டத்தில் தோல்வியின் விளிம்பில் இருந்தது. இதனால் முதல் செட்டை 1:6 என இழந்தது.

பின்னர் மீண்டு வந்த சானியா ஜோடி அடுத்த 2 செட்டுகளிலும் அதிரடியாக விளையாடியது.



இறுதியில் சானியா- ஹிங்கிஸ் ஜோடி 1:6. 7:5. 10:5 என்ற கணக்கில் கரோலின் கார்சியா - கிறிஸ்டினா மிலாடனோவிக் ஜோடியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது. சம்பியன் பட்டம் பெற இந்த ஜோடிக்கு 1 மணி 14 நிமிட நேரம் தேவைப்பட்டது. இதன் மூலம் சானியா ஜோடி தொடர்ச்சியாக 30 ஆவது வெற்றியை பெற்று முத்திரை பதித்தது.

கடந்த ஆண்டில் 2 கிராண்ட் சிலாம் உட்பட 9 பட்டம் பெற்றிருந்த. சானியா - ஹிங்கிஸ் ஜோடிக்கு இது 11 ஆவது இரட்டையர் பட்டமாகும். இந்த ஆண்டில் பெற்ற 2ஆவது பட்டம் இதுவாகும். (க)

# சென்.ஜோன்ஸ்-புனித தோமஸ் கிரிக்கெட் போட்டி சமநிலையில்

யாழ். சென். ஜோன்ஸ் அணிக்கும் மாத்தளை புனித தோமஸ் அணிக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட பாடசாலை கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

அண்மையில் நடைபெற்ற இப் போட்டியில் முதல் இன்னிங்ஸில், 260 ஓட்டங்களைக் குவித்த சென். ஜோன்ஸ், புனித தோமஸ் அணியை அதன் முதல் இன்னிங்ஸில் 86 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்தியது.

அத்துடன் புனித தோமஸ் அணியை இரண்டாவது இன்னிங்ஸில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடுமாறும் சென். ஜோன்ஸ் அழைத்தது.

முதலாவது இன்னிங்ஸில் மிகத் துல்லியமாக பந்துவீசிய சென். ஜோன்ஸ் அணியினர். இரண்டாவது இன்னிங்ஸில் சோபிக்கத் தவறியதைப் பயன்படுத்திக் கொண்ட புனித தோமஸ் அணியினர் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்துக்கொண்டனர்.

சென். ஜோன்ஸ் சார்பாக துடுப்பாட்டத்தில் சிரேஷ்ட வீரர்களில் ஒருவராக ஜெனி ஃப்ளெமின் செபமாலைப்பிள்ளை. தேவப்பிரஷாந்த் சந்திரமோகன் ஆகியோரும் பந்துவீச்சில் கானாமிர்தன், நிலோஜன் மகாலிங்கம், கபில்ராஜ் கனகரட்ணம ஆகியோரும் பிரகாசித்தனர். (க)

# கார் விபத்தில் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய கங்குலி மனைவி



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கங்குலியின் மனைவி டோனா சென்ற கார் விபத்துக்குள்ளானதில் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.


டோனா கங்குலி தனது மகளை பாடசாலையில் இருந்து திருப்பி அழைத்து வந்து கொண்டிருந்தார்.

அப்போது அவர்கள் வந்த மெர்சிடெஸ் பென்ஸ் கார் ஜேம்ஸ் லாங் ஸரணி (James Long Sarani) என்ற இடத்திற்கு அருகில் வந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில் கார் மீது பின்னால் வந்த லொறி ஒன்று பயங்கரமாக மோதியது.

இந்த பயங்கர விபத்தில் கார் அதிக அளவில் சேதமடைந்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக கங்குலி மனைவி டோனா காயமின்றி உயிர் தப்பினார்.

இது தொடர்பாக தாகுர்பிகுர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. வழக்கு பதிவு செய்த பொலிஸார் ஓட்டுநரை கைது செய்தனர். மேலும். லொறியையும் பறிமுதல் செய்துள்ளனர். (க)

# ஆஸியுடனான தோல்விக்கு காரணம் கண்டுபிடித்த டோனி



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் தோல்வி குறித்து அணிததலைவர் டோனி கருத்து தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் இடையேயான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேன நகரில் நேற்று முன்தினம் நடந்தது.

முதல் போட்டியில் 310 ஓட்டங்களை அவுஸ்திரேலியாவுக்கு இலக்காக வைத்து தோல்வி அடைந்த இந்திய அணி, நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியிலும் 309 ஓட்டங்களை இலக்காக வைத்தும் தோற்றது.

இது பற்றி இந்திய அணித் தலைவர் டோனி கூறுகையில், “இரு போட்டிகளில் அடுத்தடுத்து 300 ஓட்டங்களை தாண்டியது சிறப்பான விடயம்.


ஆனால் பந்துவீச்சை பார்க்கும் போது 300 ஓட்டங்கள் என்பது அவுஸ்திரேலியாவுக்கு போதாத ஒன்று. எனவே 330 ஓட்டங்கள் அல்லது அதற்கும்மேல்தேவைப்படும்

இந்தப் போட்டியில் அதிகமாக தவறான பந்துவீசப்பட்டது. இது கண்டிப்பாக பந்து 'ஸ்விங்' ஆவதால் இல்லை. பந்துவீச்சாளர்கள் இறுக்கம் அடையும்போது தவறான பந்துகளை வீசுகின்றனர். ஆனால் சுழற்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டனர்.

நாங்கள் இன்னும் மன உறுதியுடன் தான் இருக்கிறோம். அடுத்தப் போட்டியில் பெரிய ஷொட்டுகளை ஆட வேண்டும். எல்லாவற்றையும் வைத்து பார்க்கும் போது 330 ஓட்டங்களுக்கு மேல் எடுக்க வேண்டியது அவசியம்" என்று கூறியுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# உலக சாதனை முறியடிக்க காத்திருக்கும் விராட் கோலி



இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் இடையேயான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேன் நகரில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் அவுஸ்திரேலியா 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் விராட் கோலிக்கு தென்னாபிரிக்க அணித்தலைவர் டிவில்லியர்சின் உலகசாதனையை முறியடிக்க நல்ல வாய்ப்பு கிடைத்தது.

78 ஓட்டங்கள் எடுத்தால் குறைந்த இன்னிங்சில் அதிகவேகமாக 7000 ஓட்டங்கள் கடந்த வீரர் என்ற சாதனையை படைக்கலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் கோலி 59 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

டிவில்லியர்ஸ் இந்த சாதனையை 166 இன்னிங்சுகளில் எட்டினார். ஆனால் கோலிக்கு இன்னும் 5 இன்னிங்ஸ் இருக்கிறது. இதனால் கோலி அவரின் சாதனை அடுத்த போட்டியில் முறியடித்து விடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது 160 இன்னிங்சுகளில் விளையாடியுள்ள கோலி 6,981 ஓட்டங்களை குவித்துள்ளார். (க)



இறுதி யுத்தத்தில் உயிரிழந்த கழக வீரர்களின் ஞாபகார்த்தமாக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் முள்ளியவளை வித்தியாவை வீழ்த்தி செல்வபுரம் சந்திரன் அணி சம்பியனாகியது. போட்டியின் ஆட்ட நாயகனாக சந்திரன் அணியின் பிரசாந்தனும் தொடர் ஆட்ட நாயகனாக அணியின் திலக்கும் தெரிவு செய்யப்பட்டு கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.(302)

# மேலும் ஒரு தொகுதி காணிகள் 6 மாத காலத்துக்குள் விடுவிப்பு

## மீள்குடியேற்ற அமைச்சர் உறுதி

ஆறுமாத காலப்பகுதியில் மேலுமொரு தொகுதி காணிகள் விடுவிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலை, மறுசீரமைப்பு புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

நீண்டகாலமாக தமிழ்மக்கள் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாக இந்நாளை சிறப்பாக கொண்டாடி வருகின்றார்கள். இது மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது. மூன்று தசாப்த யுத்தம் நிறைவுக்கு வந்துள்ளது.

பல துன்ப துயரங்களை கடந்து வந்திருக்கின்றோம். சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டியவர்களாகவுள்ளோம்.

எமது கடமைகளை நாம் சரியாகச் செய்யவில்லையெனக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தேவையான அனைத்தையும் உரிய காலக்கிரமதத்தில் படிப்படியாக வழங்கிக் கொண்டேயிருக்கின்றது.

எமது அரசாங்கம் உங்களால் தெரிவுசெய்யப்பட்டது. உங்களுக்கான தேவைகளை வழங்குவதனையே முதற்கட்ட இலக்காக கொண்டிருக்கின்றது. நாம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதன் பின்னர் வடக்கு கிழக்கில் பல காணிகளை விடுவித்துள்ளோம். அடுத்த ஆறு மாத காலத்தின் மேலுமொரு தொகுதி காணிகளை மக்களிடத்தில் கையளிப்பதற்கு தயாராகவுள்ளோம்.

தற்போது சிங்கப்பூர் பொருளாதாரத்தில் முன்னிலை நாடாக உருவாகிவருகின்றது. காரணம் அந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு முயன்ற பிரதமர் முதலில் பொது மக்களுக்கு சொந்த வீடுகளை கட்டிக்கொடுத்தார்.

அவ்வாறிருக்கையில் எமது நாட்டிலும் எமது மக்களுக்காக வீடுகள் அமைக்கும் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. தற்போது 65 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான கேள்விகோரல் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மிகவிரைவில் அந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. வடக்கு கிழக்கில் குளங்களை மீளவும் திருத்தியமைப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

அரசியல் கைதிகளை விடுவிப்பதே எமது நோக்கமாகவும் உள்ளது. பலத்த சிரமங்களுக்கு மத்தியில் அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படும்போது புனர்வாழ்வளிப்பது தவறானது போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுவதனால் அந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதில் நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது.

தற்போது இடம்பெயர்ந்த மக்கள் 32 முகாம்களில் தங்கியுள்ளார்கள். அவர்களை மீளவும் சொந்த நிலத்தில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்கவுள்ளோம். அதேநேரம் எமது அரசாங்கம் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பதையே இலக்காக கொண்டிருக்கின்றது என்றார். (எ-11)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் வருடாந்த இரத்த தான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மதியம் ஒரு மணிவரை கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி இரத்த தான முகாமில் அனைத்து குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இரத்ததான முகாமில் கலந்து கொள்ளும் குருதிகொடையாளர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## சிறுவர் துஷ்பிரயோகங்...

அந்த புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் பாலியல் ரீதியான துஷ்பிரயோகத்தில் ஏனைய நான்கு மாவட்டங்களை விடவும் யாழ்ப்பாணத்திலேயே அதிகளவான துஷ்பிரயோகங்கள் பதிவாகியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 68 சம்பவங்களும், முல்லைத்தீவில் 28 சம்பவங்களும், வவுனி யாவில் 22 சம்பவங்களும், கிளிநொச்சியில் 18 சம்பவங்களும், மன்னாரில் 13 சம்பவங்களும், பதிவாகியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பாலியல் துஷபிரயோகத்திற்கான முயற்சியாக முல்லைத்தீவில் 6 முறைப்பாடுகளும், வவுனியாவில் 5 முறைப்பாடுகளும், கிளிநொச்சியில் 4 முறைப்பாடுகளும், யாழ்ப்பாணத்தில் 2 முறைப்பாடுகளும், மன்னாரில் ஒரு முறைப்பாடுமாக பதிவுசெயயப்பட்டுள்ளது.

அத்துடன், உடல் சம்மந்தமான துஷ்பிரயோகங்களில் கிளிநொச்சியில் 22 முறைப்பாடுகளும், வவுனியா மற்றும் யாழ்ப்பாணத் தில் தலா 14 முறைப்பாடுகளும், முல்லைத்தீவில் 10 முறைப்பாடுகளும், மன்னாரில் 9 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அரசியல் கைதிகளின் விடுதலை...

அங்கு பிரதமர் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஆகியோர் உரையாற்றும் போது அரசியல் கைதிகளின் புனர்வாழ்வு விடயத்தில் சட்டத்தரணிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் என கூறியிருந்தார்.

அதேநேரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் கைதிகள் புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்ய முடியாமல் இருக்கின்றது. ஜனாதிபதியின் கருத்து அவசியமென்றும் கூறியிருந்தார்.

இந்த கருத்துக்கள் குறித்து தமது எதிர்ப்பினையும் கண்டனத்தினையும் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான கருத்துக்கள் சிலருடைய தனிப்பட்ட கருத்தாக அமைகின்றது. இலங்கையில் உள்ள அனைத்து அரசியல் கைதிகளும் புனர்வாழ்வின் பின்னர் விடுதலை செய்யப்படுவதையே விரும்புகின்றார்கள்.

124 அரசியல் கைதிகளுக்கு உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது. கடந்த வருடம் அரசியல் கைதிகளின் இரு உண்ணாவிரதத்தின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் ஆகியோர் புனர்வாழ்விற்கான கோரிக்கையினை முன்வைத்த போது, அனைத்து அரசியல் கைதிகளும் விருப்பம் தெரிவித்தனர்.

85 கைதிகள் புனர்வாழ்விற்கு உட்படுத்தப்படவுள்ளார்கள் என தெரிவித்த நிலையில், அதில் 14 பேர் தண்டனை பெற்ற கைதிகள்.

அரசு பரிசீலித்து தீர்வு தருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரும் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி புனர்வாழ்விற்குட்படுத்தப்படவுள்ள அரசியல் கைதிகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால், ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகளில் கொழும்பு மற்றும் மொனராகல, திருகோணமலை உள்ளிட்ட பல நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அந்தவகையில், அனைத்து வழக்கிலும் இருந்துவிடுவித்து, அதனூடாக புனர்வாழ்வு ஒரு தீர்வாக அமைய வேண்டும் என்று சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தார்களே தவிர, புனர்வாழ்வு திட்டத்தினை நிராகரிக்கவில்லை.

புனர்வாழ்வினை நிராகரிப்பதாக உண்மைக்குப் புறம்பான செய்திகளை அதிகாரிகள் தெரிவித்து வருகின்றார்கள். வாக்குறுதிகள் அளிக்கப்பட்டதன் பிரகாரம் 85அரசியல் கைதிகளின் புனர்வாழ்வினை பரிசீலனை செய்வதாக கூறியதைக் கூட நிறைவேற்றவில்லை. அரசியல் கைதிகளின் புனர்வாழ்வு விடயத்தினை பரிசீலனை செய்யாவிடின் எதிர்வரும் மாதம் சாத்வீக போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (எ-4)

## சர்வதேச...

சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். அட்லான்டிக் கவுன்சிலின் தென்னாசிய நிலையத்தின் கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான முயற்சிகளிற்கு இந்தியா, நோர்வே, ஜப்பான் ஆகிய நாடுகள் இராஜதந்திர உதவிகளை வழங்கின.

ஆனால் சர்வதேசசமூகத்தின் பரந்துபட்ட வலுவான கூட்டமைப்பு அவசியமாக காணப்பட்டது. இலங்கையின் உள்நாட்டுமோதல் போன்ற ஒன்றை கையாள்வதற்கு ஆரம்ப நாள் முதல் மிகுந்த பொறுமை அவசியமானதாக விளங்கியது.

நீங்கள் பொறுமையாகயிருக்கவும், ஏற்ற இறக்கங்கள் காணப்படும் என்பதை ஏற்றுக்கொள்ளவும் தயாராகயிருந்தால் மாத்திரமே உங்களால் சமாதான முயற்சிகளில கண்டிப்பாக தாக்கத்தை ஏற்படுத்த முடியும், இலங்கை அரசாங்கத்தினதும் விடுதலைப்புலிகளினதும் மூத்த அதிகாரிகளை கையாளும் போது போதிய தகவல் இன்மை பாரிய பிரச்சினையாக காணபபட்டது.

தமிழ்-சிங்கள உறவுகளை பயன்படுத்துவதற்கும் முக்கியமாக விடுதலைப்புலிகளின் தனித்துவமான தலைமைத்துவம் பற்றி அறிந்துகொள்வதற்கும் எங்களிற்கு பெரும் அணி தேவைப்பட்டது. சர்வதேச செயற்பாட்டாளர்களின் பரந்துபட்ட கூட்டணியால் இதனை செய்திருக்க முடியும். இலங்கையின் நவீன வரலாற்றின் மிகவும் நம்பிக்கையளிக்கக் கூடிய தருணத்தில் உள்ளோம், இதனைவிட எப்போதும் சிறப்பான வாய்ப்புகிடைத்ததில்லை என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## புதிய அரசிய...

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இலங்கையில் கொண்டுவரப்படவுள்ள புதிய அரசியலமைப்புக்கு பிரித்தானியா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் அழுத்தங்கள் இருக்கின்றதா என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போது பதிலளித்த அவர்,

புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கு பிரித்தானியா அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை என்றும் அவ்வாறு கொண்டு வரப்படுமானால் அதற்கு தலையீடு செய்யப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

இது இலங்கையின் தேவைக்கேற்றவாறு செய்யப்பட வேண்டிய ஒன்று என்றும், அதில் தலையீடு செய்வதற்கு தமது நாட்டிற்கு அதிகாரம் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை இராணுவ வீரர்களுக்கு பிரித்தானியாவில் பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் இந்த ஊடக சந்திப்பில் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் தற்போதுள்ள மனித உரிமை நிலைவரங்களுக்கு தான் மகிழ்ச்சி அடைவதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் திருப்தியளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கங்களை ஏற்படுத்துவதற்கான அனைத்து ஒத்துழைப்புக்களையும் பிரித்தானியா வழங்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (எ-11)

## விபத்துக்களால்...

(வயது 37) படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் வேம்படிச் சந்திக்கு அண்மையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கள் விபத்துக்குள்ளானதில் கொக்குவிலைச் சேர்ந்த ரஜீமான் கவிரேசன் (வயது 19), பாலச்சந்திரன் ஜெயலக்சன் (வயது 19) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

அத்துடன் கிளிநொச்சிக்கு வேலைக்காக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வேளை சங்குப்பிட்டி வீதியில் நாய் ஒன்று குறுக்கிட்டமையினால் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி விபத்துக்களில் படுகாயமடைந்த நால்வரும் யாழ் போதனா வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-12,30)

## சுவிஸ் செல்...

சுவிட்ஸர்லாந்தின் சூரிச் நகரில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

குறித்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுவிஸ் செல்லவுள்ளார்.

இந்த மாநாட்டிற்காக 40 நாட்டு அரச தலைவர்கள் உள்ளிட்ட 2,500க்கும் அதிகமான பொருளாதார வல்லுனர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நான்காவது தலைமுறையின் கைத்தொழில் புரட்சியாக இந்த மாநாடு நடைபெறவுள்ளதுடன் 46 ஆவது தடவையாக இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

மேலும், மாநாட்டிற்காக விசேட அழைப்பின் பேரில் பிரதமர் அங்கு செல்லவுள்ளார். இலங்கையின் அரச தலைவர் ஒருவருக்கு விசேட அழைப்பிதழ் கிடைக்கப்பெற்று சர்வதேச மாநாடு ஒன்றிற்கு செல்கின்றமை இது முதல் சந்தர்ப்பம் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அத்துடன் இந்த மாநாட்டிற்காக உலகின் சிறந்த வர்த்தக நிறுவனங்களின் தலைவர்களும் மாரிபாரா, பெசன்பாரோட், சத்யா நடேல்லா உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இந்த மாநாட்டிற்காக இலங்கையிலிருந்து பிரதமருடன் அமைச்சர் ரவி கருணாநாயக்க, சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-11)

## தமிழ் கலா...

க்கூடியதாக உள்ளது.

இதிலிருந்து வெள்ளைக்காரப் பெண்கள் தமிழ் கலாசாரத்தை மதிப்பது புலப்படுகின்றது.

தமிழர் சலாசாரத்தை அழித்து வரும் நிலையில் இதற்கு தமிழர்களும் உடந்தையாக உள்ள காலத்தில் தமிழரின் பிரதான நிகழ்வான தைப்பொங்கல் நாளில் யாழில் சேலை உடுத்தி ஆலய வழிபாடுகளில் வெள்ளைக்காரப் பெண்கள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## போர்க்குற்ற...

வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் நிபுணர்கள் செயற்பாட்டு ரீதியாக பங்களிக்கும் வகையில் உள் வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை சிவில் சமூகத்தினர் மத்தியில் வலுபெற்று வருகின்றது.

இலங்கையின் முக்கிய சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் 40 பேர் மற்றும் 11 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் என்பன இணைந்து இது தொடர்பான கடிதமொன்றை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (எ-11)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



(சி-3396)

அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

வெற்றிடங்கள்

வீட்டுப்பணிப்பெண்கள், வீட்டு சாரதி, மேசன் பாஸ், A/C டெக்னிசியன், எலச்ரிசியன், சமையல்காரர்கள், லேபர்ஸ், ஹெல்பர் உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப தொழில்கள் எம்மிடம் கிடைக்கப்படும்

IKEA Travels & Tours Pvt Ltd (LLC 3097)
Contact : 021 222 42 20 / 077 81 81 892
62/34, Stanly Link Old Post office Road, Jaffna
www.ikeatourslk.com

(C-3398)

யாழ் புத்தகசாலையின் புதிய வரவுகள்

எழுத்துப் பிழை, பொருட்பிழை, சொற்பிழை அற்ற விரிவான விளக்கங்களுடன் கூடிய மாதிரி வினாவிடை துணை நூல்

வரலாறு



ஆசிரியர்: கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு

சைவநெறி



விலை: ~~430/-~~ 350/-

விலை: ~~350/-~~ 280/-

(C-3463)

305,307,309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0212217874, 0778349507

வேலையாட்கள் தேவை

1) விற்பனையாளர் (நகைக்கடை)
2) படப் பிடிப்பாளர்கள், கிராபிக்ஸ் டிசைனர், பயிலுநர்கள் (கலர்,லாப்பிற்குரிய வேலையாட்கள்)

தொடர்புகளுக்கு :
(C-3461) 0772349933

## 55 இந்திய...

இவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்து மீறி, மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அண்மைக்காலமாக கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த மீனவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் விடுதலை செய்யப்பட்டு, தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, மன்னாரில் 18 இந்திய மீனவர்களும், மல்லாகத்தில் 4 இந்திய மீனவர்களும், அனுராதபுரத்தில் 29 இந்திய மீனவர்களும் விடுதலைக்கான அனுமதி கிடைக்கப்பெறாது தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, இவர்களுக்கான அனுமதி கிடைத்ததும் இவர்கள் நாடு திரும்புவார்கள் என யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதுவர் நடராஜன் தெரிவித்தார். (எ-11)

## கருத்துக் கணி...

ந்துள்ள அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான மக்கள் ஆலோசனை குழு செயலாளர் காரியாலயத்தில் இடம்பெறும்.

அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் ஆலோசனைகளை தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் மூலம் முன்வைக்க முடியும் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொலைபேசி இலக்கமான 0112 437 676, தொலைநகல் இலக்கமான 0112 328 780 ஆகிய இலக்கங்களின் மூலம் மக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும் என அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (செ-12)



யாழ். புத்தகசாலையின்

(சி-3463)

2016 ஆம் புதிய கல்வி ஆண்டுக்கான

மாபெரும் மலிவு விற்பனை

இச்சலுகை 15.02.2016 வரை மட்டுமே.

அனைத்து புத்தகங்களுக்கும் 15% முதல் 20% வரையிலான விசேட விலைக்கழிவுகள்.

1000/- மேல் கொள்வனவு செய்யும் புத்தகங்களுக்கு 15 % விலைக்கழிவும் 2500/- மேல் கொள்வனவு செய்யும் புத்தகங்களுக்கு 20% விலைக்கழிவும்.

யாழ். புத்தகசாலை

305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 0212217874, 0778349507
யாழ் கிளையில் Visa Card, Master Card மூலம் கொள்வனவு செய்யும் வசதியும் உண்டு.

கனகபுரம் விளையாட்டுக்கழக சந்தி, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
T.P : 0214917467
0778349507
நேரம் காலை: 08.00 - இரவு 07.00

தேவை

நல்லூரில் அமைந்துள்ள திருமண அழைப்பிதழ் காட்சியறைக்கு பொறுப்பாக நடத்தக் கூடிய பெண் ஒருவர் தேவை. தகுதி O/L போதுமானது.

தொடர்புகளுக்கு
0770256640 (C-3399)

வேலையாள் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு கணனி அச்சகவேலை, டிசைனிங் வேலை தெரிந்தவர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு:-
0750854796

(c-3464)

நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு அவதானம்

அதிகளவு சீனிப் பண்டங்களை உண்பதனால் நீரிழிவு நோய் ஏற்பட்டு விரைவாக மரணம் ஏற்படலாம்.

Sugar Kills. Consume with care.

அனுசரணை: அன்னை மரக்காலை
(3301)
174 A, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம் - 021 221 7544



✓ உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை.
✓ 5Kgக்கு மேற்பட்ட பாசல்களுக்கு விலைக்குறைப்பு
✓ 3 - 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
✓ உங்கள் வீட்டில் இருந்தவாறே பொருட்கள் பொறுப்பேற்று உரிய முறையில் ஒப்படைக்கப்படும் சேவை.

Kannathasan Global Cargo & Courier
தொடர்புகளுக்கு
140, Palaly Road, kantharmadam, Jaffna.
Hotline : 021 222 7555, 0766901516

(C-3352)

CCTV

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



(சி-3455)

CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு
Next Batch : 22-January-2016 *(Condition Apply)

ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
021-4926222,077-3013060

க.பொ.த உயர்தர (A/L)
தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான
புதியதோர் தனியார் கல்வி நிறுவனம்

NEW
College of Technology

NEW COLLEGE OF TECHNOLOGY
NCT
JAFFNA

2018 A/L
2017 A/L
2016 A/L
Day Class (2016)

(3306)

யாழ் நகரில் விரைவில் ஆரம்பம்...
Facebook/New College Of Technology - Jaffna

Study Medicine

MBBS

Approved by Sri Lankan Medical Council
UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO

* Riga Strands University - Latvia
* International Medical University - Malaysia
* Manipal University - India / Malaysia
* Segi University - Malaysia
* Sichuan University - China
* China Medical University - China
* Tongji University - China
* Guangxi University - China
* Zhengzhou University - China
* Ningbo University - China
* Gomel State Medical University - Belarus
* Vitebsk State Medical University - Belarus



(சி-3455)

Admission Open for the Year 2016
Limited Seats are Available

ICS Study Medicine Abroad
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B-1/1 Galle Road, Colombo 06

Appointments
076 7013060

UK
Australia
Canada

EXPERIENCE 7 YEARS EXPERIENCE

எந்தவொரு நாட்டிலும், விரும்பிய எந்தத் துறையிலும் பட்டக்கல்வியைத் தொடர

Student Visa
With Work Permit & PR



IELTS அவசியமில்லை

வங்கிக்கடன் வசதி

VISIT VISA – SPOUSE VISA – WORK VISA
DEPENDANT VISA – SKILLED MIGRATION

SIKARAM
Any Visa to Any Country

மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
www.sikaram.lk

Tel: 0777 32 4004 , 021 222 00 11
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 | 17.01.2016 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 49



# உரிமையை உரிமையோடு கேட்கவேண்டும்




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

தைத்திங்களின் முகிழ்ப்பின் முதலாவது ஆலடி மாநாடு என்பதால் மாநாட்டிற்கு அனைவரும் நேர காலத்தோடு வந்திருந்தனர்.

பண்டிதர் பரமலிங்கத்தின் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

**பண்டிதர்:** அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். தை பிறந்தால் வழிபிறக்கும் என்பது எங்கள் நம்பிக்கை. எனவே பிறந்துள்ள தைப் பிறப்பு எங்கள் தமிழினத்திற்கு வழி பிறக்கச் செய்யவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்போம்.

(பண்டிதரின் அறிவிப்போடு அனைவரும் எழுந்து நின்று இறைவனைப் பிரார்த்தனை செய்து நிறைவு படுத்தினர்)

**வாத்தியார்:** இந்த முறை தேசியத் தைப் பொங்கல் யாழ்ப்பாணத்திலுள்ள பலாலியில் நடந்திருக்குது. ஏதேனும் மாற்றங்கள் நடக்குமோ!

**விதானையார்:** முன்பெல்லாம் பலாலியில இருந்து தானே ஷெல் அடிக்கிறவியள். ஆற்ற தலையில விழுந்தாலும் தமிழன்ர தலையில விழுகிற திருப்தியில எத்தனை ஆயிரம் ஷெல்களை பலாலியில் இருந்து அடித்திருப்பினம். என்ன செய்யிறது? கடந்த யுத்தத்தில் தமிழினம் பட்டபாடு கொஞ்ச நஞ்சமோ. இருந்தும் எங்கட அரசியல்வாதிகள் எல்லாவற்றையும் மறந்திட்டினம்.

**கங்காணி:** பலாலியில நடந்த தேசிய பொங்கலில ஜனாதிபதி மைத்திரி கலந்து கொள்வதாக இருந்தது. எனினும் அவர் வரவில்லையாம். என்ன காரணமோ தெரியவில்லை.

**விதானையார்:** கங்காணியார் ஏன் நீங்கள் அறியவில்லையோ? ஜனாதிபதி மைத்திரியை பழிவாங்கிறதுக்கு திட்டம் தீட்டப்படுவதாக. இதனாலதான் ஜனாதிபதி தேசிய பொங்கல் விழாவிற்கு வரவில்லையாம்.

**மூப்பர்:** இருக்கும் இருக்கும். ஜனாதிபதி மைத்திரி ஒரு எளிமையான மனிதர். பாதுகாப்பு, பந்தோபஸ்து எதுவும் கிடையாது. வெரி சிம்பிளாக வந்து போறவருக்கு ஆபத்து ஏற்படுத்துகிறது சுகம்தானே.

**வாத்தியார்:** . பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பலாலியிலுள்ள இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்குச் சென்று தைப்பொங்கலை ஆரம்பித்து வைத்தபோது அங்கு சென்றிருந்த பலாலிச் சனங்கள் எல்லாம் எங்கட ஊருக்கு எங்கள விடுங்க என்று கேட்டவியள். தேசிய தைப்பொங்கலோட பலாலியில தங்கட இடங்கள், வீடுகளைப் பார்க்கச் சென்றவர்கள் ஓவென்று அழுதது அங்கு நின்ற அனைவரையும் கலங்கவைத்துப் போட்டுது.

குடியிருந்தவீடு, ஓடித் திரிந்த ஒழுங்கை என எதுவும் கிடையாது. அங்க ஆமிக்காரர் தோட்டம் செய்யினமாம்.

இந்தக் கோலத்தில தை மாதப் பிறப்பில எங்கட சனங்கள் கண் ணீர் விட்டு அழுகிறதைத் தவிர வேறு எதைத்தான் செய்ய முடியும்.

**பண்டிதர்:** தைப்பிறப்பில ஒரு நல்ல சங்கதியும் நடந்திருக்குது.

**வாத்தியார்:** என்ன பண்டிதர் நல்ல செய்தியோ.

**பண்டிதர்:** ஓமோம் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவோட ஒருநாளும் கதைக்கமாட்டன் எண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தந்தித் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில சொன்னவர்.

வடக்கின் முதலமைச்சரோட ஒருபோதும் கதைக்க மாட்டன் என்று தந்தித் தொலைக்காட்சிக்குச் சொன்ன ரணில் பொங்கல் விழாவில முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவோட நல்லாச் கதைச்சார். முதலமைச்சரும் வந்தாரை வரவேற்கும் தமிழர் பண்பாட்டை நல்ல முறையில செய்து காட்டினார்.

**விதானையார்:** இருந்தா எங்கட விக்னேஸ்வரன் ஐயா மாதிரி இருக்க வேணும். வந்தவரை வரவேற்பது தமிழன் பண்பாடு என்பதை நிரூபிப்பதாக பிரதமர் ரணிலுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்த முதலமைச்சர் வீரசிங்கம் மண்டபத்தில ஏறி ஆற்றின உரையைக் கேட்டு தமிழ்ச் சனங்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தவியள் தெரியுமோ!

தைப்பொங்கல் எல்லா வீடுகளிலும் நடந்ததோ இல்லையோ முதலமைச்சர்விக்னேஸ்வரன் ஐயாவின்ர உரையைக் கேட்ட அத்தனை தமிழ் உள்ளங்களின்ர மனங்களும் மகிழ்ச்சியால் பொங்கின என்பது மட்டும் உண்மை.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். வடக்கின் முதலமைச்சர் ஒரு நீதியரசர். அவர் பதவிக்கு ஆசைப் படாதவர். தமிழ்மக்களின்ர உரிமைகள் நலன்கள் தொடர்பில கதைப்பதில அவருக்கு எந்த இடைஞ்சலும் இருக்காதுதானே.

வேற, எங்கட கூட்டமைப்புக்காரர் சிலர் அரசோடு சேர்ந்து சுகம் அனுபவிக்க நினைப்பதால எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கினம்.

இவையள் தானே பிரதமர் ரணிலையும் முதலமைச்சர் விக்னேஸ்வரனையும் கதைக்கவிடாமல் தடுத்தவியள்.

**கங்காணி:** அப்ப ஏன் இப்ப கதைக்கவிட்டவியள்.



**மூப்பர்:** இப்பதானே தமிழ்மக்கள் பேரவை உதித்திருக்கு. மக்கள் இயக்கமாக தமிழ்மக்கள் பேரவை உதயமாகியதால் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவை அனுசரித்துக் கொண்டு போறதுதானே ஒரேவழி.

**கங்காணி:** அட சங்கதி அப்படியோ!

**விதானையார்:** அண்மையில முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவைச் சந்தித்த வடக்கு மாகாண சபை உறுப்பி னர்களில ஒரு சிலர் எங்கட முதலமைச்சர் எங்களோட இருக்க வேணும் எண்டு கேட்டவியளாம்.

**வாத்தியார்:** அப்ப தமிழ்மக்கள் பேரவைக்கு யாராம் முதலமைச்சர்.

அவையள் எங்கட முதலமைச்சர் எண்டு சொன்னால் தமிழ்மக்கள் பேரவையும் எங்கட முதலமைச்சர் எண்டு தானே சொல்லுவினம்.

**பண்டிதர்:** வடக்கு மக்கள் அனைவருக்கும் விக்னேஸ்வரன் ஐயாதான் முதலமைச்சர். பேரவையினூடாக தமிழ்மக்களின்ர உரிமைகளை அடைய முதலமைச்சர் எடுக்கின்ற முயற்சிகளுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தங்கட ஒத்துழைப்புகளை வழங்க வேணும். இது அவர்களின்ர தார்மீகக் கடமை.

**வாத்தியார்:** மக்கள் இயக்கமாக பேரவை கொடி கட்டிப் பறக்கும் போது பேரவையை விமர்சித்தவியள் அனைவரும் தாமாக முன் வருவினம். இது நடக்க வேணும் எண்டால் தமிழ் மக்கள் பேரவையை ஆதரித்து தங்கட பரிபூரண ஒத்துழைப்பை மக்கள் வழங்க வேணும். தனிய அரசியல் வாதிகளை நம்பி, எங்கட உரிமைகளுக்கெல்லாம் அவர்களே பொறுப்பு என்றுவிட்டால் எல்லாம் அம்போதான்.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. பேரவையை உருவாக்கியதால தமிழ் அரசியல் கட்சிகள் இப்ப ஓடித் திரியினம். இதுவே பேரவைக்கு வெற்றிதானே!

**மூப்பர்:** அதுமட்டுமல்ல பேரவை பற்றி சிலர் கடும் விமர்சனம் செய்யியனம். எல்லாம் பயத்தின் உச்சம் தான்.

**பண்டிதர்:** இந்தப் பயணம் இப்ப நேற்றுத் தொடங்கினது அல்ல. முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் ஐயாவைக் கொண்டு வந்த போது தொட்ட பயம் பேரவையால உச்சமாகியிருக்கு அவ்வளவுதான்.

**வாத்தியார்:** என்ன நடக்க வேணும் என்று கடவுள் நினைக்கிறானோ அது நடக்கும்.

**கங்காணி:** சரி... சரி... சூரியனும் மின்னி மின்னி முழிக்கிறார். நாங்களும் நேரகாலத்தோட வீட்ட போவம்.

**வாத்தியார்:** தைப்பொங்கலில மருந்தடித்த வாழைப் பழத்தையும் வெம்பின மாம்பழத்தையும் படைத்தால் சூரியனுக்கு சுகவீனம் ஏற்படத்தானே செய்யும். அதுதான் சூரியனும் மின்னுகிறார் போல.

(மாநாட்டில் சிரிப்பு)

**பண்டிதர்:** இந்த ஆண்டில தமிழினம் உரிமைகள் பெறுவதற்கு கடவுள் உதவுவான் என்று நம்புவம்.

இப்படிப் பண்டிதர் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து ஆலடிப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# உரிமையை உரிமையோடு கேட்க வேண்டும் இரந்து கேட்பது தமிழருக்கு இழிவாம்




2016ஆம் ஆண்டில் இனப் பிரச்சினைக்கான தீர்வு கிடைத்துவிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியிருந்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் பிரசாரத்தின் போதே மேற்போந்த உறுதிமொழியை அவர் தமிழ்மக்களுக்கு அளித்தார்.

2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினை தீருமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்பதில் தமிழ்மக்களுக்கு அதிக சிரமம் இருக்காதென்பதும் உண்மை. 30 ஆண்டு காலம் விடுதலைப் போராட்டத்தை நடத்திய தமிழினம் இன்று தமது உரிமையை இரந்து கேட்கின்ற அவல நிலையை அடைந்துள்ளமை வேதனைக்குரியது.

இந்த அவல நிலையை ஏற்படுத்தியவர்கள் எங்கள் தமிழ் அரசியல் தலைமை என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.



30 ஆண்டுகால விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப்புலிகள் எங்கோ ஓர் இடத்தில் அரசியல் தீர்வு பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும் என்பது உண்மையாயினும் அத்தகையதோர் தீர்வை நோக்கிச் செல்லாததன் விளைவும் போராட்டத்தின் நீண்டகால நகர்வும் உலகமயமாதலின் போக்கும் எங்களின் விடுதலைப் போராட்டத்திற்கு மாரகச் சனியாகிப் போயிற்று.

எனினும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரை நடத்திய இலங்கை அரசு இழைத்த போர்க்குற்றங்கள் ஏராளம் என்பதுடன் தமிழின அழிப்பாகவே புலிகளுக்கு எதிரான யுத்தம் நடந்து முடிந்தது என்ற கருத்தியலும் சர்வதேசத்திற்கு உண்டு.

இவற்றையெல்லாம் ஆதாரப்படுத்தும் வகையில் சனல் 4 தொலைக்காட்சியின் காணொலிகள் உள்ளன.

இலங்கையில் நடந்த போரைத் தடுத்து நிறுத்தாமை ஐக்கிய நாடுகள் சபை விட்ட மகா தவறு என்பதை ஒரு கட்டத்தில் அதன் செயலாளர் பான் கீ மூன் ஏற்றுக் கொண்டிருந்தார்.



## மகிந்தவை தேசியத் தலைவர் என்று சம்பந்தர் புகழ்ந்தது எதற்காக?

இவற்றின் மத்தியில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கெதிரான போர்க்குற்ற விசாரணை கொண்டு வரப்பட்டது.

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்ற தீர்மானம் கூட, ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவையில் நிறைவேறிய நிலையில் இலங்கையில் நடந்த ஆட்சி மாற்றத்தில் எல்லாக் குற்றங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறந்து போயிற்று.

ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் ஆகியோர் நடத்துவது நல்லாட்சி என்ற நினைப்போடு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொடுத்து நல்லாட்சி தமிழர்களின் குரலை அடக்கிக் கொண்டது.

இதன் விளைவாக ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கையில் நடந்த போர்க்குற்ற விசாரணை தொடர்பில் விட்டுக்கொடுப்பு ஒன்று கனகச்சிதமாக நடந்தேறியது.

ஈழத்தமிழினத்தில் அதிகம் உச்சரிக்கப்பட்ட சொல்லாக துரோகத்தனம் என்பதையே இனங்காண முடியும். யாரும் எவருக்கும் மிக எளிதாகச் சொல்லக்கூடிய பட்டமாக துரோகி என்ற சொல் இருந்துள்ளது. இந்தச் சொல்லின் எளிமையான பயன்படுத்தலே தமிழினத்தின் பண்பாட்டை, நேர்மையை, நீதியை இரக்கத்தை அடியோடு இல்லாது செய்தது. இதன் காரணமாகவோ என்னவோ விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கொன்றொழிக்கப்பட்ட பின்னர் சர்வசாதாரணமாக துரோகத்தனங்கள் நடந்தேறலாயின. அதில் ஒன்றுதான் சர்வதேச விசாரணை என்பதை விட்டுக்கொடுத்து இலங்கை அரசுடன் இணங்கிப் போதல் என்ற முடிவாகும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர்க்குற்றங்களை சர்வதேச சமூகம் விசாரிக்கவேண்டும். இதற்கு நல்லாட்சி உதவவேண்டும் என்று தமிழ்த் தரப்புகள் கேட்டிருந்தால் எங்களுக்கான உரிமையை சர்வதேச சமூகம் தானே பொறுப்பெடுத்து இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்கும். ஆனால் தமிழ் அரசியல் தலைமைக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவியைக் கொடுத்துவிட அட நீ என்ன செய்தாலும் நான் உங்களுக்கு உதவுவேன் என்பதாக பதவி ஆசை எல்லாவற்றையும் நாசம் செய்தது.

ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவையில் கலந்து கொண்ட இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் இருந்து நாடு திரும்புவதற்கு முன்னதாக கூறியது; மின்சார நாற்காலியில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றியுள்ளேன் என்று.

ஆக, மின்சார நாற்காலியில் இருந்து மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றினேன் என்று அமைச்சர் மங்கள கூறுவதற்குள் தமிழினத்தைக் கொன்றொழித்த ஒருவரை நல்லாட்சி காப்பாற்றியுள்ளது என்ற உண்மை அடங்கியுள்ளது.

இந்த உரைக்குப்பின்பேனும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அந்தோ! நல்லாட்சியும் தமிழர் தலையில் மண்ணை அள்ளிக் கொட்டிவிட்டிதன்றோ என்று உரக்கக் குளறியிருக்க வேண்டாமோ?

என்ன செய்வது? எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற்றுக்கொண்டதற்கு நன்றி செலுத்துவதற்காக அவர் பேசாமல் இருந்தாரா.

இப்போது சர்வதேச சமூகமும் எங்களைக் கைவிட்டு விட்டது என்பது தெரிகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர் சர்வதேச சமூகத்தின் கரத்தைப் பிடித்து நீங்கள்தான் எங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும். இலங்கை அரசை எக்காலத்திலும் நம்பமுடியாது என்று சர்வதேசத்திடம் முறையிடுவது தான் சம்பந்தரின்- கூட்டமைப்பின் கடமையாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் இதைச் செய்யாத சம்பந்தர் பாராளுமன்றத்தில் வைத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தேசியத் தலைவர் என்று புகழாரம் சூட்டுகிறார். அந்தோ அநியாயம்.

போர்க்குற்றம் தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டியவருக்கு தேசியத் தலைவர் என்று பட்டம் சூட்டியது ஏன்? இங்கு தமிழ்மக்கள் தங்கள் பார்வையைச் செலுத்த வேண்டும். அட தமிழ்மக்கள் பேரவையில் இடம்பெற்ற அரசியல் கட்சிகள் மக்களால் தூக்கியெறியப்பட்டவை என்று கூறும் சம்பந்தருக்கு ஜனாதிபதித் தேர்தலில் தோற்றவர் மட்டும் தேசியத் தலைவராகத் தெரிந்தது எப்படி? எல்லாம் [illegible] நட்பின் பாசம்[illegible]

விதுரன்




# மூன்று தலைகள்!

மாமன்னர் அசோகர் குடிமைப் பணிகளைப் பார்வையிட்டு அரண்மனை திரும்பிக்கொண்டிருந்தார். போரே மன்னனின் தொழில் என்றிருந்த அவர், புத்தரின் பாதையில் அன்பு வழி போதும் என, மனதளவில் மாற்றம் அடைந்திருந்த நேரம்!

இப்போது அவருக்கு எதிரில் வந்து கொண்டிருந்த ஒரு வயோதிப துறவியும் அவரது சீடர்களும் மன்னருக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றனர்.

அசோகரின் பார்வை ஒதுங்கி நின்ற துறவி மீது பட்டது. உடனே தமது இரதத்தை நிறுத்திவிட்டு இறங்கிச் சென்று புத்தபிக்குவின் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். அவரது ராஜமுடி துறவியின் காலில் பட்டது.

ஒரு புன்னகையுடன் துறவி தமது கைகளை உயர்த்தி மன்னனை ஆசீர்வதித்தார். இதைப்பார்த்துக் கொண்டிருந்த அமைச்சருக்கு ஒரே சங்கடம்.

எத்தனை பெரிய ராஜ்ஜியத்தின் அதிபதி... உலகமே வியக்கும் ஒரு பேரரசன், போயும் போயும் இந்த பரதேசியின் காலல் விழுந்து, முடியை வேறு காலில்படவைத்துவிட்டாரே! என்று நினைத்து உள்ளுக்குள் கொஞ்சம் கோபமும் எரிச்சலும் அடைந்தார்.

அரண்மனை சென்றதுமே அசோகரிடம் தனது வருத்தத்தை வெளிப்படுத்தினார். அமைச்சரின் பேச்சைக் கேட்ட மன்னர் சிரித்தார். ஆனால், அமைச்சரின் கேள்விக்குப் பதிலளிக்கவில்லை. அவரிடமிருந்து ஒரு விசித்திர உத்தரவு வந்தது அமைச்சருக்கு.

“மந்திரியாரே... ஓர் ஆட்டுத்தலை, ஒரு புலித்தலை, ஒரு மனிதத்தலை மூன்றும் எனக்கு உடனே வேண்டும். ஏற்பாடு செய்யுங்கள்” என்றார் மன்னர். நாம் சொன்னதென்ன... இவர் உத்தரவென்ன.. என்ற திகைப்புடன் கட்டளையை சிரம் மேற்கொண்டு ஏவலாட்களை நாடெங்கும் அனுப்பினார்.

ஆட்டுத் தலைக்கு அதிகம் கஷ்டப்படவில்லை. கறிக்கடையில் கிடைத்துவிட்டது. புலித்தலைக்கு ரொம்பவே அலைய வேண்டிவந்தது. கடைசியில் ஒரு வேட்டைக்காரனிடம் அது கிடைத்தது. ஆனால், மனிதத் தலை? உயிரோடிருப்பவனை வெட்டித் தலையை எடுத்தால் அது கொலை... அப்படியானால் என்ன செய்யலாம் என யோசித்த போது. வழியில் ஒரு சுடுகாடு தென்பட்டது. அங்கே புதைக்கக் கொண்டுவந்த ஒரு பிணத்தில் தலையை எடுத்துக் கொண்டனர்.

மன்னரிடம் கொண்டுபோனார்கள். மூன்று தலைகளையும் பார்த்த அசோக மன்னர் தன் அமைச்சரிடம் “சரி, இம் மூன்றையும் சந்தையில் விற்றுப் பொருளாக்கி வாருங்கள்” என்றார்.

மன்னரின் கட்டளைப்படி சந்தைக்குச் சென்றவர்களுக்கு ஆட்டுத்தலையை விற்பதில் எந்தச் சிக்கலும் இல்லை. பதிலுக்கு பண்டமும் கிடைத்தது.

புலியின் தலையை வாங்க யாரும் முன்வரவில்லை. பலரும் அதை வேடிக்கை தான் பார்த்தார்கள். கடைசியில் ஒரு பணக்காரர், தன் வேட்டை மாளிகையை அலங்கரிக்க அதை நல்ல விலை கொடுத்து வாங்கிக்கொண்டார்.

இப்போது மனிதத் தலைதான் மிச்சமிருந்தது. அதைப் பார்க்கவே யாரும் விரும்பவில்லை. அருவருத்து ஓடினர். வேறுவழியின்றி மனிதத் தலையுடன் அரண்மனைக்கே திரும்பினர் ஏவலாட்கள்.

மன்னரிடம் போய், விவரத்தைச் சொன்னார் அமைச்சர்.

“அப்படியா... சரி, யாரிடமாவது இலவசமாகக் கொடுத்துவிட்டு வந்துவிடுங்கள்” என்றார் மன்னர்.

ஒரு நாளெல்லாம் அலைந்தும் இலவசமாகக் கூட அதனை பெற்றுக்கொள்ள யாருமே முன்வரவில்லை.

விஷயத்தைக் கேட்ட அசோக மன்னர் புன்சிரிப்புடன் இப்படிக் கூறினர்:


“மந்திரியாரே! நீங்கள் தெரிந்து கொண்டது என்ன?”

அமைச்சர் மவுனம் காத்தார்.

“மனிதனின் உயிர் போய்விட்டால் இந்த உடம்புக்கு மரியாதை ஏது? சக மனிதன்தானே.. வாங்கி வைத்துக்கொள்ளலாம் அல்லவா... ஆனால், நடைமுறையில் இலவசமாகக் கொடுத்தாலும் அருவருத்து ஓடுகிறார்கள்... இதை யாரும் தொடக்கூட மாட்டார்கள்.

இருந்தும் இந்த உடம்பு உயிரும் துடிப்புமாக உள்ளபோது என்ன ஆட்டம் ஆடுகிறது! செத்த பின்பு நமக்கு மதிப்பில்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால், உடலில் உயிர் இருக்கும்போது, தம்மிடம் எதுவும் இல்லை என்றுணர்ந்தவர்தான் ஞானிகள். அத்தகைய ஞானிகளை விழுந்து வணங்குவதே ஞானத்தைப் பெறும் முதல் வழி...!” என்றார்.

அமைச்சர் தலை கவிழ்ந்து நின்றார்.



# புதன் கிரகம்... புதிய தகவல்கள்

**புதன்** கிரகத்தில் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியங்கள் இருக்க முடியாது. ஏனெனில், அது ஏனைய கிரகங்ளிலும்பார்க்க சூரியனுக்கு மிக அண்மையில் உள்ளது. இதனால், அதிக வெப்ப நிலை கொண்டபாகம் காணப்படுகி (427பாகை செல்சியஸ்) இதன் குளிர்ந்த பகுதி வெப்பநிலை, மைனஸ் 173பாகைசெல்சியஸ்.வளிமண்டலமும் மிகக் குறைவு. சூரியனிலிருந்து கிடைக்கப் பெற்ற ஹதரசன், ஈலியம் உட்பட ஒட்சிசன், சோடியம், பொற்றாசியம்போன்றவையும் இதன் வளிமண்டலத்தில் காணப்படுகிறது. இதன் மேற்பரப்பு, சூரியக் காற்றின் வெடிப்பினால் தாக்கப்படுகின்ற ஒரு பரப்பாகவே எப்பொழுதும் காணப்படுகிறது. புதனின் மேலோடு பூமியினதை விடவும் மெல்லியது (500-600கி.மீ) ஈர்ப்பவிசை வியாழனின் ஈர்ப்பு விசைக்கு நிகரானது. புதனின் ஒரு நாள் என்பது, பூமியின் 58.65 நாட்கள். ஏனெனில் இது மிகமெதுவாகவே சுழல்கிறது. இது சூரியனை ஒருமுறை சுற்றிவர பூமியின் 87.97 நாட்கள் எடுக்கும். இங்கு சமுத்திரம் இல்லை. ஆனால், அதன்துளைகளில்ஐஸ்கட்டியைக்கொண்டிருக்கிறது.

புதன் கிரகம்; சூரிய உதயத்துக்குச் சற்று முன்பாக கிழக்கே அடிவானில் மங்கலான ஒளிப் புள்ளியாகச் சிறிது நேரம் தென்படும். அல்லது மேற்கு வானில் சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகு இதே போல சிறிது நேரம் மங்கலான ஒளிப்புள்ளியாகத் தெரியும.புதன் கிரகம் வடிவில் சிறியது. அது சூரியனை நீள் வட்டப்பாதையில் சுற்றுவதால் ஒரு சமயம் சூரியனிலிருந்து 46 மில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. வேறு ஒரு சமயம் 70 மில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

புதன் கிரகத்தில் பனிக்கட்டிகள் வடிவில் தண்ணீர உள்ளதாக இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. புதன் கிரகத்தைச் சுற்றி வந்த மெசஞ்சர் விண்கலம் இதைக் கண்டுபிடித்துள்ளது. அந்த கிரகத்தில்பகல்என்பது சுமார் மூன்று மாதம். இரவு என்பது சுமார் மூன்று மாதம்.

பகலாக உள்ள பகுதியில் வெயில் 427 டிகிரி செல்சியஸ். புதன் கிரகத்தின் வானில் 11 சூரியன் பிரகாசித்தால் எப்படி? அந்த அளவு வெயில். இரவாக உள்ள பகுதியில் மைனஸ் 173 டிகிரி.

ஆனால், புதன் கிரகத்தின் வட துருவப் பகுதியில், தண்ணீரானது பனிக்கட்டி வடிவில் உள்ளதாகக்கண்டறியப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் ஏதோ உறைந்த பனிக்கட்டி வடிவில் இருப்பதாக ராடார் மூலம் கண்டறியப்பட்டிருந்தது என்றாலும் பனிக்கட்டி வடிவில் இருப்பது தண்ணீர தானா என்பது நிச்சயமாகத் தெரிய வரவில்லை. ஏனெனில் வேறு வகை வாயுக்களும் உறை பனி வடிவில் இருக்க முடியும்.

ஆனால், புதன் கிரகத்தில் வட துருவப் பகுதியில் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள உறை பனிக்கட்டிகள் வெளியிலிருந்து ‘இறக்குமதி’ ஆனவை. அதாவது வால் நட்சத்திரங்கள் கொண்டு வந்து சேர்த்தவை.


வால்நட்சத்திரங்களைப்பனிக்கட்டி உருண்டைகள் என்றும் கூறலாம். அந்த பனிக்கட்டிகள் நீர உறைந்ததால் ஏற்பட்டவை. பல சமயங்களிலும் வால்நட்சத்திரங்கள், கிரகங்களில் வந்து விழுவது உண்டு. பூமியில் உள்ள நீரில் கணிசமான பகுதி




கடந்த வருடம் டிசெம்பர் 23ம் நாள் பூமியின் வானில் புதன் கிரகம்

பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வந்து விழுந்த வால்நட்சத்திரங்கள் மூலம் கிடைத்ததாக ஒரு கருத்து உண்டு.

புதன் கிரகத்தின் வட பகுதியில் உள்ள ஆழமான பள்ளங்களில் இப்போது காணப் படுகின்ற


புதன் கிரகத்தின் சராசரி ஆரை 2440 கி.மீ

புதன் கிரகத்தின் வெளிப்புறத் தோற்றம்


புதன் கிரகத்தின் வெட்டுமுகத் தோற்றம்- கோட்டுப்படம்

ஏராளமான அளவிலான பனிக்கட்டிகள்பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விதம் வால்நட்சத்திரங்களால் வந்து விழுந்த பனிக்கட்டி உருண்டைகளே என்று கருதப்படுகிறது

புதன்கிரக பனிக்கட்டி உருண்டைகள்வெண்மையாகக் காணப்படுவதற்குப் பதில் அவற்றின் மீது பல செண்டிமீட்டர் கனத்துக்கு கரும்பொடி காணப்படுகிறது. இக்கரிய பொடி அஸ்டிராய்ட் மற்றும்வால்நட்சத்திரங்களிலிருந்து வந்தவையே.


புதன் கிரகத்தில் வட துருவப் பனிக்கட்டிகள் உருகாததற்கு முக்கிய காரணம் உண்டு. புதன் கிரகம் கிட்டத்தட்ட அடென்ஷனில் அதாவது சாய்மானம் இன்றி தனது அச்சில் செங்குத்தாக அமைந்தபடி சுழல்கிறது. ஆகவே வட தென் துருவப்பகுதிகளில்என்றும் வெயிலே படாத சில பகுதிகள் உள்ளன. அங்கு தான் இந்த பனிக்கட்டிகள் காணப்படுகின்றன.

அமெரிக்க நாஸா 2004-ஆம் ஆண்டில் அனுப்பிய மெசஞ்சர் விண்கலம் 2011 மார்ச் மாதம் புதன் கிரகத்தை அடைந்தது அப்போ திலிருந்து அக் கிரகத்தை ஆராய்ந்து வருகிறது. புதன் கிரகத்தை நோக்கிச் செலுத்தப்படுகிற ஒரு விண்கலத்தை, சூரியனின் வெப்பம் கடுமையாகத் தாக்கும் மெசஞ்சர் விண்கலத்தை உருவாக்கிய போது இது கருத்தில் கொள்ளப்பட்டு மெசஞ்சர் விண்கலத்துக்கு ஒரு ‘நிழற்குடையை’ உருவாக்கினர்.

இந்தக்குடை விசேஷப்பொருளால் ஆனது. விண்கலத்தில் சூரியனை எதிர்கொள்ளும் பகுதியில் இரண்டரை மீட்டர் நீளமும் இரண்டு மீட்டர் அகலமும் கொண்ட ‘விரிப்பு’ பொருத்தப் பட்டது. இந்த விரிப்பின் - சூரியனைப் பார்த்த - வெளிப்புறம் பளபளப்பானது.

எப்போதுமே பளபளப்பான பகுதியானது வெப்பத்தைத் திருப்பி அனுப்பக்கூடியது. இந்த விரிப்பின்மீது படும் வெயிலின் அளவு 370 டிகிரி செல்சியஸாக இருக்கலாம். ஆனால் விரிப்பின் உட்புறத்தில் வெப்ப அளவு வெறும் 20 டிகிரி செல்சியஸாக உள்ளது.

புதன் கிரகத்தின் வெப்பம் மெசஞ்சர் விண்கலத்தைத் தாக்கி விடக்கூடாது என்பதற்காகவும் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதைக் கருத்தில் கொண்டுதான் புதன் கிரகத்தை மெசஞ்சர் நீள் வட்டப்பாதையில் சுற்றும்படி செய்யப்பட்டுள்ளது. மெசஞ்சர் புதன் கிரகம் பற்றிப் புதிய தகவல்களை அளித்து வருகிறது.









முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை விமர்சிப்பவர்கள் பற்றி

காதலில் பெண்கள்தான் ஏமாற்று கிறார்கள் என்கிறார்களே ...

விஷாலின் கதகளி வெற்றிபெறுமா?

**ஜெசி — சாந்தை**

**காதல் என்றால் என்ன?**

அந்தக் கருமத்தை என்னவென்று தெரியாமல் தான் பலபேர் காதல் என்ற பெயரில் அதை அறுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**சுகந்தன் — அல்வாய்**

**பணம் சம்பாதிக்கவே அரசியல்வாதிகள் அரசியலுக்குள் இருக்கிறார்கள் என மக்கள் பேசுகிறார்களே?**

'ஆமை பிடிப்பார் மல்லாத்துவர் யாமது சொன்னால் பாவம்'

**உதயநிறஞ்சன் — கோண்டாவில்**

**உங்கள் காதலியிடம் எப்படி உங்கள் காதலைச் சொன்னீர்கள்?**

திருமணமான அன்று இரவு எனது முன்னைய காதல், காதலி பற்றி என் மனைவியிடம் கூறிக் கொண்டிருந்தேன். 'என்னங்க உங்க காதலில் ஒரு திருப்பு முனையையும் காண வில்லை' என்றாள் மனைவி.
அடிப்பாவி அந்த திருப்பு முனையே நீதான்டி

**தனுஸ் — வயாவிளான்**

**இன்றைய சினிமாவில் பெண்களின் நடிப்பு பொறுக்கத்தக்கதா?**

நல்ல நடிகை, திறமையானவர் எனச் சொல்லும் இயக்குநர்கள் பெண்களின் ஆடை களைந்து ஆடவிடுகின்றார்களே தவிர அவர்களின் ஆளுமையினை வெளிக்கொணர ஏதும் செய்கிறார்களா?

**வனுஜா — யாழ்ப்பாணம்**

**விஷாலின் கதகளி வெற்றிபெறுமா?**

பொங்கலுக்கு வெளியான படங்களில் நல்ல விமர்சனம் பெற்ற படங்களில் ரஜினி முருகன், கதகளி ஆகியன அடங்குகின்றன. முதன்முதலாக இயக்குநர் பாண்டியராஜ் அதிரடி கதையினை எடுத்து பார்வையாளரை கதிரை நுனிக்கே கொண்டு வந்திருக்கிறார். கதகளி - அதிரடி.

**கௌசிதாஸ் — குப்பிளான்**

**ஜல்லிக்கட்டுப் போட்டி பற்றி?**

மற்றைய இனங்களுடன் ஒப்பிடுகையில் தமிழினம் வீரம் மிகு இனம் என்பதற்கு அடையாளமானது இந்த ஜல்லிக்கட்டுத்தான்.
நீராவியில் ரயில் ஓடும் என வெள்ளையர்கள் கண்டுபிடிப்பதற்கு பல நூறு வருடங்களுக்கு முன்னமே நீராவியில் இட்லி அவிக்க கண்டுபிடித்தது எம் இனம்.

**பிறேமா — சாவகச்சேரி**

**லவ் பண்ணுறது சரியா, தப்பா?**

சரி என சொல்லும் அளவுக்கு காதலர்களும் சரியில்லை. தப்பெனச் சொல்லுமளவுக்கு காதலொன்றும் தப்புமில்லை.

**ராஜி — குப்பிளான்**

**உங்கள் பிறந்த தினத்தில் உங்கள் மனைவிக்கு என்ன கொடுப்பீங்க?**

இதைத்தான் அவளும் ஒருமுறை என்னிடம் கேட்டாள். நான் என் இதயமே உனக்குதானே சொந்தம் என சாமர்த்தியமாக பதில் சொன்னதாக நினைத்தேன். ஆனால் அவளோ கத்தியை எடுத்துவந்து இதயத்தை அறுத்துத் தரும்படி கேட்டாள். அப்புறம் என்ன. அவள் என்னென்ன கேட்டாளோ அத்தனையும் வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன் இன்றுவரையும். இதயம் வலு முக்கியம் பாஸ்.

**கிருஷா — வரணி**

**உணர்ச்சி வேகத்தில் அறிவாளியும் மடையன் ஆகிவிடுவான் என்பது என்ன?**

தங்கள் அரசியல் இலாபங்களுக்காக முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களை இகழ்கிறார்களே அவர்களை விட இந்த விடயத்திற்கு வேறுயாரையும் உதாரணம் காட்டிவிட முடியாது.



அரசே... தங்களைப் புகழ்ந்து பாட புலவர் வந்திருக்கிறார்
அடப்பாவி அதுக்காக பதுங்குகுழிக்கெல்லாம் அழைத்து வருவதா? மன்னரின் மானம் காற்றில் பறந்துவிடாதா

*அன்பு வாசகர்களே!*

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS) 021 567 1532**

**செ.முரளி — நெடுங்கேணி**

**திருக்கணிதம், வாக்கிய பஞ்சாங்கம் இரண்டில் சிறந்தது எது?**

சிறந்தது எது என்ற கேள்வியை விடுத்து சரியானது எது என்ற கேள்வியை கேட்க வேண்டும். ஒரு மதம். இரண்டு பஞ்சாங்கங்கள் ஒன்றுபடவில்லையென்றால் எப்படி தமிழர், சிங்களவர் ஒன்றுபடுவது சாத்தியமாகும். முதலில் எம்மை நாமே திருத்திக் கொள்வோமா?

**கலைக்கடல் — கிளிநொச்சி**

**முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை விமர்சிப்பவர்கள் பற்றி?**

ஐயா சாமிகளே! தமிழர் நலனுக்காக உண்மைகளை யதார்த்தமாய்ப் பேசும் முதல்வரை விமர்சிக்கும் சிங்கர்களே! பிரபாகரன் தான் எம் தலைவர் என மார்தட்டிச் சொல்லும் நீங்கள் மகிந்த ராஜபக்ஷதான் தேசிய தலை வர் எனச் சொன்னவர்களையும் சிங்கக் கொடியை தூக்கிப்பிடித்தவர்களையும் விமர் சிக்காதது ஏன்? அதுசரி மண்வெட்டிதானே நீங்கள்.

**வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி**

**சிலர் இப்போது சொல்லால் அடிக்கிறார்களே?**

பொல்லடியைவிட சொல்லடி தாக்கங்கள் கூடியது என்பதை உணர்ந்தவர்கள்.

**ஸ்ரீராம் — மானிப்பாய்**

**ஜோக் பிளீஸ்?**

உதைபந்தாட்டப் போட்டியில் கோல் கீப்பர் கைகளில் இருந்து தவறி பந்து கோல் ஆகியது. அணியின் பத்துப் பேரும் வந்து கோல்கீப்பரை திட்டுகிறார்கள்.
'ஏன் விட்டாய் என' அடே பக்கிகளை நீங்க பத்துப் பேர் விட்டதுக்கப்புறம் தாண்டா அவன் விட்டான் என்பதைப் புரிஞ்சிக்கவே மாட்டீங்களாடா!

**பிரியா**

**காதலில் பெண்கள்தான் ஏமாற்றுகிறார்கள் என்கிறார்களே ஏன் ஆண்களும் ஏமாற்றுகிறார்கள்தானே?**

ஏமாற்றுகிறார்கள் தான் இல்லையென்று சொல்லவில்லை. இருந்தும் ஆண்களின் காதல் எடுபடுகிறதே என்ன செய்ய. தன் காதலிக்காக ஷாஜகான் தாஜ்மகாலைக் கட்டியது போல பெண்கள் தன் காதலனுக்காக எதையாவது கட்டினார்களா? எனக் கேள்வி கேட்கிறார்கள் ஆண்கள்.

தன்காதலனை (கணவனை) ஒரு பெண் மனதில் கடலிலும் பெரிதாய் விரும்புகிறாள் என்பதை அறியாதவர்களே ஆண்கள்.

# கவிதைக் கலசம்



## பொங்கலோ பொங்கல்

மின்சார விளக்குகளால்
வாசலில் தீ மூட்டி
கழுத்துப் பட்டி அணிந்து
Happy Pongal உதடு
வலிக்க உச்சரித்து
நகைக்கடை வீதியிலும்
புடைவை மாளிகையிலும்
திரையரங்கு வாசலிலும்
வியாபாரம் கொடி கட்ட
பறட்டைத் தலையும்
கால்துண்டு துணியும்
பசிப்படலம் சூழ்ந்த
பிஞ்சின் அழுகுரலுடனும்
விவசாயத் தோழன்
மட்டும் கடன் வாங்கி
பொங்குகிறான்
பொங்கலோ பொங்கல்

**நி.கவியழகன்**
**தாவடி**

## நந்தவனப் பூக்கள்

சத்தம்போட்டு யுத்தம் செய்து
நித்தம் புன்னகையுடன்
புதுமைகள் படைத்துவிட
பாரில் உதித்த
கதிரவச் செல்வங்களே!
வீரநடை போட்டுப்
பள்ளிக்குச் செல்லுங்கள்
பென்சிலைப் பிடிக்கும்
பிஞ்சுக்கைகளுக்கு
வேலைகள் எதற்கு...!
சோதனைகள்தான் எதற்கு...!
மகிழ்ச்சியோடு கற்று
முயற்சியோடு முயன்றிடுங்கள்
எதிர்காலத்தில்
வெற்றி நடை போட்டிடுங்கள்

**ச.அகல்யா**
**சண்டிலிப்பாய்**

## மாயையான மாயை மனிதம்!

காரிருள் மேகமும்
கண்ணீர் சொரியுது
பூலோக மனிதனின்
நிலைமை கண்டுதான்
மனிதனே மனிதனைக் கொல்கிறான்
மனிதமும் கொலை வெறி கொள்ளுது
கணிதமும் பல முறை கணித்தது
புவி அழியும் காலம் இதுவென்று
விஞ்ஞானம் இடைக்கிட விரட்டுது
விண்கல்லும் விழுமென்று விரட்டுது
பொய்யாக எல்லாமே நடக்குது
புல் பூண்டு மனிதனைப்
பார்த்து சிரிக்குது
உயிரென்ன உயிரென்று இருக்குது
ஒரு உணர்வற்ற ஜடமாகி கிடக்குது
கொலை கூட இங்கே மலிவுதான்
பலாத்காரம் நடைபெறும் அரங்குதான்
உண்மையும் எங்கோ
ஒழிந்தது அதை
எதிர்பார்த்த பொய்யும்
வெறியாட்டம் போடுது
மாயையான மாயையாய் மனிதமும்
வேஷம் போடாமல் தான் திரியுது
உலகமே இதைக் கண்டு வியக்குது!

**முல்லைவர்மன்**
**முள்ளியவளை**

## கந்தா! கதிர்வேலா!

ஒன்றுபட்ட தமிழினத்தை
வஞ்சனை செய்து வதைப்பது யார்?
நன்றுபட்ட முகங்களில்
கரிபூசி கறைபடிய வைப்பதுயார்?
நான் தமிழன் என
அண்டம் பிளக்கக் கூறிக்கொண்டு
வஞ்சனை நரிகளுடன்
வாசகம் வைப்பவர் யார்?
பொய்யர் பொய்யர் எனப் புழுகி
தன் பொய்முகம் காட்டுவது யார்?
கத்துங்கள் கதறுங்கள்
தவளை தன் வாயால் கெடுவதை
யாரால் தடுத்துவிட முடியும்.

மாவை. நா.கஜேந்திரன்

## என் வாழ்க்கை

எனக்கு கல்வியை விட
சிறந்த ஆயுதமில்லை
கலையைவிட
நயப்புமிக்க ஆசானுமில்லை
வாழ்வினை தொலைத்த
நாட்களுமில்லை
என்னை வெறுத்த
இரவுகளுமில்லை
இலட்சியம் மாற்றிய
வரலாறுமில்லை
இலட்சியப் பாதை மாறிய
சரித்திரமில்லை
துணிவே ஜெயம்
என்ற வாசகத்தை தவிர
வேறொன்றும் தெரியவில்லை
எனக்கென சில ஆசைகள்
நிராசைகளில்லை
இது என் வாழ்க்கை...

**ஈ.சுசீபா, வாதரவத்தை**

# மௌனத்தின் தேடல்- 283



## மாறாத மனவுறுதி

நீர் வற்றியென்ன
நிலம்தான் வெடித்தென்ன
நிர்க்கதியற்று
நிலைகுலையாது
உடலிலே வலிமையில்லை
உதவிகள் கிட்டவில்லை
உண்மையும் நேர்மையும்
உரமான ஆயுதங்கள்
உடலுழைப்பு
தொடருமிங்கே
உயர்வு கிட்டும்
உறுதியுண்டு

*அணிஞ்சில்*
*புவபாலன்*

## வறுமையின் கொடுமை

வறுமையின் கொடுமையால்
உண்ண உணவின்றி உருக்குலைந்து
எலும்பும் தோலுமாய்
நிற்குமிவனிடம்
எந்தக் கொடுமனத்தோன்
இந்தப் பெருங்கல்லைத் தூக்க
நிந்தித்தான் படுபாவியவன்
விந்தையான இச்செயலுக்கு
பின்புலத்தில் யாரும்
இல்லாமலில்லை
தூக்கமுடியாது துக்கந்தாங்காது
ஏக்கத்தோடு கதறி அழுகிறான்
காக்குந் தெய்வத்திடம் அருள்வேண்டி

துரை, தென்மட்டுவில்

## இறக்கி விடு சுமையை

இரத்தமும் வியர்வையும்
இறைத்த நீரும்
பற்று வைத்த இடமெல்லாம்
பற்றையாக நின்று புதர்
வற்றுகின்றதே வளங்கள்
நொந்து நூலாகி
நூறாண்டு வாழவேண்டியவை
என்பும் சதையின்றி
எடுத்தியம்பும் கண்களால்
உலக மாதாவே
உன்னிடம் ஒப்புவிக்கின்றேன்
எம்மவர் வேதனைச் சுமையை
இறக்கிவிடு விரைவிலே

*மீசாலை*
*விமல்ராஜ்*

## தண்டனை

நடையாய் நடக்கின்றேன்
சுமையாய் சுமக்கின்றேன்
தண்டனையோ
தலைவிதியோ
ஆண்டவனை நோகின்றேன்!
ஒட்டிய வயிற்றின்
ஒரு வேளை உணவுக்காய்
காயும் வெயிலில்
கருணை இல்லா சமூகத்தில்
ஓயாத உழைப்பில்
கிடையாத ஊதியத்திற்காய்
தேய்கின்றேன் ஓடாய்

*அராலியூர்*
*சோ.சிவகுமாரன்*

## ஒளி பிறக்குமா?

பிறந்தது வருடமன்றோ
பிரியவில்லையே சோகங்கள்
யாசிக்க நோக்கும் கண்களும்
வாசிக்க முடியாத
பார்வையும்
மறக்க முடியலை
மண்பாசத்தை
மதிப்பவர் முன்வருவரோ
தடுக்கில் இருந்த மழலைக்கு
தரணியின் இன்று முப்பது
பிறக்குமோ மகிழ்வு

*மீசாலையூர்*
*விசி*

## பாராட்டு

மலையைப் புரட்டிக் கையில் எடுக்கும்
துணிவை நான் பாராட்டுகின்றேன்
உன் நரம்புகள் புடைத்திட நெஞ்சம்
வஞ்சம் தீர்க்கவா... விரைகிறது
அஞ்சாத உன்
நெஞ்சத் தீ... அணையாது
சோகத்தைச் சுமையாக்கவில்லை-நீ
சுகமாக மலைதனையே மடியினில்
ஏந்தி நிற்கும்
உன் மனதின் உணர்வுகள்
உறங்காது உயிர் பெறட்டும்...

*மருதனூர்*
*தாயுமானவள்*

## ஆறறிவிலும் மேலானதே ஐந்தறிவு

நிலம் வரண்டதால் வரண்டது
உழவனின் உடல் மட்டுமல்ல
அவனை நம்பிய சகலரது வாழ்வுமே!
இந்நிலைக்குக் காரண கர்த்தா
வேறு யாருமல்ல
நீயே! நீயே! நீயே!
மனிதா! மனிதா! மனிதா!
ஆறறிவு படைத்த
ஆங்காரம் கொண்டவனே!
ஐந்தறிவினால் ஆபத்து
ஏற்படவில்லையடா பூமிக்கு
இனிக்காரோட்டமும் இல்லை
ஏரோட்டமும் இல்லை
மொத்தத்தில் நீயுமில்லை நானுமில்லை
ஆக ஆறறிவிலும் மேலானதே ஐந்தறிவு

*எஸ்.மேரிதாஸன்*
*வட்டுக்கோட்டை*

# மௌனத்தின் தேடல் -284



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 20.01.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# தமிழரின் எதிர்பார்ப்புக்களை அரசு நிறைவேற்ற வேண்டும்

இலங்கையில் இனங்களுக் கிடையே நிலவி வந்த முரண் பாட்டை இல்லாமல் செய்யும் முனைப்பில் மைத்திரி - ரணில் கூட்டு அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருவதை அறி யக் கூடியதாகவும் உணரக் கூடிய தாகவும் உள்ளது.

நலலாட்சி அரசு என்று பெயர் சூட்டிக் கொண்டு ஓராண்டு கால ஆட்சியை கடந்த 9ஆம் திகதி யுடன் நிறைவு செய்த மைத்திரி - ரணில் தலைமையிலான புதிய அரசு அமையவும் முரண்பாடு கள் முக்கிய பங்காற்றியிருந்தன.

எப்படியாவது ஆட்சியைப் பிடிதது விட வேண்டுமென்ற நீண்ட கால ஆதங்கம், அவா, அலைச்சல் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி ஐக்கிய தேசியக் கட்சி அமைத்த வியூகம் மகிந்தவை நிலைகு லைய வைத்தது.

ஐக்கிய தேசியக் கட்சி தனி த்து ஆட்சியை அமைக்க முடிய வில்லை என்றபோதும் பாராளு மன்றத் தேர்தல் ஊடாக மக்கள் ஆதரவைப் பெருக்கிக் கொண்ட தையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரை ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி சார்பாக நிறுத்தி வெற்றி பெறச் செய்ததையும் குறைத்து மதிப்பிட முடியாது.

நீதித்துறை,பாராளுமன்றம், பாதுகாப்புத்துறை எல்லாவற் றையும் தன இஷ்டப்படி ஆட்டி வைத்த மகிந்தவும் அவரது சகோதரர் கோத்தாவும் அறிந்திடா வண்ணம் ஆட்சி மாற்றத்திற்கு வழியேற்படுத்தியதை சாதாரண விடயமாகப் பார்க்க முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சி பொது எதிரணியின் பிரதான கட்சியாக மிளிர்ந்த அதேவேளை, மகிந்த வின் பிரதான எதிரியாக உரு வெடுத்தவர் முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா அம்மையார்.

**சந்திரிகாவே எனது பிரதான** எதிரி என்று மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த இறுதி ஆண்டில் அச்சுறுத்தும் தொனி யில் தனது கோபத்தை வெளிப் படுத்தியிருந்தார்.

ஆட்சியில் அங்கம் வகித்து அமைச்சரவை அமைச்சராக வும் ஆளும் கூட்டணியின் பிர தான கட்சியின் பொதுச் செயலாளரா கவும் இருந்த மைத்திரிபால சிறிசேனவை பொது எதிரணி யின் வேட்பாளராக நிறுத்தி ஜனாதிபதி ஆக்கியதால் சந் திரிகாவும் பிழைத்துக் கொண் டார்.


மைத்திரிபால் கட்சியையும் மகிந்தவின் அமைச்சரவையை யும் துறந்த ராஜித சேனாரட்ன போன்றவர்களும் தப்பித்துக் கொண்டனர்.

முன்னாள் இராணுவத் தளப தியும் போர் வெற்றிக்கு முக்கிய பங்காற்றியவருமான சரத் பொன் சேகாவை அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லாதிக்க நாடுகளின் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத் தாது சிறையில் அடைத்து அவரின் குடும்பத்தாருக்கு இன்னல்களைப் பரிசளித்த மகிந்த அரசு அரசியல் பழிவாங்கல்களுக்கு சரத் பொன் சேகாவை உப்படுத்தியது என்று பசில் ராஜபக்ஷ ஒப்புக் கொண்டார்.

இதன்மூலம் மகிந்த ஆட்சியில் அரசியல் பழிவாங்கல் இடம்பெற் றதை பசில் உறுதிப்படுத்தியுள்ளார். மைத்திரி தோல்வியடைந்திருந் தால் அவருக்கும் அவரோடு இணைந்தவர்களுக்கும் என்ன ஆகியிருக்கும் என்பதையும் பசில் சொல்லாமற் சொல்லியிருந்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமை ச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ மகி ந்தவின் ஆட்சி நீடிக்க வேண்டும் என்பதற்காக சுதந்திரக் கட்சியிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யிலும் முன்னின்று உழைத்தவர்.

மகிந்தவின் பதவியிழப்பு இவ ரையும் அதிகளவில் பாதித்தது. நள்



ளிரவில் அமெரிக்காவுக்கு தப்பியோடி யவர் பின் தாயகம் திரும்பி சிறை சென்று பிணையில வெளிவந்துள் ளார்.

மைத்திரியின் வெற்றியில் ஐ.தே.க. தலைமையிலான பொது எதிரணிக்கு எவ்வளவு பங்குண்டோ அதே அளவு மகிந்தவின் ஆட்சியில் ஏற்பட்ட அச்சுறுத்தல், அழிவு, ஊழல மோசடி என்பனவும் பங்காற்றியி ருந்தன.

வடக்கு மாகாண சபைத் தேர்த லில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 30 ஆசனங்களைப் பெற்று பெரு வெற்றி பெற்ற போதும் இத்தகைய விமர்சனங்கள் அரசியல் ஆய்வா ளர்களால் முன்வைக்கப்பட்டன.

அதிருப்தியால் மாற்றணிக்கு மக்கள் வாக்களிப்பதை அரசால் தடுக்க முடியாது என்பது எவ்வளவு உணமையோ அதேபோன்று வெற்றி பெறும் அணியும் இந்த உண் மையை உணர்தல் வேண்டும். தேர்தல் வெற்றிக்கு பின்னர் அதி ருப்தியால் கிடைத்த வாக்குகளை இழக்காமல் பாதுகாக்க வேண்டும் .

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த மீது மக்கள் காட்டிய வெறுப்பு பாரா ளுமனறத் தேர்தலில் பிரதிபலித்தது.

மகிந்தவை முன்னிலைப் படுத் திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட ஐ.தே.க.அதிக ஆசனங்களைப் பெற்றதால் நீண்ட காலத் தோல்வி களால் துவண்டு போயிருந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார்.

மைத்திரிக்கு கிடைத்த ஜனாதி பதிப் பதவியுடன் பிரதமரான ரணி லுக்கு தேர்தலின் ஊடாக கிடைத்த பிரதமர் பதவியே அணி சேர்த்தது.

அச்சுறுத்தல்கள், அலைச்சல் கள், அபகீர்த்தி என்பவற்றிலிருந்தும் விடுதலை கிடைத்தது எனலாம். சிங்களவர்கள் மகிந்த மீது காட்டிய வெறுப்பு மட்டும் மைத்திரிக்கோ ரணிலுக்கோ பதவியைக் கொடுக்க வில்லை.

தமிழினம் பட்ட துன்ப துயரங் கள் மக்கள் மனங்களில் புரையோ டியுள்ள தீராத வெறுப்பும் மகிந்த ஆட்சிக்கு முடிவு கட்டியது.

மகிந்த ஆட்சி இல்லாமல் போக வேண்டும்,நல்லாட்சி ஒன்று மலர வேண்டும் என்ற சமிக்ஞையை தமிழ் மக்கள் வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போதே பட்டவர்த் தனமாக வெளிப்படுத்தியிருந்தனர்.

தமிழ் மக்களின் தீர்ப்பை மகிந்த எதிர் கொண்டதால் மைத்திரி ஜனா திபதியானார்.நல்லாட்சி அரசும் மலர்ந்தது. உயர் பாதுகாப்பு வல யம் என்று கூறி தமிழ் மக்களின் பூர் வீக நிலங்களை இராணுவம் உட் பட முப்படையினரும் கபளீகரம் செய்தனர்.

போர்ச்சூழல்மறைந்து ஜனநாயகம் முற்று முழுதாக வியாபித்த போதும் தமிழர் தாயகம் ஆயுதப் படையின் கட் டுப்பாட்டின் கீழ் அகப்பட்டது. இன் றும் தமிழர் தாயகத்தில் 10 ஆயிர த்துக்கும் மேற்பட்ட பூர்வீக நிலங் கள் முப்படையினர் வசமேயுள்ளது.

நிலத்தை மீட்கும் போராட் டத்தில் தமிழர்கள் தாயகத்தில் கண் ணீருடனும் பசி பட்டினியுடனும் ஈடுபட்டுள்ளனர். இந்தப் போராட் டத்தை இல்லாமல் செய்யும் முனை ப்புடன் அரசு முப்படையின் கட்டுப் பாட்டிலுள்ள காணிகளை விடுவித்து வருகிறது. இருப்பினும் காணி விடு விப்பு நடவடிக்கையில் இனயும்கால தாமதம் ஏற்படக்கூடாது என்பதே மக் களின் கோரிக்கையாகவுள்ளது.

சிறைகளிலே அரசியல் கைதி களாக அடைபட்டுள்ளவர்களையும் போர்க்காலத்தில் கடத்தப்பட்டும் இராணுவத்திடம் சரணடைந்தும் வெள்ளை வான்களில் வந்தோரால் கடத்தப்பட்டும் காணாமற் போனார் பட்டியலிலுள்ளவர்களையும் விடு விக்கும் போராட்டத்தில் காணி விடு விப்பும் இணைந்து தமிழரின் கண்ணீரைப் பெருக்கெடுக்க வைத் துள்ளது.

தமிழர்கள் தமது உரிமைக ளைப் பெறவே போராடினார்கள். இன்றும்அந்த உரிமைகளைப்பெறவே போராடுகின்றார்கள் என்பதை நன்குணர்ந்துள்ள அரச தரப்பி னர் உரிமைக்காக போராடும் இனத்தை உதாசீனப்படுத்துவது முறையாகாது.

***இலங்கையில் சுதந்திரம் கிடை ப்பதற்காக இன பேதங்களை மற ந்து ஒற்றுமையாகப் போராடிய தமிழ் மக்கள் சுதந்திரத்தின் பின் னர் தமக்குரிய உரிமைகள் கிடை க்காத காரணத்தால்தான் தமது உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராடினார்கள் என்பதையும் வெளிப்படுத்திய முன்னாள் ஜனா திபதி திருமதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தமிழரின் ஆயு தப்போராட்டத்தை நியாயப்படுத்துவது போன்று கருத்துரைத்துள்ளார்.***

யாழ்.இராமநாதன் கல்லூரியில் நேற்று முன்தினம் (15.01.2016) வெள் ளிக்கிழமை இடம்பெற்ற தைப் பொங்கல் விழாவில் பிரதம விரு ந்தினராக பங்கேற்று பொங்கலுக்கு அரிசி இட்டு விழாவைச் சிறப்பித்த பின் னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சந்திரிகா ஜனாதிபதியாக இரு ந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் ஒரு கண் பார்வையை இழந்த போதும் பேச்சு வார்த்தைக்கு இணங்கியிருந்தார்.

தனிநாட்டுக்கோரிக்கையுடன் அரசை எதிர்த்து முப்படைகளின்துணை யுடன் போரிட்டு வந்த விடுதலைப் புலிகளை அழிக்கும் முய றசிகளை முன்னெடுத்த போதும் சமாதானக் கரம் நீட்டியவர் சந்திரிகா.

ஒரு நாட்டின் ஜனாதிபதி அரசு ககு எதிரான ஆயுதக்குழுவுடன் சமா தான உடன்படிக்கையை ஏற்படு த்தி சர்வதேச நாடுகளின் பங்களிப் புடன் நிரந்தர சமாதானம், நல்லி ணக்கம் ஏற்பட வேண்டும் என்று பாடுபட்டவர்களில் முக்கியமானவர் சந்திரிகா.

பல்லாயிரக்கணக்கான தமிழர் கள் இவர் ஆட்சி செய்தபோது படு கொலை செய்யப்பட்டனர். அதை சந்திரிகா மறுக்கவில்லை. இருப் பி னும உயிரிழப்புக்களைத் தடுக்க வேண்டும் என்று நினைத்ததால் தான் சமாதான முயற்சிக்கு முன் வந்தார்.

மகிந்தவைப் போன்று தமிழி னப் படுகொலைக்கு காரணமான வராக தன்னை அடையாளப் படுத்த விரும்பாத சந்திரிகா, தமிழர் படு கொலை செய்யப்பட்டதையும் ஏற் றுக்கொள்ளவில்லை என்பதை பலமுறை வெளிப்படுத்தியுள்ளார்.

இருப்பினும் தமிழினப் படு கொலைக்கு சர்வதேச பக்கச் சார் பற்ற நீதி விசாரணை வேண்டும் என்ற தமிழரின் நியாயமான கோரிக் கைக்கும் உடன்படவில்லை. அவ் வாறு சர்வதேச விசாரணை நடத் தப்படுமாகயிருந்தால் அது இலங் கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும என்பது அவரது நிலைப்பாடு.

சந்திரிகா சிங்களத் தலைவர் என்பதை இவ்விடத்தில் உலக நாடுகளுக்கும் சிங்கள மக்களுக் கும் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழினப் படுகொலைக்கு சர்வ தேச நீதி விசாரணை கோரி வட க்கு மாகாண சபையில்தீர்மானம கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதை தமது சுய நல அரசியலுக்காக எதிர்க்கும் தமி ழர் தரப்புக்கு மத்தியில் சந்திரிகா செய்ததை தவறு என்று குறிப்பிட முடியாது. தமிழர்தரப்பே தமிழருக்கு சாதகமாக செயற்படவில்லை. இந் நிலையில் சிங்களத் தலைவர்கள் மீது குற்றம் கண்டுபிடிப்பதால் பலனேதுமில்லை.

ஆனால் நல்லாட்சி அரசு நல் லவை ஏதும் செய்யும் என்ற நம் பிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு கூறிய வாக்குறுதிக ளையும் நம்பி மக்கள் தமது வாக் குகளை அளி த்து மகிந்தவை வீழ்த்த மைத் திரியை வாகை சூட வைத்தனர்.

நல்லாட்சிக்கு வித்திட்ட தமிழ் மக்கள் அதனை அனுபவிக்க அதிக ளவில் விலை கொடுத்துமுள்ளனர். போரிலே இலட்சக்கணக்கில் உயிர் களைப் பறி கொடுததது மட்டுமல் லாது கோடிக்கணக்கான சொத்துக் களையும் பறிகொடுத்து பரிதவித்து வருகிறது.


அங்கவீனர்களையும் அநா தை களையும் விதவைக ளையும் அதி களவில் தன்னகத்தே கொண்ட இனமாக தமிழினம் மாறியுள்ளது; மாற்றப்பட்டுள்ளது.

எனவே தமிழர்கள் தமது உரி மைகளுக்காகவே போராடினார் கள்என்பதை நன்குணர்ந்துள்ள சிங் களத் தலைவர்கள் அந்த உண் மையை மனதார ஏற்று தமிழரு க்கு இனியாவது நிம்மதியான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

பேச்சளவில் மட்டுமுள்ள நல்லி ணக்கம், சமாதானம், சமத்துவம் என்பவற்றை நடைமுறைப்படுத்தி நல்லாட்சியை வடக்கு கிழக்கிலும் விஸ்தரிக்க வேண்டும். இது நல்லாட்சியின் பங்குதாரர்களான தமிழ்மக்கள் அரசிடம் முன்வைக் கும் கோரிக்கை.

**காண்டீபன்**

# விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்திய நோர்வே



சமாதான செயற்பாடுகளுக்கான அனுசரணையாளராக நோர்வே சிறிலங்காவிற்கு வருகை தராதுவிட்டிருந்தால், விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியிருப்பார்கள். வடக்கு கிழககில் தனிநாட்டையும் பிரகடனபபடுத்தியிருப்பார்கள். இவ்வாறானதொரு ஆபத்தை நோர்வேயின் சமாதான முயற்சிகள் தடுத்து நிறுத்தியது.

இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல்ஜோசப்பெர்னான்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

அண்மையில் நோர்வே வெளியுறவு அமைச்சர் மேற்கொண்டிருந்த சிறிலங்காவிற்கான சுற்றுப் பயணத்தை தமக்கான அரசியல் இலாபமாக்குவதற்கு தென்னிலங்கையிலுள்ள சில இனவாதிகள் முயற்சிகள் மேற்கொள்கின்றனர்.

இந்த இனவாதிகள் 2004-2005ல் இடம்பெற்ற தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு நோர்வே எதிர்ப்பு சுலோகங்களைப் பயன்படுத்தியிருந்தனர். 2000ல் அப்போதைய ஆட்சியாளர் சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்தால் நாட்டில் சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்கான அனுசரணையாளராகச் செயற்படுமாறு நோர்வேக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

எனினும், 2002ல் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நோர்வே எதிர்ப்புப் பரப்புரைக்கு சந்திரிகா தனது ஆதரவை வழங்கினார். 2002ல் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ச சிறிலங்காவின் சமாதானச் செயற்பாடுகளுக்கு அனுசரணையாளராக இருந்த நோர்வேயுடன் நெருக்கமான உறவுகளைப் பேணியிருந்தார். ஆனால் 2005ல் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், மகிந்த நோர்வே தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார்.

இதன்பின்னர் இதே ஆண்டில். வேலுப்பிள்ளை பிரபாகரனைத் தனது வலையில் விழுத்தும் முயறசியில் நோர்வேயுடன் நட்பைப் பேண மகிந்த முயற்சித்தார். நோர்வேயின் சமாதான விவகாரங்கள் என்கின்ற தலைப்பில் எழுதப்பட்ட மார்க் ஸ்லேற்றரின் நூல் வெளியீட்டின் போது நோர்வேயின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் எரிக் சொல்கெய்ம் இந்த உண்மையை வெளியிட்டிருந்தார்.

வடக்கு மற்றும் கிழக்கில் தேர்தல் நடத்தி ஆட்சி அமைக்காது பிரபாகரனுக்கு சுயாட்சி வழங்குவதற்கு மகிந்த தயாராக இருந்ததாக சொல்கெய்ம் தெரிவித்திருந்தார்.

சொல்கெய்ம் நூல் வெளியீட்டின் போது வெளியிட்ட உண்மைகள் வருமாறு:

'வடக்கு கிழக்கில் பிரபாகரனைத் தலைவராக்குவதற்கான முயற்சிகளை ராஜபக்ச பின்கதவு வழியாக மேற்கொண்டிருந்தார். ராஜபக்ச, சிங்களவர்களின் 'சிறந்த இரட்சகராகத்' தன்னைத் தானே சித்தரிதது்க் கொண்டார். ஆனால் இவர் தனது அரசியல் நிலைப்பிற்காக எந்தவொரு கெட்ட நடவடிக்கையிலும் ஈடுபடத் தயாராக இருந்தார் என்பதே உண்மையாகும்' என சொல்கெய்ம் குறிப்பிட்டார்.

நோர்வேயின் பேரம் பேசலை பிரபாகரன் மறுத்ததன் பின்னர் மகிந்த. நோர்வேயை எதிர்க்கத் தொடங்கினார்: பௌத்த சிங்களவர்களின் வாக்குகளை வென்றெடுபபதற்காக இறுதி அதிபர் தேர்தலில் மகிந்த, நோர்வேயை விமர்சித்திருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சொல்கெய்ம் நிதியுதவி வழங்கியதாக மகிந்த தனது தேர்தல் பரப்புரையில் தெரிவித்திருந்தார். எனினும் மகிந்தவின் இத்தகைய பொய்ப் பரப்புரையானது இவர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு எவ்விதத்திலும் உதவவில்லை.

நோர்வே வெளிவிவகார அமைச்சரின் சிறிலங்காவிற்கான அண்மைய பயணத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் இலாபம் தேடலாம் என தென்னிலங்கைஇனவாதிகள்கருதியபோதும், நாட்டிற்குள்ளே நோர்வேயை எதிர்க்கக் கூடிய ஆதரவாளர்களை இவர்களால் திரட்ட முடியவில்லை.

நோர்வே எதிர்ப்பு சுலோகங்கள் சிறிலங்காவைப் பொறுத்தளவில் காலாவதியாகிவிட்டன. இதுவே தென்னிலங்கையில் செயற்படும் இனவாதிகளின் தோல்விக்குக் காரணமாகும். இவ்வாறான தகுதியற்ற தந்திரோபாயங்கள் மக்களுக்கு பரிச்சயமாகிவிட்டன.

**திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலம்:**

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் நோர்வே சிறிலங்காவுடனான தனது உறவை ஆரம்பித்தது. 1970ல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் நிதி அமைச்சராக கலாநிதி என்.எம். பெரேரா பதவி வகித்தபோது சிறிலங்காவில் பொருளாதார நெருககடி நிலவியது. என்.எம்.பெரேரா சமவுடைமைவாதக் கோட்பாடுகளையே பின்பற்றினார்.

இதனால் அனைத்துலக உதவி வழங்கும் அமைப்புக்கள் சிறிலங்காவிற்கு உதவுவதில் தயக்கம் காண்பித்தன. இக்காலப்பகுதியிலேயே திருமதி.பண்டாரநாயக்க, நோர்வேயுடனான உறவை ஆரம்பித்தார். பொருளாதார உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் இவர் நோரவேக்கு பயணம் செய்தார்.

நோர்வேக்குப் பயணம் செய்த திருமதி.பண்டாரநாயக்கவை மதிப்பளித்து அப்போதைய ஒழுங்குபடுத்தப்பட்ட விருந்துபசார நிகழ்வில் நோர்வேப் பிரதமர் உரையாற்றியிருந்தார்.

'சிறிலங்காப் பிரதமர் முதற் தடவையாக எமது நாட்டிற்கு வருகை தந்துள்ளதானது எமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. சிறிலங்காப் பிரதமர் அவர்களே, நீங்கள் எமது நாட்டிற்கு வருகை தந்துள்ளமைக்கு நாம் மதிப்பளிக்கிறோம். தங்களது சிறந்த கணவரின் தலைமையின் கீழும், அம்மணியாகிய தங்களது தலைமைத்துவத்தின்கீழும்உள்ள சிறிலங்கா தனக்கென தனியிடத்தைப் பிடித்துள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் பெரும்பாலான நாடுகள் சந்திக்கின்ற அதே பிரச்சினைகளையே தங்களது நாடும் சந்திததுள்ளது.

பல அரசாங்கங்கள் எடுக்க வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளை நீங்கள் தங்களது கோட்பாடுகளின்ஊடாக முன்னெடுத்துள்ளமையானது பாராட்டத்தக்க விடயமாகும். நில சீர்திருத்தம், பொதுக் கல்வியை வழங்குதல், பொருளாதாரத் துறையின் முக்கிய விடயங்களில் தேசிய கட்டுப்பாட்டை விதித்தல், குடும்பத் திட்டத்திற்கு முக்கியமான பொது சுகாதாரத் திட்டங்கள் போன்றவற்றை தாங்கள் தங்களது நாட்டில் விரிவுபடுத்தியுள்ளதை நாம் வரவேற்கிறோம்' என சிறிமாவோ பண்டாரநாயக்கவிடம் நோர்வேயின் அப்போதைய பிரதமர் எடுத்துக் கூறியிருந்தார்.

அவர் மேலும் தனது உரையில் 'சிறிலங்கா அதன் சமவலு மற்றும் அறிவுத் திறனுடன் கூடிய அனைததுலக விவகாரங்களைக் கையாளுவதை இந்த உலகம் நன்கறியும். உலகின் புதிய பொருளாதார ஒழுங்கிற்கான நிபந்தனையற்ற உரிமைக் கோரல்களுக்குத் தன்னை விட்டுக் கொடுக்காது, உலக நாடுகளுடன் தொடர்ச்சியான சமரசங்களைப் பேணுவதை சிறிலங்கா உறுதிப் படுத்துகிறது. அணிசேரா நாடுகளின் குழுவிற்கு நீங்கள் தலைமை தாங்கும் முறைமைக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம். இதன்மூலம் நீங்கள் உங்களது நாட்டினதும் அதேவேளையில் அணிசேரா நாடுகளின் அமைப்பினதும் மதிப்பை மேலும் உயர்த்துவதற்கு உங்களை அர்ப்பணித்துள்ளீர்கள்.

நோர்வே அரசாங்கமானது அபிவிருத்தியடைந்து வரும் உலகிற்கு நிதி சார் உதவிகளை வழங்க வேண்டிய அளப்பரிய சேவையை மேற்கொள்கிறது. அத்துடன் மிகவும் அவசரமாகத் தேவைப்படும் உலக நாடுகளின் பொருளாதாரத்தை அடையாளங்கண்டு அவற்றிற்கு உதவவேண்டியபுதியபொருளாதாரக் கட்டளையையும் நோர்வே கொண்டுள்ளது' எனக் குறிப்பிட்டார்.

**சீநோர் (CeyNor) நிறுவனம்:**

சிறிலங்காவில்மீன்வளத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் திருமதி.பண்டாரநாயக்கவால் சீநோர நிறுவனம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் முதற்கட்ட திட்டமானது அம்பாந்தோட்டையில் ஆரம்பிககப்பட்டது. மகிந்த ராஜபக்சவின் வேண்டுகோளுக்கு இணங்கவே இத்திட்டம் முதலாவதாக அம்பாந்தோட்டையில்மேற்கொள்ளப்பட்டது.

அம்பாந்தோட்டையை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தைத் தானே அறிமுகம் செய்ததாக அப்போது மகிந்த ராஜபக்ச பெருமையுடன் அறிவித்தார். 1994ல் மகிந்த சிறிலங்காவின் மீள்வளத்துறை அமைச்சராக பதவிவகித்தபோது சீநோர் நிறுவனம் தொடர்ந்தும் மகிந்தவிற்கு உதவியது. சந்திரிக்கா குமாரதுங்கவின் அழைப்பினை ஏற்றுக்கொண்ட நோர்வே சிறிலங்காவில் 2000 இலிருந்து சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மிகக் கொடிய தாக்குதல்களிலிருந்து விடுபடுவதற்காகவே சந்திரிக்காவால் சமாதான நகர்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. 2000ம் ஆண்டு நோர்வே சமாதானக்குழு சிறிலங்காவை வந்தடைந்த போது, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு சிறிலங்காவின் வடக்கில் நிலைகொண்டிருந்து இராணுவ நிலைகள் பலவற்றைத் தகர்த்தெறிந்ததுடன் யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலை அண்மித்திருந்தது.

சமாதான செயற்பாடுகளுக்கான அனுசரணையாளராக நோர்வே சிறிலங்காவிற்கு வருகை தராதுவிட்டிருந்தால், தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியிருப்பார்கள். அத்துடன் வடக்கு கிழக்கில் தனிநாட்டையும் பிரகடனபபடுத்தியிருபபார்கள், இவ்வாறானதொரு நிலையை நோர்வேயின் சமாதான முயற்சிகள் தடுத்து நிறுத்தியது.


உண்மையில் நோர்வேயின் சமாதான மத்தியஸ்தமானது தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப் படுத்தியது. புலிகள் மீது மகிந்த அரசாங்கம் மூர்க்கமான தாக்குதல்களை மேற்கொண்டு அதனைப பலவீனப்படுத்திய போது, புலிகள் அமைப்பு நோர்வேயிடம் உதவி செய்யுமாறு கோரியது. ஆனால் இதனை மகிந்த அனுமதிக்கவில்லை. வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு சிறிலங்கா இராணுவத்திடம் சரணடைய முற்பட்ட புலி உறுப்பினர்களை நோர்வே காப்பாற்ற முற்பட்டபோது அதனைக் கூட மகிந்த அனுமதிக்கவில்லை.

புலிகள் அமைப்பானது தான் விட்ட தவறாலேயே அழிவடைந்ததாக நோர்வே அறிவித்தது. இவ்வாறான அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பினும் கூட, நோர்வேயின் சமாதான அனுசரணையே புலிகள் பலவீனமுறுவதற்குக் காரணமாக அமைந்தது என்கின்ற உண்மையை நோர்வே ஏற்றுக்கொளளுமா என்பது எமக்குத் தெரியாது.

2000ம் ஆண்டில் சிறிலங்கா அரசாங்கமானது பலவீனமுற்றிருந்த போது அதற்கு உதவுவதற்காகவே நோர்வே சிறிலங்காவில் சமாதானப்பணியை மேற்கொள்ள வந்தபோதிலும் புலிகள் அமைப்பு பலவீனமுற்றிருந்த போது நோர்வே தனது அனுசரணை மூலம் போர் நிறுத்த உடன்படிக்கையை மேறகொள்ள முனையவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

எவ்வாறெனினும், இதற்குப் பரிகாரம் தேட- கடந்த வாரம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் சிறிலங்காவிற்கான தனது பயணத்தை மேற்கொள்ளவில்லை.

இவர் நோர்வேயின் பொருளாதார உறவைப் பலப்படுத்தவே சிறிலங்காவிற்கு வருகை தந்திருந்தார். நோர்வே வெளிவிவகார அமைச்சர் சிறிலங்காவில் தங்கியிருந்த காலப்பகுதியில் இவரால் வெளியிடப்பட்டிருந்த அறிக்கைகள் இதற்குச் சான்று பகர்கின்றன.



சிறுகதை

# சத்தியம் சாகாது!



சத்தியநாதன் பயிற்றப்பட்ட ஒரு கணித ஆசிரியர். இவர் ஆசிரியர் என்ற சொல்லுக்கு இலக்கணமாய் வாழ்பவர். கடமையில் ஒரு கண்ணியவான். மாணவர்களை அன்பினால் ஆள்பவர். இவர், பகல் பொழுது முழுவதையும் கல்லூரியில் மாணவர்களுடனே கழிப்பார். இவரது குடும்பம் மிகவும் சிறியது. முதுமையடைந்துவிட்ட தாயார், அவரது மனைவி, அவர்களுடைய பெண்குழந்தை மொத்தம் நான்குபேர்தான் அந்தக் குடும்ப அங்கத்தவர்கள்.

சத்தியநாதனின் வேதனத்தில் அரைவாசிதான் வீடுவந்து சேரும். மிகுதிப்பணம் அவரது சேவை மனப்பான்மையில் கரைந்துவிடும். வகுப்பில் கற்றல் உபகரணங்களை சரியான முறையில் வாங்கிக்கொள்ளாமல் கற்றலில் சிக்கல்படும் மாணவர்களை இனங்கண்டு வைத்திருக்கும் இவர், அவர்களது வறுமையைப்போக்க எதுவும் செய்யமுடியாது போனாலும், முக்கியமான கற்றல் உபரணங்களை வாங்கிக் கொள்ளவாவது -மனந்தாங்காது உதவிசெய்துவிடுவார். பாடசாலை தராத கற்பித்தல் உபகரணங்களை தானே தயாரிப்பதற்காகவும் சிறிது பணத்தை செலவு செய்துவிடுவார். இதனால், சில நாட்களில் இவரின் அடுப்படியில் பூனைதான் படுத்திருக்கும். அது பற்றி இவர் அதிகம் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை.

இவரது மனைவி ஒரு பதிவிரதை. கணவருடன் தலை நிமிர்ந்து கதைக்கமாட்டார். மிகவும் சிக்கனமாக -செலவுகளைக் குறைத்து, ஏதோ விதத்தில் அவர்கொடுக்கும் பணத்தில் குடும்பத் தேவைகளின் முக்கியமானவற்றைப் பூர்த்தி செய்துகொள்வார்.

சத்தியநாதனின் தாயார், அவருக்குப் புத்திமதி கூறுவார்: "பெண்பிள்ளை ஒன்று இருக்கிறது. இப்பிள்ளைக்கு ஏதும் தேடிவைக்க வேண்டாமா. நீ வேறு வேலை ஏதும் செய்து மேலும் பணம் சம்பாதிக்காவிட்டாலும், எடுக்கிற சம்பளத்தையாவது முழுசா உன் மனைவியின் கைகளில் கொடுக்கலாமல்லவா?" என்று.

நீண்டகாலத்துக்குப் பிறகு மீண்டும் ஒருகுழந்தைக்கு தந்தையாகும் பாக்கியம் கிட்டுகிறது சத்தியநாதனுக்கு.

ஆம் அவரது மனைவி நிறைமாதக் கர்ப்பிணி. அவரது தாயார் இப்பொழுதும் வழமை போல் தனது மகனுக்கு புத்திமதி கூறுகிறார். இவரோ, "பிறர் பிள்ளையை தடவிவளர்க்க.. தன்பிள்ளை தானே வளரும்" என்று ஒரு பழமொழி உண்டம்மா... சத்தியம் ஒருபோதும் செத்துவிடாது. எல்லாம் நல்லதாகவே நடக்கும்" என்று தாய்க்கு ஆறுதல் கூறிவிட்டு இவர் பாடசாலைக்குச் சென்றுவிடுவார்.

நாட்கள் ஒன்று இரண்டாக நகர்ந்தன. பிள்ளைப்பேற்றுச் செலவுக்கென தனது கையிலிருந்த மோதிரத்தைக் குறிவைத்திருந்தார் சத்தியநாதன். முன்னமே அதைக் காசாக்கினால் செலவாகிவிடும். வைத்தியசாலைக்குச் செல்லவிருக்கும் நாள் கிட்டுகையில் அதை விற்கவோஅல்லது அடகு வைக்கவோ எண்ணியிருந்தார்.

இவர் பாடசாலையில் நிற்கையில தாயிடம் இருந்து அழைப்புக் கிடைக்கிறது..அவனது மனைவிக்கு பிரசவ வேதனை தொடங்கிவிட்டது. உடனே வரும்படி. இவரோ தாயாரிடம் நீங்கள் ஓட்டோவைப்பிடித்துக்கொண்டு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுங்கள். நான் அங்கு வந்துவிடுகிறேன்.

பாடசாலைக்கு *சோட் லீவு* எழுதிக்கொடுத்துவிட்டு. இவர் நகைக் கடைக்குச் செல்கிறார் மோதிரத்தை விற்றுப்பணத்தைப் பெற்றுக்கொண்டு திரும்புகையில் இவரிடம் கற்ற மாணவன் கண்ணன் சந்திக்கிறான்.

"கண்ணா நீ பல்கலைக்கழகத்தில் என்று நான் நினைத்தேன் ...நீ என்ன இங்கே நிற்கிறாய்... உனக்கு என்ன நடந்தது... ஏன் இன்னும் அங்கே செல்லவில்லை."

"இல்லைசேர்.. *ஹொஸ்ரல்* செலவுகள்... பயணச் செலவுகளுக்கு தயார்பண்ணிக்கொண்டிருக்கிறன்.. கையில பணம் கிடைச்சவுடன் புறப்பட்டுவிடுவேன்..."

"இதையெல்லாம் முதல்லையே தயார்ப்படுத்தியிருக்கவேணும்.... இந்தா.. இதில ஒருபத்தாயிரம் இருக்குது.. இதையும் சேர்த்துக் கொண்டு புறப்படு காலத்தை வீணடிக்காதை" என்று கூறி அவனிடம் பணத்தைக் கொடுத்தார் சத்தியநாதன்.

*காலத்தே செய்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிது* என்பது வள்ளுவன் வாக்கு. கண்ணன் மிகவும் நன்றியறிதலுடன் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஆசிரியரிடமிருந்து விடைபெற்று ஏகிவிட்டான்.

மீதிப்பணத்துடன் வைத்தியசாலைக்குச் செல்கிறார் சத்தியநாதன்.

அங்கே காத்திருந்த செய்தியோ... அவனை *அடியற்றமரம்போல்* வீழ்த்துவதாக இருந்தது. அவரது மனைவி, ஆண்குழந்தை ஒன்றைத் தந்துவிட்டு விண்ணேகிவிட்டாள்.

பச்சைப்பாலகனுடன் அவரது தாயார். மனைவியின் உடலைப் பொறுப்பேற்கவேண்டிய சூழலில் அவர். தாயற்ற குழந்தையாகையால் சில நாட்கள் வைத்தியசாலையில் வைத்துக் கவனித்து தேற்றிவிட்டுத்தான், பக்குவங்கள் சொல்லி பிள்ளையை வீட்டுக்கு விடமுடியும்.

தாயாரோ தலையில் அடித்து அரற்றுகிறார்: "நான் படித்துப் படித்துச் சொன்னேனே... குடும்பத்துக்காகவும் பணத்தை மீதம் பிடியென்று...என்ரை மருமகளுக்கு இரத்தம் போதாதாமே... முட்டும் இளைப்பும் என்ரை மருமகளுக்கு இயமனாக வந்துட்டுதே..."

மகனைக் கண்டதும் அவரது கையைப் பிடித்து குளறுகிறார்: "சத்தியம்... சத்தியம்.. சத்தியம் சாகாது என்றாயே... உன்ரை சத்தியம் உன் மனைவியைக் காப்பாற்றவில்லையே..!" என்று கதறினாள். சத்தியநாதனோ தாயின் கரங்களைப் பிடித்தவாறு வாயை மூடிக்கொண்டு விம்மிக் கொண்டிருந்தார். மகளோ இறந்துவிட்ட தாயை எழுந்திருக்கச்சொரி தாயின் உடலை உலுக்கி.. உலுக்கி, அழுது கொண்டிருந்தாள்...

ஏதோவிதமாக அதன்பின், ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் செய்துமுடித்தார் சத்தியநாதன்.

மூத்த பெண்பிள்ளை கவலையைச் சுமந்துகொண்டு இளைய சிசுவுக்கு அம்மாவாகவும் அக்காவாகவும் இருந்து குழந்தையை நன்கு போசித்து, வளர்த்து வருகிறது பேத்தியாரின் உதவியுடன்.

சில வருடங்கள் சென்றன. ஆசிரியரும் ஓய்வு பெற்றார். அவரது தாயாரும் வயோதிபம் காரணமாக மண்ணுலகை விட்டு நீங்கினார். பேத்தியாரின் இழப்பு பேரப்பிள்ளைகளை மிகவும் பாதித்தது. குறிப்பாக மூத்த பெண்பிள்ளை தாயுமின்றி பேத்தியாரும் இன்றி தன் வாழ்க்கை இப்படியானதே என்று பெருதும் மனமுடைந்து வருந்தினாள்.

ஓய்வுபெற்றுவிட்ட சத்தியநாதன் தன் கவனிப்பில் குடும்பத்தை வைத்திருந்தாராகிலும் அவருக்கும் வயதாகிக்கொண்டிருந்தது.

அவர், இப்போ இறந்தவர்களைப் பற்றி கவலைப்படவில்லை.

இருக்கின்ற தனது இரு பிள்ளைகளும் தனக்குப்பிறகு நிற்கதியாகிவிடக்கூடாது என்பதுதான் அவரது கவலை.

தாயார் இறக்கும் தறுவாயில் ஒன்பது வயதாக இருந்த பெண் பிள்ளைக்கு இப்போ வயது பதினெட்டு. தாயாரைப் பரலோகம் அனுப்பிவிட்டு அவரது கையில் வந்து வீழ்ந்த அந்த ஆண்குழந்தைக்கோ இப்போது வயது ஒன்பது.

அவன் வளர்ந்து தமக்கையாருக்கு சீதனபாதனம் கொடுத்து ஒப்பேற்றவதற்குள் தமக்கை யாருக்கு வயதாகிவிடும்...

ஓய் வூதியம், குடும்பச் செலவுடன் போய்விடுகிறது. சாப்பாடு, படிப்பு, உடுப்பு... என்று செலவானதும் கையறுநிலைக்கு வந்துவிடுவார். என்ன இல்லையாயினும் பையனுக்கும் பொண்ணுக்கும் நல்ல உணவுவகைகளை வாங்கினார். வீட்டில் ஆக்கி உண்டார்கள். கடைதெருவென்று செலவு செய்வதில்லை. *நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்* இல்லையா..!

இவ்வாறு தள்ளாடும் வயதில் குடும்ப பாரத்தை தனியாகச் சுமந்து ஆற்றமுடியாக் கவலைகளுடன் வாழ்க்கை வண்டியை ஓட்டிக்கொண்டிருக்கையில், ஒரு நாள், காலை, மகள் முற்றத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தாள். மகன் முற்றத்தில் பட்டத்துடன் விளையாடிக்கொண்டிருந்தான். அவர்களது படலையில் புதுக் கார் ஒன்று வந்து நிற்கிறது. அதிலிருந்து ஒரு வாலிபன் இறங்கிவந்தான். அவன் நல்ல நவநாகரிக உடை அணிந்திருந்தான்.. மகன் ஓடிச் சென்று தந்தையிடம் கூறுகிறான்..

"யாரோ காரில் வந்திருக்கிறார்கள்..அப்பா..!"

சத்தியநாதன், எண்ணுகிறார்.. 'யாரோ தங்களுக்கு வேண்டியவரின் முகவரி தெரியாமல் அலைபவர்கள்.., அந்த முகவரியைச் சரியாகத் தெரிந்துகொள்வதற்காக வருகிறார்கள் போலும்...'

அப்படியே சற்றுத் தட்டுத் தடுமாறி முற்றத்துக்கு வருகிறார்.

அங்கு வந்த வாலிபன், ஆசிரியரின் தோற்றத்தைக் கண்டு அதிர்ச்சியடைகிறான். இருந்தாலும் "சேர்! என்னை ஆசீர்வதியுங்கள்..." என்று சொல்லி பாதம் தொடுவதற்காய் பணிகிறான்..

எதுவும் புரியாமல் அவனது தலையைத்தொட்டு "நல்லாயிரப்பா என்று வாழ்த்திய சத்தியநாதன், யாரப்பா நீ உன்னை எனக்கு அடையாளம் தெரியவில்லை"

"சேர்..! உங்கள் உதவி கிடைத்த பலபேரில் நானும் ஒருத்தன்சேர்..நான் கண்ணன். என்ரை பல்கலைக்கழக படிப்பைத் தொடங்குறதுக்கு பிள்ளையார் சுளி போட்டவர் நீங்கள்.. சேர்!

என்ர படிப்பு முடிஞ்சதும் நேரே வெளிநாடு சென்றுவிட்டேன். என் பெற்றோர் எனக்காகப் பட்ட கடனையெல்லாம் அடைத்துவிட்டேன். ஆனால், உங்களிடம் நான் பட்ட கடனை என்னால் அடைக்க முடியாது சேர்... அந்தளவிற்குப் பெரியவர் நீங்கள்.. கண்ணீர் மல்கக் கூறினான். உங்களைப் போலொருவர் இனிப் பிறந்துதான் வரவேணும். உங்கடை கஷ்டத்தைப் பொருட்டா நினைக்காமல் எங்கடை கஷ்டத்தை பெரிசா நினைச்சவர் சேர் நீங்கள்..!

நீங்கள் என்னகோரினாலும் அதைச் சிரம்மேற்கொண்டு செய்யக் காத்திருக்கிறன்

உங்கள் குடும்பத்தில் ஒருத்தனாக என்னை எண்ணிக் கொள்ளுங்க சேர்..! அப்போதாவது நான்பட்ட கடன் தீருமா தெரியவில்லை.....!

சத்தியநானின் கண்களிலும் ஈரம் கசிந்தது. இந்தக் காலத்தில் இப்படியொரு பிள்ளையா..? அவர் கடைப் பிடித்த சத்தியநெறி, தக்க தருணத்தில் அவரைக் காத்ததால், அவர் இப்பொழுது உணர்ச்சிப் பெருக்கில் திளைத்துக் கொண்டிருந்தார்.

கல்கியிலிருந்து...
கு.பொன்னுத்துரை

# தமிழர் புதுவருடம் எது?



| | |
|---|---|
| தை-சுறவம் | ஆடி - கடகம் |
| மாசி-கும்பம் | ஆவணி - மடங்கல் |
| பங்குனி - மீனம் | ஐப்பசி - துலை |
| சித்திரை- மேழம் | புரட்டாசி -கன்னி |
| வைகாசி - விடை | கார்த்திகை - நளி |
| ஆனி -இரட்டை | மார்கழி -சிலை |

வரலாற்று உண்மைகளையும், ஆய்வுகளையும் தர்க்கரீதியாகச் சிந்தித்துப் பார்ப்பதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். அத்து டன் பண்டைத் தமிழரின் 'காலக் கணக்கு' முறை குறித்தும் கருத் தில் கொள்ள விழைகின்றது.

இப்போது வழக்கத்தில் உள்ள காலக்கணக்கு முறையைக்கவனத தில் எடுத்துக் கொண்டால் அது பற்சக்கர முறையில் உள்ளதைக் கவனிக்கலாம். இந்த அறுபது ஆண்டுகளுக்கும் *பிரபவ* முதல் *அட்சய* என்று அறுபது பெயர்கள் இருக்கின்றன. இந்த அறுபது ஆண்டுகளின் பெயரில் ஒரு பெயர் கூடத் தமிழ்ப் பெயர் இல்லை!

இந்த முறைமை வடநாட்டு மன்னனான சாலிவாகனன் என்ப வனால் கிறிஸ்துவுக்கு பின் 78ம் ஆண்டில் வடநாட்டில் ஏற்படுத் தப்பட்டது என்று வரலாற்று ஆசிரி யர்கள் கூறுவார்கள். கனிஷ்கன் என்ற அரசனாலும் இது ஏற்படுத் தப்பட்டதுஎன்றுகூறுவோரும்உண்டு. பின்னர் தென்னாட்டில் ஆரியர் களின் ஊடுருவலால், ஆட்சியால் இந்த ஆண்டுக்கணிப்புமுறை படிப்படியாக பரப்பப்பட்டு நிலை நிறுத்தப்பட்டுள்ளது

எந்த ஓர் இனத்தவரின் ஆட்சி ஒரு நாட்டில் நிறுத்தப்படுகின்றதோ அந்த இனத்தவரின் பழக்க வழக் கங்கள், பண்பாடுகள், கலைகள் போன்றவை அந்த நாட்டினரின் பழக்க வழக்கங்களோடு கலந்து விடுவது இயல்பு. அந்த வகையில் இந்தச் சாலிவாகன முறை பின்னர் மெல்ல மெல்ல நடைமுறைப் பழக் கத்திற்கு வந்துவிட்டது. அறுபது ஆண்டு பற்சக்கர முறை காரண மாக ஆரியர்களிடையே அறுபது வயது நிரம்பியவர்கள் சஷ்டி பூர்த்தி என்ற அறுபதாண்டு விழாவைக் கொண்டாடும் வழமையும் இருக் கின்றது.

மேலும் இந்த அறுபது ஆண்டு முறையைப் புகுத்திய ஆரியத்தின் விளக்கமும் மிகுந்த ஆபாசம் நிறைந்த பொருள்கொண்ட தாகும். அபிதான சிந்தாமணி என்ற நூலில், கிருஷ்ணமூர்த்தி 60 ஆயிரம் கோபியர்களுடன் கூடியிருப்பதாக வும், நாரதர் தனக்கு ஒரு கன்னிகை யைத் தரும்படி கேட்டதாகவும், கிருஷ்ணர் சேரத பெண் இல் லாத நிலையில் நாரதரே பெண் ணாகி அறுபதுவருடங்கள் கண் ணனுடன் கூடிவாழ்ந்து அறுபது குமாரர்களைப் பெற்றார். அவர் கள்தான் 'பிரபவ முதல் அட்சய' இறுதியானவர்களாம். இவர்கள் வருஷமாகும் பதம் பெற்றார்கள என்றவாறான கதை கூறப்பட்டுள்ளது.

மேல்நாட்டு அறிஞர் சிலேட்டர் என்பவர், தமிழருடைய வானநூற் கணித முறையை வழக்கில் உள்ள எல்லாக் கணிதங்களிலும் நிதான மானது என்று கூறியுள்ளார். தொல் காப்பியத்திலும், சங்க நூல்களிலும் காணப்படும் வானியற் செய்திகள் உருப்பெற்றமைக்கு பல்லாயிர மாண்டுகள் பிடித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆரியர் ஊடுருவலுக்கு முன்ன ரேயே தமிழர்கள், வானியலில் அரும் பெரிய அளவில் முன்னேறி இருந்த னர் என்று அறிஞர்கள் கூறுகின்றார் கள். தமிழகத்துப் பரதவர்கள் திங்க ளின் நிலையைக் கொண்டு சந்திர மானக் காலத்தை கணித்தனர் என் றும், தமிழகத்து உழவர்கள் சூரியன், திங்கள் ஆகியவற்றின் இயக்கத்தை யும், பருவங்களையும் அறிந்திருந்த னர்என்றும்ஆய்வுகள்தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் வானியலில் வல்ல அறிஞர்களை 'அறிவர், கணி, கணியன்' என அழைத்தார்கள். அரசனுடைய அவையில் பெருங் கணிகள் இருந்ததாகச் சிலப்பதி காரம் கூறுகின்றது. மூவகைக் கால மும் நெறியினாற்றும் 'அறிவர்கள்' குறித்துத் தொல்காப்பியரும் குறிப் பிடுகின்றார்.

அதாவது பண்டைக் காலத் தமிழர்களது ஒரு நாட்பொழுதின் அறுபது நாழிகைகள் என்பன தற்போதைய கணக்கீடான 1440 நிமிடங்களோடு — அதாவது 24 மணித்தியாலங்களோடு - அச்சொட டாகப் பொருந்துகின்றன. தமிழர்கள் ஒரு நாட்பொழுதை, தற்போதைய நவீன காலத்தையும் விட, அன்றே மிகநுட்பமாகக் கணித்து வைத் திருந்தார்கள் என்பதே உண்மையு மாகும். பின்னாளில் வந்த ஆரியர் கள் ஓர் ஆண்டை நான்கு பருவங்க ளாக மட்டும்தான் வகுத்தார்கள். ஆனால் பண்டைக்காலத் தமிழர் களோ, தமக்குரிய ஆண்டை, அந்த ஆண்டுக்குரிய தமது வாழ்வை, ஆறு பருவங்களாக வகுத்திருந்தார்கள்.

காலத்தை, அறுபது நாழிகைகை களாகவும், ஆறு சிறு பொழுதுகளா கவும், ஆறு பருவங்களாகவும் பகுத்த பண்டைத் தமிழன் தன்னு டைய புத்தாண்டு வாழ்வை இள வேனிற் காலத்தில்தான் தொடங்கு கின்றான். இங்கே ஒரு மிக முக்கிய மான விடயத்தை வாசகர்கள் கருத் தில் கொள்ள வேண்டும்! பண்பாட் டுப் பெருமைகொண்ட மற்றைய பல இனத்தவர்களும், தங்களுடைய புத்தாண்டு வாழ்வை, தங்களுடைய இளவேனிற் காலங்களில்தான் ஆரம்பிக்கின்றார்கள். தமிழர்கள் மட்டுமல்ல, சீனர்களும், ஜப்பானியர் களும், கொரியர்களும், மஞ்சூரியர் களும் என, பல கோடி இன மக்கள் -தொன்மையான பண்பாட்டு வாழ் வினைக்கொண்ட பெருமை வாய்ந்த மக்கள்- தங்களுடைய இளவேனிற் காலத்தையே தமது புத்தாண்டாகக் கொண்டாடி வருகின்றார்கள்.

இன்றும் கூட ஆரியர்களின் பண்டிகைகளான சித்திரை வருடப் பிறப்பு, தீபாவ்ளி போன்ற பண்டிகை களை, தன் இனத்துப் பண்டிகை களாக எண்ணி மயங்கிப் போய்க் கிடக்கின்றான் தமிழன்.

"தமிழனுக்கு தைத்திங்கள் முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டு ஆகும்."

பொங்கல் திருநாள் தமிழரின் தனிப்பெரும் திருநாள் ஆகும். பொங்கல் திருநாளைத் தமிழர்கள் 'புதுநாள்' என்று அழைத்தார்கள். பொங்கல்திருநாளுக்கு முதல்நாளை, போகி (போக்கி) என்று அழைத்தார் கள். போகி என்பது, போக்கு - போதல்என்பதாகும் (ஓர் ஆண்டைப் போக்கியது- போகியது- போகி) பொங்கல் என்பது பொங்குதல் - ஆக்குதல். இது தொழிற் பெயர். புத்தொளி, பொங்கல்என ஆகுபெயர ஆகியுள்ளது.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற முதுமொழியை 'புத்தாண்டு வந்தால் புதுவாழ்வு மலரும்' -என்ற கருத்தோடு ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டும்.

தமிழர்-யப்பானிய பண்பாட்டு ஒற்றுமை நிலையை வெளிப்படுத் தும் நடைமுறையாகத் தைப்பொங் கல் விளங்குகிறது. யப்பானியர் தை 14ம் திகதி அன்று பழைய பயன்பாட் டுப் பொருட்களை எரிப்பார்கள். தமிழர்களும் அவ்வாறே செய்கின் றார்கள்.

இந்தக் கட்டுரைக்குப் பல நூல் களும், ஆய்வுநூல்களும் பயன்பட் டன. முக்கியமாகத் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், தமிழர் நாகரிகமும் பண்பாடும் ஒப்பியன் மொழி நூல், வாக்கிய பஞ்சாங்கம், பண்பாட்டுக் கட்டுரைகள், செம்பருத்தி சஞ்சிகைக் கட்டுரைகள், பொங்கலே தமிழ்ப் புத்தாண்டு- மலேசிய சிறப்பு மலர், தமிழர் யப்பானியர் வாழ்வில் தைப் பொங்கல் போன்ற நூல்கள் பேரு தவி புரிந்தன. சில சொல்லாக்கங் களும்சொல்லாடல்களும் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன.

ஆரிய இந்து ஆண்டு முறையை (சித்திரை) பின்பற்றும் கூட்டம், கூறும காரணப்படி பார்த்தாலும் யாரும் ஒரு துவக்கத்தை உச்சியில் துவக்குவ தில்லை. ஒரு நாள் பொழுது துவங் கும் பொழுது ஞாயிறு உச்சியில் இருக்கும்பொழுது துவக்குவ தில்லை. மாறாக ஒரு நாள் நள்ளிரவில் துவங்கி சிறிது சிறிதாக விடியத்து வங்கி அரை நாள் முடியும் பொழுது ஞாயிறு உச்சிக்கு வருகின்றது. மீதும் ஞாயிறு சிறிது சிறிதாக மறையத் துவங்கி நள்ளிரவில் அந்த நாள் முடிவடைகின்றது. அது போலவே ஆண்டும் ஞாயிறு உச்சியில் இருக் கும் பொழுது துவங்குவதில்லை. உலகில் எந்த இனமும் கொடும் கோடை காலத்தில் தங்கள் ஆண் டினை துவங்குவதில்லை.

உலகின் முதன்மையாக தோன் றிய இனங்களுள் முதன்நிலை பெறும் தமிழ் மொழி தமிழர் இனம் தமிழர் நாகரீகம் என்பவற்றின் தாய கம் குமரிக்கண்டம் என்றே தொல் பொருள் வல்லுநர்கள் தமது ஆய்வு களின் மூலம் நிறுவியுள்ளனர்.

பண்டைத் தமிழன் இயற்கையை வணங்கி வந்தவன். 'மழை, வெயில், குளிர், பனி, தென்றல், வாடை' இவை மாறி மாறிப் பருவக் காலங் கள் மனிதனை ஆண்டு வந்ததால் தமிழன் ஆண்டு என்று அழைத்தான் என திரு. வெங்கட்ராமன் குறிப்பிடு கின்றார். பண்டையத் தமிழர்கள் இயற்கையை ஆதாரமாகக்கொண்டு, காலத்தைப் பகுத்தனர்.

"வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம்" என்று ஒரு நாளை ஆறு சிறு பொழுதுகளாக பகுத்திருந்தனர். அந்த ஆறு சிறு பொழுதுகளின் தொகுப்பை அறுபது நாழிகைகள் எனவும் பகுத்துக் கணக் கிட்டார்கள். அதாவது ஒரு நாளில் ஆறுசிறு பொழுதுகளுள்ளன. அந்த ஆறு சிறு பொழுதுகள் கழிவதற்கு அறுபது நாழிகைகள் எடுக்கின்றன.

1 நாழிகை -24 நிமிடங்கள்

60 நாழிகை -1440 நிமிடங்கள்

இதனை இன்றைய கிருத்தவ கணக்கீட்டின்படி பார்த்தால்,

1440 நிமிடங்கள் -24 மணித்தியா லங்கள்

24 மணித்தியாலங்கள் - 1 நாள்

இவ்வாறு இன்றைய நவீன காலக் கணிப்பீட்டு முறையுடன் அச்சொட்டாகப் பொருந்தும் வகை யில், பண்டையத் தமிழரின் காலக் கணிப்பீட்டு முறைமை மிகவும் நுட்பமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

நாட்களை இவ்வாறு கணக்கிட்ட தமிழன் காலத்தை ஆறு பருவங் களாகப் பகுத்தான்.

இளவேனில் -தை - மாசி மாதங்கள்

முதுவேனில் -பங்குனி- சித்திரை மாதங்கள்

கார் - வைகாசி - ஆனி மாதங்கள்

கூதிர் - ஆடி - ஆவணி மாதங்கள

முன்பனி- புரட்டாசி - ஐப்பசி மாதங்கள்

பின்பனி- கார்த்திகை - மார்கழி மாதங்கள்

பண்டையத் தமிழர் தம் தாய் மொழியாக தமிழையும் தமது நாகரீகத்தையும் தம் இன அடை யாளங்களையும் பேணி வந்த அதே வேளை, தமது நாகரீகத்தின் அடை யாளமாக காலக்கணிப்பீடுகளையும் சரியாக மதிப்பீடு செய்து தமது வாழ்வியல் கூறுகளையும் நிர்ணயம் செய்து கொண்டனர் என அலெக்ஸ் ராண்டர்-கோண்டிரடோஸ், எஸ்.ஜி. வெல்ஸபோன்ற மெய்யியலாளர்கள் தமிழர்களின் பூர்வீகத்தை உறுதி செய்துளளனர்.

காலத்தை, அறுபது நாழிகை கைளாகவும், ஆறு சிறு பொழுது களாகவும், ஆறு பருவங்களாகவும் பகுத்த பண்டைத் தமிழன் தன்னு டைய புத்தாண்டு தொடக்கத்தை இளவேனிற்காலத்தின் ஆரம்ப நாளா கக் கொண்டு தை மாதத்தினை தனது இனத்துக்கான புத்தாண்டாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான்.

தமிழாண்டின் தொடக்கக் கால கட்டம், உழைப்பின் பயனைப் பெற்று மகிழும் காலகட்டமாகவும் அமைந்தது. புத்தொளி வழங்கிய கதிரவனைப் போற்றிய தமிழ் நெஞ் சம்உழைப்பையும், தனக்குத்துணை நின்ற உயிரையும் போற்றியது. கதிர வனின் சுழற்சியைக் கொண்ட காலக் கணிப்பைக் காட்டும் அறிவியலும், நன்றியுணர்வை வெளிப்படுத்தும் முதிர்ந்த பண்பாடும் பொங்கல் விழா வில் போற்றப்படுவதை நாம் காண லாம். "தை பிறந்தால் வழி பிறக்கும்" எனும் தமிழர் முதுமொழியை "புத்தாண்டு வந்தால் புதுவாழ்வு மலரும்" என்ற கருத்தோடு ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டும்.

தமிழர்கள் மட்டுமல்ல, உலகத தில் பல்வேறு இன மக்களும் தத்தமக்குரிய புத்தாண்டை இள வேனில் காலத்திலேயே கொண்டாடு கின்றனர். தத்தமது புதுப் பணி களையும், நற்செயல்களையும் தொடங்குகின்றனர். ஆனால் சித்திரை மாதத்தில் குறிப்பாகத் தமிழர்கள் எந்த நற்செயல்களையும் தொடங்கு வதில்லை என்பதையும் கவனத் தில் கொள்ள வேண்டும்.

தை மாத தொடக்க நாளை தமிழர்கள் தைப்பொங்கல் நாளாக கால காலமாக கொண்டாடி வருகின றனர். அதில் தோரணங்கள் கட்டு தல், புதுப் பானையில் புது நீர் அள்ளி பொங்கல் வைத்தல், பொங்கும் போது "பொங்கலோ பொங்கல்" என ஆரவாரம் செய்தல், பொங்கலை பரிமாறி உண்ணல், புத்தாடை அணிதல், முன்னோர்க்கு படையல் இடுதல், மாடுகளுக்கு உணவளித் தல், பணியாளர்களுக்கு புத்தாடை வழங்குதல் போன்ற செயல்பாடு கள் தமிழர்களிடையே பழங்காலந் தொட்டு இருந்து வருகின்றது.

இவை அனைத்தும் நீண்ட நெடுங்காலமாக யப்பானியர்களா லும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இது அவர்களுக்கும் எமக்கும் இடையிலான ஒரு வரலாற்றுப் பண்பாட்டு ஒருமைப்பாடு இருந் திருக்க வேண்டும் என சில வர லாற்று ஆய்வாளர்கள் கருதுகின றனர்.

தமிழ்த் திங்கள்களின் பெயர் களைப் பார்ப்போமா? தை முதல் மார்கழி ஈறாக உள்ள 12 திங்கள் களுக்கும் தனித் தமிழ்ப் பெயர்கள் உண்டு.

அவை அவை என அறிவீர களோ? மிக மிக முற்காலத்தி லேயே தமிழன் வகுத்துத் தந்த கால அட்டவணை, வான வெளி யில் ஞாயிறு வலம் வருதலை அடிப்படையாகக் கொண்டது. இந்த வான மண்டலத்தைப் பன் னிரண்டு பகுதிகளாகப் பிரித்து 'ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு பகுதியிலும் கண்ணுக் குப் புலனாகும் விண்மீன்களைக் கற்பனைக் கோடுகளால் இணைத் துப் பெறும் உருவங்களின் அடிப் படையில் பெயர்கள் இடப்பெற றுள்ளன.

இப்படிப் பெயர் கொடுத்தவர் கள் கிரேக்க வானியலார் என்பர். அவர்கள் பயன்படுத்திய சொல் என்ன தெரியுமா? 'horos'. இன்று ஐரோப்பிய மொழிகளில் வழங்கும் பல சொற்களுக்கு, -'horoscope, horodateur, hour,heure, year...' -இச்சொல்லே வேர்ச் சொல். இந்த 'horos' என்ற கிரேக்கச்சொல்லுக்கு 'boundary,limit, border' என்று பொருள். இந்தச் சொல்லுக்கு மூல வேர்ச்சொல் தேடப் போனால் நம் தமிழுக்குத்தான் வர வேண டும். பக்கம், விளிம்பு எனப் பொருள் படும் ஓரம் என்ற சொல்லின் அடிப்படையில் பிறந்த சொல் ஓரை. (காண்க : தமிழ்மொழி அகராதி - நா. கதிரைவேற்பிள்ளை)

இந்த ஓரை என்ற சொல்லின் கிரேக்க வடிவம்தான் 'horos'. வானப்பகுதிகள் பன்னிரண்டிலும் ஞாயிறு தங்கிச் செல்லும் பக்கத் தைத் தமிழர்கள் ஓரை என்று அழைத்தார்கள். இதற்கு வட மொழியில் 'இராசி' என்று பெயர். கிரேக்கத்துக்கு ஏற்றுமதி ஆனது ஓரை என்ற தமிழ்ச் சொல் மட்டும் அல்ல, அஃது உணர்த்தும் பொரு ளும் தமிழர்களின் வானியல் அறிவும தான். ஆக,தமிழர்கள் கண்ட 12 ஓரைகளைத்தான் கிரேக்கர்களும் கண்டனர்.

ஞாயிறு எந்த ஓரையில் தங்கு கிறதோ, அந்த ஓரையின் பெய ரையே அந்தத் திங்களுக்கு (மாதத் தக்கு)ப் பெயராய் இட்டனர் தமிழர். கிரேக்கர்களும் உரோமர்களும் இம்முறையைப் பின்பற்றவில்லை. எனவே,தமிழர்களாகிய நாம் நம் திங்கள்களுக்கு (மாதத்துக்கு)ச் சுறவம் முதல் சிலை ஈறாக உள்ள தனித் தமிழ்ப் பெயர்களைப் பயன் படுத்துதல் வேண்டும். முதலில் கடினமாகத் தோன்றினாலும் பழகியபின் இவை எளிமையாகி விடும்.

வார நாள்கள் ஏழினுக்கும் கோள்களின் பெயர்களை இட்டனர் தமிழர். இம்முறையைக் கிரேக்கர் கள் பின்பற்றவில்லை, உரோமர் களோ மிகப் பிற்காலத்தில் தான் இம்முறையைக் கடைப்பிடித்தனர்.


கிழமை என்ற சொல்லுக்கு 'உரிமை' என்று பொருள். எனவே, ஞாயிற்றுக்கு உரிய நாள் என்ற பொருளில் ஞாயிற்றுக் கிழமை என்கிறோம். புதன், சனி என்பன தமிழ்ச் சொற்கள் அல்ல. ஆகவே, அவற்றுக்கு ஈடான அறிவன், காரி என்ற தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல் நன்று. ஆக, தமிழர்களின் புத்தாண்டு அதாவது வள்ளுவர் ஆண்டு சித்திரைத் திங்களில் தொடங்கவில்லை மாறா கச் சுறவம் (முதல்நாள் (சனவரி 14அல்லது15) தொடங்குகிறது எனவே தைத் திங்கள் முதல்நாளில் இருந்தே நம் புத்தாண்டைக் கொண்டாட்டங்களை அமைத்துக்கொள்ள வேண்டியது தமிழர்களாகிய நம் கடமை.

-மை. அறிவொளி நெஞ்சகுமரன்

# அவுஸ். தோல்விக்கு முற்றுப்புள்ளி வைக்க டோனிக்கு 5 அறிவுரைகள்




இந்திய அணி அவுஸ்திரேலியாவில் தொடர்ந்து இரண்டாவது போட்டியிலும் தோல்வியை தழுவியுள்ளது. இரண்டு போட்டிகளிலும் இந்திய அணியின்பட்டிங் அபாரமாக இருந்தது. ரோஹித் ஷர்மா இரண்டு போட்டிகளிலும் சதம், மோசமான பார்மில் இருந்த இந்திய துணை கப்டன் விராட் கோலி இரண்டு போட்டிகளிலும் அரைச்சதம் என பட்டிங் வரிசை வலுவாக இருப்பதும், ரஹானே, டோனியின் பட்டிங்கும் கை கொடுத்தது. ஆனால் இரண்டு போட்டிகளிலும் டோனி அண்டு கோ சொதப்ப காரணம் பந்து வீச்சு தான். டோனிக்கு அவுஸ்திரேலியாவில் தோல்வி தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அதற்கு டோனிக்கு தலை வலியாக இருப்பது இந்த 5 விடயங்கள் தான். இதனை சரி செய்தால் போதும் இந்திய அணி மீண்டும் வெற்றிப் பாதைக்கு



திரும்பும்.

**ஒரு ஸ்பின்னர் உத்தி**

அஸ்வின், ஜடேஜா என இரண்டு ஸ்பின்னர்களை கொண்டு தடுமாறி வருகிறது. துணை கண்ட பிட்ச் போல 3 வேகப்பந்து வீச்சாளர், 2 ஸ்பின்னர்கள உத்தி ஆஸி ஆடுகளங்களில் எடுபடாது. எகிறிச் செல்லும் தன்மை கொண்ட ஆடுகளங்களில் 4 வேகப்பந்து வீச்சாளர்களை கொண்டு மிரட்ட வேண்டும். அதுவும் இஷாந்த், உமேஷ் போன்ற அதி வேகப்பந்துவீச்சாளர்கள் மணிக்கு 140 கி.மி வேகத்தில் பந்து வீசக்கூடியவர்களை பயன்படுத்த வேண்டும். அஸ்வின், ஜடேஜாவை சுழற்சி முறையில் பயன்படுத்துவது சிறந்தது.

**வேகம், தரம், துல்லியம்:**

தற்போது உள்ள அணியில் இஷாந்த், உமேஷ், புவனேஷ் குமார், சரண் ஆகியோர் வேகம் நன்றாக இருந்தாலும் சரியான இடத்தில் பந்துவீசுவது. ஸ்டெம்புகளை நோக்கிய துல்லியமான பந்துவீச்சு ஆகியவை மெருகேற வேண்டும். சரியான பந்துவீச்சு பார்ட்னர்ஷிப் இன்றி தடுமாறும் வேகப்பந்துவீச்சு துறையை முறையாக பலப்படுத்த டோனி முயல வேண்டும். ஆஸி அணியில் ஸ்டார்க், ஜோன்ஸன் இல்லாத போதும் சமாளிக்கும் விதம் அணி தயார்படுத்தப்பட்டுள்ளது. அதனை இந்திய அணியும் கவனத்தில் கொண்டு அணியை மேம்படுத்த வேண்டும், இது அனைத்து வெளிநாட்டு தொடர்களுக்குபொருந்தும்.

**யார் அந்த 7ஆவது நபர்!**

இந்திய அணி நீண்ட நாட்களாகவே வேகப்பந்துவீச்சு ஓல்ரவுண்டர் இல்லாமல் தடுமாறி வருகிறது. பட்டிங்கிற்கு பெரிதும் உதவ அவசியம் இல்லை என்றாலும். கடைசி நேரங்களில் சிக்ஸர்களை விளாசவும், பந்து வீச்சில் கைகொடுக்கவும் யாரும் இன்றி தவிக்கிறது. ஆஸி அணியின் போல்க்னர் போன்ற நபர் இந்திய அணியில் இல்லை என்பது நீண்டகால கோரிக்கை. டோனி இதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**பயிற்சியாளர் தேவை!**

இந்திய அணிக்கு தனி பயிற்சியாளர் தேவை, ரவி சாஸ்திரியின் பணி டெஸ்ட், ஒருநாள், இருபது- 20 என அனைத்து போட்டிகளுக்கும் மேலாளர் மற்றும் பயிற்சியாளர் பதிவுகளை மேற்கொண்டு வருகிறார். இவர் தலைமையில் டெஸ்ட்டில் மட்டுமே பிரகாசிக்கும் இந்தியா ஒரு நாள், இருபது-20 தொடர்களை இழந்துள்ளது. கிரிஸ்டனுக்கு பிறகு இந்தியா ஒருநாள் போட்டியில் தடுமாறியே வருகிறது. பிளட்சரும் இந்திய அணியின் சரியான காம்பினேஷனை உருவாக்க தவறவிட்டார். கப்டன் டோனி பிசிசிஐயுடன் இணைந்து இந்திய அணிக்கு ட்ராவிட், கங்குலி போன்ற இந்திய அணியின் நிலையை நன்றாக உணர்ந்த நபரை பயிற்சியாளராக்க வேண்டும்.

டோனி இந்திய அணியின் வெற்றி காம்பினேஷனை பெரிதும் டெஸ்ட் செய்து பார்க்கவில்லை. 2011ஆம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற அணிக்கு பின் ஓய்வு பெற்ற வீரர்களுக்கு பதில் சர்வதேச போட்டி ஆடிய வீரர்களை மாற்றினரர். 2015 ஆம் ஆண்டு உலகக் கோப்பை அரையிறுதிக்கு சென்ற அணியில் இன்று வரை பெரிய மாற்றம் எதுவும் இல்லை. காயம் காரணமாக வீரர்கள் வெளியேறினால் புதுமுக வீரர்களை களமிறக்குகிறார். ஆஸி முதல் போட் டியில் பாரிஸ், போலந்து என இரண்டு புதுமுக வீரர்களை கள மிறக்குகிறது இது போனறசோதனைகளைடோனி செய்யவி ல்லை என்பது தான் பெரிய குறை யாக உள்ளது. இந்திய முதல்தர போட்டிகளில் 145 கி.மீ வேக த்தில் பந்து வீசும் பல பந்து வீச சாளர்களை அணக்குள் இணை க்க டோனி தனது வின்னிங் பக்டரை தளர்த்த வேண்டும்.

இந்த ஐந்து அறிவுரைகள் டோனிக்கு மட்டுமல்ல. அணியில் வீரராக ஆடும் டெஸ்ட் கப்டன் விராட் கோலிக்கும் தான். இன் னும் அவரும் ஒரு அந்நிய தொடரை கூட சந்திக்கவில்லை. இங்கிலாந்து, தென்னாப்பிரிக்க, ஆஸி ஆடுகளங்களில் விரை வில் இந்த விடயங்களை சரி செய்து இந்திய அணி கெத்தான வெற்றியை பதிவு செய்யும் என்று எதிர் பார்ப்போம். (நன்றி :- விகடன்)



# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடியோர்: K.J.ஜேசுதாஸ்
வரிகள்: புலமை பித்தன்
இசை: M.S.விஸ்வநாதன்
திரைப்படம்: நீதிக்கு தலைவணங்கு
பாடல்: இந்த பச்சைக்கிளிக் கொரு செவ்வந்திப்பூ



இந்த பச்சைக்கிளிக்கொரு செவ்வந்திப்பூவைத்
தொட்டிலில் கட்டிவைத்தேன்
அதில் பட்டுத் துகிலுடன் அன்னச்சிறகினை
மெல்லென இட்டு வைத்தேன்
நான் ஆராரோ என்று தாலாட்ட
இன்னும் யாராரோ வந்து பாராட்ட

(இந்த பச்சைக்கிளிக்கொரு....)
எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே
பின் நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பதிலே
நான் ஆராரோ என்று தாலாட்ட
இன்னும் யாராரோ வந்து பாராட்ட

(இந்த பச்சைக்கிளிக்கொரு....)
தூக்க மருந்தினை போன்றவரை பெற்றவர்
போற்றும் புகழுரைகள்
நோய் தீர்க்கும் மருந்தினைப் போன்றவை
கற்றவர் கூறும் அறிவுரைகள்
(இந்த பச்சைக்கிளிக்கொரு....)
ஆறு கரை அடங்கி நடந்திடில்
காடு வளம் பெறலாம்
தினம் நல்ல நெறிகண்டு பிள்ளை வளர்ந்திடில்
நாடும் நலம் பெறலாம்
நான் ஆராரோ என்று தாலாட்ட
இன்னும் யாராரோ வந்து பாராட்ட
(இந்த பச்சைக்கிளிக்கொரு....)
பாதை தவறிய கால்கள் விரும்பிய
ஊர் சென்று சேர்வதில்லை
நல்ல பண்பு தவறிய பிள்ளையைப் பெற்றவள்
பேர் சொல்லி வாழ்வதில்லை

(இந்த பச்சைக்கிளிக்கொரு....)
நான் ஆராரோ என்று தாலாட்ட
இன்னும் யாராரோ வந்து பாராட்ட

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
விமலா குடும்பம்-உரும்பிராய், செல்வசிங்கம் குடும்பம் -நாவாந்துறை, சிவஞானம் குடும்பம், புவனேஸ்வரி குடும்பம்- வேலணை, முருகேசு குடும்பம், தயாநிதி குடும்பம், ஜெனோவா குடும்பம்.

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்கள் ளும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## திருடர் கவனம்-குறும்பட விமர்சனம்

பூவன் நிறுவனத்தினால் 24 மணி நேரத்தில் படமாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள குறும்படம் திருடர் கவனம். திருட்டுச் சம்பவத்தை மையப் படுத்தி இரண்டரை நிமிடங்களில் நகரும் திரில்லர் வகையான கதைப்போக்கினை கொண்டுள்ளது. இக்குறும்படத்தில் மதீசன், உஷாந் ஆகியோர் நடித்துள்ளதுடன் சசிகரன, கிருஷ்ணா ஆகியோர குறும்பட உருவாக்கத்தில் பணியாற்றியுள்ளனர்.

ஒரு சம்பவம் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. அச்சம்பவத்தின் தொடர்ச்சியை ஒரு குறும்படமாக முன்னிறுத்துகின்றார்கள். எளிதில் எதிர்வு கூறத்தக்க கதையினை கொண்டிருந்தாலும், நீண்ட தொடர்ச்சியான காட்சிகளை செறிவாக படம் முழுவதும் வைத்து கொஞ்சம் புதுமைத் தன்மையாக முயன்றிருக்கின்றார்கள்.

ஒரு இளம்வயது நபர் ஒருவர் நடுச்சாமத்தில் மதில்பாய்ந்து ஒரு குடியிருப்புக்குள் நுழைகின்றார். கதவினைத் திறந்து உள்ளே நுழைந்து யாரும் இல்லை என்பதனை உறுதிப்படுத்தி விட்டு வீட்டில் இருப்பவற்றை அபகரிக்கத் தொடங்குகின்றார்.

அபகரித்துவிட்டு மீண்டும் புறப்படும் சமயத்தில் அங்கே மற்றொரு அறையில் தூங்கிக் கொண்டிருந்த இன்னுமொரு இளைஞனை




எதிர்கொள்ள நேர்கின்றது. தன்னிடம் இருக்கும் கத்தியைக்காட்டி அவனை பயமுறுத்தி எச்சரித்து விட்டு அருகிலுள்ள கிரிக்கெட் பட்டினால் அவ் இளைஞனை பலமாகத் தாக்கி விட்டு அவசரமாக அவ்விடத்தை விட்டு, அபகரித்த பொருட்களுடன் நகர்கின்றான்.

நகர்ந்து ஒழுங்கையினால் செல்லும்போது திடீரென்று ஏதோவொன்றைப் பார்த்து அதிர்ச்சியடைகின்றான். அவன் எதைப் பார்த்து அதிர்ச்சியடைகின்றான் என்பது குறும்படத்தை சுஜாத்தா பாணி சிறுகதை போல் முடிவுக்குக் கொண்டு வருகின்றது.

வசனங்கள் எவையும் குறும்படத்தில் இல்லை. முழுக்க இரவு நேரப்பரப்பில் இருட்டில் குறும்படம் நிகழ்கிறது. இக்குறும்படத்தின் நெறியாள்கை கூட்டு முயற்சியாக இருக்கின்றது.

மதீசனின் நடிப்பு குறும்படத்துக்கு பலம் சேர்கின்றது. இறுதிக்காட்சியில் முகபாவனைகள் மாறுவது அதற்கான சான்று. கதையும் திரைக் கதையும் எந்த புதுமையையும் பெரிதாகச் செய்துவிடவில்லை.

இருட்டினுள் ஒளிப்படம் பிடிக்கப்பட்டிருந்தாலும் பார்வையாளரை சுவாரஸ்யப்படுத்தி வைத்திருக்கின்றது.

மெலிதாக அதிகம் இரைச்சல் தராத வண்ணம் பின்னணி இசை உபயோகப்படுத்தப்பட்டிருப்பது கூடுதலான திகிலை குறும்படத்துக்கு தருகின்றது. எளிமையான நேர்கோட்டுக் கதைகளினை தவிர்த்து இன்னும் சிக்கலான கதைகளை படமாக்குவது பூவன் நிறுவனத்திற்கு தேவையான ஒன்றாக இருகின்றது.

அனோஜன் பாலகிருஷ்ணன்

# ஈழத்துக் கவிதைகள்

- அ.யேசுராசா

## காதல் தொற்றிச் சில வரிகள்...

காதல்பற்றிய என் பிரமைகள்உடைந்தன
பேசப்பட்ட அதன் புனிதத் திரை அகல,
தில்லைவெளியின் இன்மை
நிதர்சனமானது.

நெஞ்சுதவிப்புற நிகழ்ந்த காத்திருப்புகள்:
உயிர்நெருடலில் அளித்தவாக் குறுதிகள்
அர்த்தமிழந்து இருளில்
புதைவு கொண்டன.

அண்ணன் அம்மாவாய்ப் பாசச்சுவர்கள்
முளைத்தெழுந்து வழி மறைத்தன:
சாதியாய்க் கரும் பூதமெழுந்தது:
சிலுவையும் லிங்கமும் மதமாய் மோதின.

அஞ்சிநடுக்குற்று
"என்ன செய்வேன் பேதை நான்,
அவர்கள் அழ அழுது
சிரித்தால், சிரிப்பதே என துவிதி
நாம் பிரிவது நல்லதென"
ஒதுங்கிச் செல்லுவாள், கண்ணீர் பளபளக்க
இழுத்துமூடிய தியாகப் போர்வையுள்
இயலாமை பதுங்கும்;
'மெழுகுதிரியிலும்' 'கற்பூரச் சூட்டிலும்'
அறிவு மயங்க மேலும் குளிர்காய்வாள்.

நீளும் மௌன இருளில்
அன்பின் தடம் மறையும்,
மனிதன் மதிப்பிழந்து
காதல் பொருளற்றுப் போகும்,
நேசித்தவர் நெஞ்சு துயரில்வாட
புத்தகத்தில் மட்டும் காதல் வாழும்!

காலடியில் மென்மை மலர்கள்
நசிந்து சிதைவுறும்;
சமூக யந்திரத்தில்
மனிதம் நெருக்குறும்: உருவழியும்
இன்று
வெறுப்புடன் புரிகிறேன்
இப், புற நிலைகளை.

## புதிய சப்பாத்தின் கீழ்

சமாந்திரமாய்ச் செல்லும்
கரிய தார் றோட்டில்,
நடந்து செல்கிறேன்
கண்களில்,
பிரமாண்டமாய் நிலைகொண்டு
கறுத் திருண்ட
டச்சுக் கற் கோட்டை:
மூலையில்,
முன்னோரைப் பய முறுத்திய
தூக்குமரமும் தெளிவாய்.

பரந்த புற்றரை வெளியில்
துவக்குகள் தாங்கிய
காக்கி வீரர்கள்:
அரசு யந்திரத்தின்
காவற் கருவி.
என்றும் தயாராய்
வினைத்திறன் பேண
அவர், அணிநடை பயின்றனர்:
சூழ்ந்த காற்றிலும்,
அச்சம் பரவும்.

முந்நூறு ஆண்டுகள் கழிந்தனவாயினும்
நிறந்தான் மாறியது:
மொழிதான் மாறியது:
நாங்கள் இன்றும்,
அடக்கு முறையின் கீழ்...

*1984 நவம்பர் மாதம் வெளிவந்த "அறியப்படாதவர்கள் நினைவாக...!" என்ற கவிதை புத்தகத்திலிருந்து.*

சினிமா செய்தி

# ரஜினிமுருகன்

## திரைவிமர்சனம்



மதுரைக்காரங்க வெட்டு குத்து கொலை என்று அலைந்து கொண்டேயிருக்கிறவர்கள் என்கிற தமிழ்த் திரையுலகின் கற்பிதத்தை உடைக்க வேண்டுமென்பதற்காகவே சிரிக்கச் சிரிக்கப் படமெடுத்து அதில் சிந்திக்க வைக்கும் சில விடயங்களையும் சொல்லியிருக்கிறார் இயக்குநர் பொன்ராம்.

எல்லாப்படங்களிலும் பிறக்கிற குழந்தைக்கு அப்பா அம்மா பேர் வைப்பார்கள் என்றால் இந்தப்படத்தில் தீவிர ரஜினி ரசிகரான அப்பாவின் நண்பர் கதாநாயகனுக்கு ரஜினிமுருகன் என்று பெயர் வைக்கிறார்.

நாயகன் சிவகார்த்திகேயனின் அப்பா பள்ளித்தலைமையாசிரியர், அம்மா அதே பள்ளியில் ஆசிரியர், அவருடைய அண்ணன்கள் இருவர், ஒருவர் மென்பொருள்துறையிலும் இன்னொருவர் இராணுவத்திலும் இருக்கிறார்கள்.

அப்பாவின் உடன்பிறந்த அண்ணன்,தம்பி, தங்கைகள் எல்லாம் வெளிநாடுகளில் செட்டில் ஆகியிருக்கின்றனர். எல்லா வகையிலும் வசதியான குடும்பத்தில் வேலைவெட்டியில்லாமல் சுற்றிக்கொண்டிருக்கும் ஒரே நபர் சிவகார்த்திகேயன்.



அவருக்கு இருக்கும் ஒரே வேலை பாரம்பரிய வீட்டில் தனியாளாக இருக்கும் ராஜ்கிரணுக்கு மூன்று வேளை உணவு கொடுப்பதும் அவருக்குத் தேவையான விடயங்களைச் செய்து கொடுப்பதும் தான். கூடவே கதாநாயகி கீர்த்தி சுரேஷைப் பின்தொடருவதும்.

இப்படியே போய்க்கொண்டிருந்தால் போதாது என்பதை உணர்ந்து அதற்குள் குடும்பசென்டிமெண்டை அளவாகக் கலந்திருக்கிறார். மதுரை மண்ணுக்குரிய ஒரு பங்காளியையும் திரைக்கதைக்குள் வைத்திருக்கிறார். இந்த பொழுதுபோக்கு கதையை வைத்துக்கொண்டு இன்றைய நாகரிக சமுதாயத்துக்குச் சொல்ல வேண்டிய கருத்துகளையும் கருத்தென்று தெரியாமல் சொல்லியிருக்கிறார்கள்.

சிவகார்த்தியேன்,சூரி ஆகியோருக்கு முந்தைய படங்களுக்குச் சற்றும் குறைவில்லாமல் சேட்டை செய்யும் வேடம். உடல்மொழியிலும் வசன உச்சரிப்பிலும் அந்தக் கரக்டர்களுக்கு உயிர்கொடுத்து அடித்து ஆடியிருக்கிறார்கள்.

அவர் மாதிரியே இருக்கும் சூரியும் அவரும் சேர்ந்துகொண்டு கொடுக்கும் அலப்பறைகள் வாய்விட்டுச் சிரிக்கவைக்கின்றன. அடுத்த ஆறுமாசத்துல ஆடிகார்ல போவீங்கன்னு ஜோசியக்காரர் சொன்னவுடன் ஆடிகார் புக் பண்ண ஷோரூமுக்குப் போவதும் அங்கு சேல்கேர்ளாக இருக்கும் நாயகி கீர்த்திசுரேஷையும் காரையும் ஒப்பிட்டு கலாய்ப்பது, நாயகியின் வீட்டுக்கெதிராகவே ரஜினிமுருகன் டீக்கடை என்று போடுவது, அந்த டீக்கடை குப்புறக்கவிழ்வது உட்பட படம் முழுக்க அதகளம் செய்திருக்கிறார்கள்.

சூரியின் அப்பா அவர் அடிக்கடி ஏதாவதொரு பேர் சொல்லி உறவினர்கள் நண்பர்களிடம் மொய்வசூலிக்கும் தந்திரம், இவர்களே ரியல்எஸ்டேட் தொழிலில் இறங்குவது உள்ளிட்ட விடயங்களும் போரடிக்காமல் படத்துக்குப் பலம் சேர்த்திருக்கின்றன. தாத்தாவின் பூர்வீக வீட்டை விற்றுச் செட்டில் ஆகலாம் என்று நினைத்து வேலையைத் தொடங்கும்போது பேரன் என்கிற பெயரில் வருகிற ஏழரைமூக்கன் சமுத்திரக்கனி, படத்தை அக்ஷன் மோடுக்குக் கொண்டுபோய்விடுவாரோ என்று அச்சப்பட வைக் கிறார். அதற்கான வாய்ப்புகள் நிறைய இருந்தாலும் அவற்றைப் பயன்படுத்தாமல் விட்டதே படக் குழுவினரின் புத்திசாலித்தனம்.

ஊரே மெச்ச வாழும் ஒரு பெருந்தகை ராஜ்கிரண், நாட்டையே கூட்டி ஒரு பொய் சொல்வது பொருத்தமா? என்கிற கேள்வியை நான் செத்தா, நீங்கள் வந்து பார்ப்பீங்க, நான் உங்களை எப்ப பார்க்கிறது, உங்க பிள்ளைகளைப் பார்க்காம உங்களால் ஒருநாள் கூட இருக்க முடியலைங்கிறபோது நான் மட்டும் என் பிள்ளைகளைப் பார்க்காம எப்படி இருக்கிறது? என்று கண்ணீர் மல்க ராஜ்கிரண் பேசும் வசனம் அந்த யதார்த்த மீறலைக் காணாமல் அடித்துவிடுகிறது.

கடைசியாக பஞ்சாயத்தில் எனக்கு இன்னொரு பேரன் இருக்கான் என்று சொல்லி தன் முன் கதையை உணர்ச்சி கொந்தளிக்கச் சொல்லி தான் ஒரு நடிப்பு அரக்கன் என்பதை மீண்டும் நிறுவியிருக்கிறார் ராஜ்கிரண். நாயகி கீர்த்திசுரேஷ், சிவகார்த்திகேயனுக்கு ஈடுகொடுத்திருக்கிறார்.

சில காட்சிகளில் அழகாகவும் சில காட்சிகளில் பேரழகாகவும் இருக்கிறார். அவருடைய அப்பாவாக நடித்திருக்கும் தீவிர ரஜினி ரசிகர் அச்சுதகுமாரை பயங்கரம் என்று சொன்னாலும் அவர் வரும் காட்சிகள் அதிக சிரிப்பூட்டுகின்றன. ஏழரை மூக்கனாக நடித்திருக்கும் சமுத்திரக்கனி, தனக்குக் கொடுக்கப்பட்ட வேடத்துக்கு மிகப்பொருத்தமாக நடித்து நற்பெயர் பெறுகிறார்.

ஒருஇலட்சம் பணத்தை வாங்கிக்கொண்டு அவர் நடக்கும் நடை நாடோடிகள் நமோநாரயணனுக்குச் சவால் விடுகிற மாதிரி அமைந்திருக்கிறது. கடைசிக்காட்சியில் சிவகார்த்திகேயன் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சியூட்டியிருக்கிறார். பழங்கால வீடுகளைப் பாதுகாக்கவேண்டும் என்கிற கருத்தைச் சொல்லி வருத்தப்படாதவாலிபர் இந்தப்படத்தில் இன்னும் உயர்ந்திருக்கிறார்.

இமானின் இசையில் பாடல்கள் எல்லாமே படத்துக்குப் பலமாக அமைந்திருக்கின்றன. பாலசுப்பிரமணியத்தின் ஒளிப்பதிவு காட்சிகளை வண்ணமயமாக்கியிருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் சொத்து வைத்திருக்கிறவர்களுக்கு ஏற்படுகிற சிக்கல்களோடு மதுரை சுற்றுவட்டாரத்திலுள்ள ஊர்ப்பஞ்சாயத்துகள் பற்றிய விடயங்களைக் காட்சிப்படுத்தியிருக்கும் இயக்குநர் பொன்ராம் பழையவீடுகளைப் பழையதாகப் பார்க்காமல் பொக்கிஷமாகப் பாருங்கள் என்றும் சொல்லியிருப்பது பாராட்டுக்குரியது.






# எம்.ஜி.ஆர். ஓர் சகாப்தம்

தமிழ்த்திரை உலகிலும், பின்னர் அரசியலிலும் சகாப்தம் படைத்த, எம்.ஜி.ஆர் என்ற பெயரில் புகழ்பெற்ற எம்.ஜி.ராமச்சந்திரன் 1917 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தார்.

கோபாலமேனன் சத்யபாமா ஆகியோருக்கு கடைக் குட்டியாகப் பிறந்த இவருக்கு எம்.ஜி.சக்ரபாணி, பாலகிருஷ்ணன் என்று இரண்டு அண்ணன்கள். பாலகிருஷ்ணன், கமலாட்சி, சுபத்ரா ஆகிய மூவரும் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர்.

நீதிபதியாக பணியாற்றிய கோபாலமேனன் நீதி தவறாதவர். அநீதிக்குத் துணை போக மறுத்ததால், வேறு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டார். அதனால் வேதனை அடைந்த கோபாலமேனன் பதவியை ராஜினாமா செய்தார்.

பின்னர் மனைவியுடன் இலங்கை வந்தார். கோபாலமேனன் சத்தியபாமா தம்பதியினர் இலங்கையில் வசித்த போது, கண்டியில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஹந்தானா என்ற இடத்தில் எம்.ஜி.ஆர் பிறந்தார்.

அந்த இடம், தமிழில் "பச்சைக்காடு" என்று அழைக்கப்படுகிறது. எம்.ஜி.ஆர். பிறந்த வீட்டில் இப்போது ஒரு பாடசாலை நடந்து வருகிறது.

எம்.ஜி.ஆருக்கு 2 வயதானபோது, குடும்பத்துடன் தாயகம் திரும்பினார், கோபாலமேனன். முன்பு செல்வச் செழிப்புடன் வாழ்ந்த அவர் குடும்பம், ஒத்தப்பாலம் என்ற இடத்தில் வாடகை வீட்டில் வசித்தது. 1920 ஆம் ஆண்டில், கோபாலமேனன் திடீரென்று மாரடைப்பால் காலமானார்.

அப்போது எம்.ஜி.ஆருக்கு மூன்று வயது. கணவரை இழந்த சத்யபாமா, தன் இரண்டு மகன்களையும் வளர்த்து ஆளாக்குவது எப்படி என்று திகைத்தார்.

அவருடைய தம்பி நாராயணனும், குடும்ப நண்பர் வேலு நாயரும் அப்போது கும்பகோணத்தில் வசித்து வந்தார்கள். ஆகவே, தன் இரு மகன்களுடன் கும்பகோணத்துக்கு வந்தார், சத்தியபாமா.

நாராயணன், இளம் வயதிலேயே கேரளாவில் இருந்து தமிழகத்துக்கு வந்து குடியேறியவர்.

கும்பகோணத்தில் தங்கி, "மதுரை ஒரிஜினல் பாய்ஸ்" நாடகக் கம்பெனியில் பின்பாட்டுப் பாடி பிழைத்து வந்தார். குழந்தைகளுடன் ஆதரவு தேடி வந்த அக்காவுக்கு அவர் ஒரு வீடு பார்த்துக் கொடுத்தார். கும்பகோணம் ஆணையடிப்பள்ளியில் சக்ரபாணியும், எம்.ஜி.ஆரும் சேர்ந்தார்கள். எம்.ஜி.ஆரை விட சக்ரபாணி நான்கு வயது மூத்தவர். எனவே, குடும்ப நிலைமையை ஓரளவுக்கு உணர முடிந்தது.

பள்ளிக்குப் போகும் நேரம் தவிர மற்ற நேரங்களில் சிறு சிறு வேலைகள் செய்து, கொஞ்சம் பணம் சம்பாதித்தார்.

இலங்கையிலிருந்து கொண்டு வந்திருந்த பணமும், நகைகளும் தீரும் வரை, வாழ்க்கைச் சக்கரம் சிக்கலின்றி சுழன்றது. அதன்பிறகு, தன் குழந்தைகளை வளர்க்க சத்யபாமா மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

எப்படியும் பிள்ளைகளை நல்லபடியாக வளர்த்து முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற உறுதியுடன் சோதனைகள் அனைத்தையும் தாங்கிக் கொண்டார்.

சத்யபாமாவின் கஷ்டத்தைப் போக்க, நாராயணன் ஒரு யோசனை தெரிவித்தார். "அக்கா! சக்ரபாணியும், ராமச்சந்திரனும் பார்ப்பதற்கு அழகாக இருக்கிறார்கள். நான் வேலை பார்க்கும் நாடகக் கம்பெனியில் சேர்த்து விட்டால், விரைவில் முன்னுக்கு வந்து விடுவார்கள்" என்றார். அப்போது எம்.ஜி.ஆருக்கு 7 வயது. அவர் மூன்றாம் வகுப்பும், சக்ரபாணி ஏழாம் வகுப்பும் படித்துக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளை நன்றாகப் படிக்க வைக்க சத்தியபாமா விரும்பினார்.

ஆனால் குடும்ப சூழ்நிலை அதற்கு இடம் தரவில்லை. எனவே, வேறு வழியின்றி பிள்ளைகளை நாடகத்தில் சேர்க்க சம்மதித்தார். 'ஒரிஜினல் பாய்ஸ்' கம்பெனி அப்போது பாண்டிச்சேரியில் முகாமிட்டிருந்தது. அங்கு எம்.ஜி.ஆரையும், சக்ரபாணியையும் அழைத்துச் சென்று சேர்த்து விட்டார் நாராயணன். அப்போது இந்த நாடகக் கம்பெனியில் பி.யு.சின்னப்பா, டி.எஸ்.பாலையா ஆகியோர் நடிகர்களாக இருந்தார்கள்.

முதலில்சிறு வேடங்களில்நடித்த எம்.ஜி.ஆர, சில ஆண்டுகளுக்குப்பின் கதாநாயகனாக உயர்ந்தார். இந்த சமயத்தில்தான் தமிழில் பேசும் படங்கள் வரத்தொடங்கின. 1935 ஆம் ஆண்டு, எம்.ஜி.ஆர். வாழ்க்கையில் மட்டுமல்ல, தமிழ்த் திரைப்பட வரலாற்றில் முக்கியமான வருடம்.

பிற்காலத்தில் ஜெமினி ஸ்டூடியோவைத் தொடங்கி சாதனைகள் புரிந்த எஸ்.எஸ்.வாசன், தமது "ஆனந்த விகடன்" பத்திரிகையில் எழுதிய "சதிலீலாவதி" என்ற கதையை, வேல் பிக்சர்ஸ் என்ற நிறுவனம் திரைப்படமாகத் தயாரித்தது. படத்தின் கதாநாயகன் எம்.கே.ராதா. இன்ஸ்பெக்டர் வேடத்தில் நடிக்க எம்.ஜி.ஆர். ஒப்பந்தமானார்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், டி.எஸ்.பாலையா ஆகியோரும் இப்படத்தில் நடித்தனர். எஸ்.எஸ்.வாசன், எம்.ஜி.ஆர்., என்.எஸ்.கிருஷ்ணன், டி.எஸ்.பாலையா ஆகிய நால்வருக்கும் இது முதல் படம்.



அமெரிக்காவிலிருந்து தமிழகம் வந்து, பிற்காலத்தில் "அம்பிகாபதி", "மீரா", "சகுந்தலை" போன்ற அற்புதப் படங்களை இயக்கியவரான எல்லிஸ் ஆர்.டங்கன்தான் இப்படத்தின் இயக்குனர்.

28.3.1936 இல் "சதிலீலாவதி" வெளியாகியது. படத்தின் முடிவு எப்படி இருக்குமோ என்று அதில் சம்பந்தப்பட்ட அனைவரும் ஆவலுடன் காத்திருந்தனர். படம் பெரும் வெற்றி பெற்று, அதில் பங்கு கொண்ட அனைவருக்கும் நல்ல பெயரைத் தேடித் தந்தது. அப்போது எம்.ஜி.ஆருக்கு 19 வயது. முதல் படத்தில் நடித்ததற்காக அவருக்குக் கிடைத்த சம்பளம் நூறு ரூபாய்.

**தமிழகத்தின் முன்னாள் முதல்வர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 99 ஆவது பிறந்த தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது....**

முழு நூறு ரூபாய் நோட்டை அப்போது தான் முதன் முதலாகப் பார்த்தார். மகிழ்ச்சி தாங்கவில்லை. நூறு ரூபாயை அப்படியே அம்மா கையில் கொண்டு போய்க் கொடுத்து ஆசி பெற்றார். எம்.ஜி.ஆரின் இரண்டாவது படம் "இரு சகோதரர்கள்". இதில் சக்ரபாணியும் நடித்தார். இந்தப் படமும் வெற்றிகரமாக ஓடியது.

தொடர்ந்து சிறு சிறு வேடங்களில் நடித்து வந்தார் எம்.ஜி.ஆர். அவருக்குத் திருமணம் செய்து வைக்க சத்தியபாமா விரும்பினார். "நடிப்புத்துறையில் முன்னேறிய பிறகுதான் திருமணம்" என்று எம்.ஜி.ஆர். கூறினார். ஆனால், தாயார் விடாப்பிடியாக வற்புறுத்தவே எம்.ஜி.ஆர். சம்மதித்தார். பாலக்காட்டைச் சேர்ந்த பார்க்கவி என்கிற தங்கமணியை எம்.ஜி.ஆருக்கு மணம் முடித்து வைத்தார் சத்தியபாமா.

அழகும், குணமும் ஒருங்கே அமைந்திருந்த பார்க்கவி மீது உயிரையே வைத்திருந்தார் எம்.ஜி.ஆர். ஆனால், தாய் வீடு சென்றிருந்த பார்க்கவி திடீரென்று காலமானார். அப்போது எம்.ஜி.ஆர். வெளியூரில் நாடகத்தில் நடித்துக்கொண்டிருந்தார். மனைவி மறைவுச் செய்தியைத் தாங்கி வந்த தந்தி, அவரை இடிபோல தாக்கியது.

நொறுங்கிய இதயத்துடன், உடனே பாலக்காடு புறப்பட்டார். போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லாத காலம் அது. எம்.ஜி.ஆர. போய்ச் சேர்வதற்குள், பார்க்கவியின் உடல் அடக்கம் முடிந்துவிட்டது. மனைவியின் முகத்தை கடைசி முறையாகப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று எம்.ஜி.ஆர். அலறித் துடித்தார். மனைவியைப் பிரிந்த துயரம் அவரை வெகுவாக பாதித்தது.

எம்.ஜி.ஆருக்கு மறுமணம் செய்து வைத்தால்தான் வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும் என்று நினைத்தார் அவரது தாயார். இதுபற்றி எம்.ஜி.ஆரிடம் பேசினார். "பார்க்கவியுடன் வாழ எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. எனக்கு எதற்கம்மா இன்னொரு கல்யாணம்?" என்று விரக்தியுடன் கூறினார் எம்.ஜி.ஆர். "பார்க்கவியைப் பறிகொடுத்தது நம் துரதிர்ஷ்டம்தான். என்றாலும், நீ வாழ்க்கையே வெறுத்துப் பேசுவது நல்லதல்ல. அது உன் மனதையும், உடல் நலத்தையும், எதிர்காலத்தையும் பாதிக்கும். எனவே, அவள் இடத்தில் இன்னொரு பெண்ணை அமர்த்துவதுதான் நல்லது" என்று எடுத்துச் சொன்னார்.

"உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்" என்று அரை மனதுடன் கூறினார், எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆருக்கு மீண்டும் பெண் பார்த்தார் சத்யபாமா. பாலக்காட்டுக்கு அருகே உள்ள குழல்மன்னம் என்ற இடத்தைச் சேர்ந்த கடுங்கநாயர் மூகாம்பிகை அம்மாள் தம்பதிகளின் மகளான சதானந்தவதியைப் பார்த்து முடிவு செய்தார்.

பார்க்கவி போல் சதானந்தவதி அழகானவர் அல்ல. சுமாரான நிறம். மாறான தோற்றம். ஆனால் சாதுவான குணம். பொறுமைசாலி. எம்.ஜி.ஆர். சதானந்தவதி திருமணம் 1942 ஆம் ஆண்டு ஆனி மாதம் 16 ஆம் திகதி நடந்தது.

1947 இல், மாதம் 170 ரூபாய் வாடகைக்கு அடையாறில் ஒரு வீடு பார்த்து குடியேறினார், எம்.ஜி.ஆர். அங்கு வசித்தபோது, அன்னை சத்யா அம்மையார் காலமானார். அந்தத் துயரத்திலிருந்து எம்.ஜி.ஆர். மீள வெகு காலம் பிடித்தது. 1950 ஆம் ஆண்டில் கருச்சிதைவு ஏற்பட்டது.

அதன்பின், அவர் படுத்தபடுக்கையானார். 1962 இல் அவர் மறையும் வரை அவர் நோயாளியாகவே இருந்து, மருந்து மாத்திரைகளுடன் வாழ்ந்தார். எம்.ஜி.ஆர். தன் மனைவியை கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொண்டார். ஏறத்தாழ 20 ஆண்டுகள் சதானந்தவதியுடன் இல்லறம் நடத்திய போதிலும், அவர் கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி"யாகவே வாழ்ந்தார்.

இல்லற வாழ்க்கையில் எம்.ஜி.ஆர். சோதனைகளைச் சந்தித்த வேளையில், பட உலகில் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருந்தார்.

1947 ஆம் ஆண்டு, இந்தியாவின் வரலாற்றில் எப்படி முக்கியமானதோ, அதுபோல் எம்.ஜி.ஆரின் வாழ்க்கையிலும் முக்கியமானது. எம்.ஜி.ஆர்., முதன் முதலாகக் கதாநாயகனாக நடித்த "ராஜகுமாரி" படம், அந்த ஆண்டு ஏப்ரல் 11 ஆம் திகதி வெளியாயிற்று.

பின்னர் "மோகினி" என்ற படத்தில் எம்.ஜி.ஆரும், வி.என்.ஜானகியும் ஜோடியாக நடித்தனர். அவர்கள் இணைந்து நடித்த முதல் படம் இது. எம்.கே.தியாகராஜ பாகவதர் "ராஜமுக்தி" என்ற படத்தை சொந்தமாகத் தயாரித்தார்.

படத்தின் கதாநாயகி வி.என்.ஜானகி. இந்தப் படத்தில் பாகவதருக்கு அடுத்த முக்கிய வேடத்தில் வீரதளபதியாக எம்.ஜி.ஆர். நடித்தார். படப்பிடிப்பு, புனாவில் பல மாதங்கள் நடந்தது. அப்போது, எம்.ஜி.ஆருக்கும், ஜானகிக்கும் காதல் அரும்பியது. 1949 இல், கருணாநிதியின் கதை வசனத்தில் உருவான "மருதநாட்டு இளவரசி" படத்தில் எம்.ஜி.ஆரும், ஜானகியும் ஜோடியாக நடித்தனர்.

அப்போது அவர்களின் காதல் முழுநிலவாக வளர்ந்தது.

இதுபற்றி எம்.ஜி.ஆர் தெரிவிக்கையில், "திருமணம் ஆன இரண்டே ஆண்டுகளில் காலமான என் முதல் மனைவி பார்க்கவி என்கிற தங்கமணியின் முகத்தோற்றத்தை ஜானகி அப்படியே பெற்றிருந்தார். அவரைப் பார்க்கும் போதெல்லாம், தங்க மணியைப் பார்ப்பது போல உணர்ந் தேன். அதனால் தான் ஜானகி என் வாழ்க்கையில் இடம் பெற்றார்" என்று எம்.ஜி.ஆர். கூறியுள்ளார்.

மனைவியின் பூரண சம்மதத்துடன் வி.என்.ஜானகியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார் எம்.ஜி.ஆர். அதன்பின், ஜானகி திரைப்படங்களில் நடிக்கவில்லை. கணவரின் சாதனைகளுக்குத் துணை நின்றார்.

எம்.ஜி.ஆரின் நூறாவது படம் "ஒளி விளக்கு". எம்.ஜி.ஆர். நடித்த முதல் படமான "சதிலீலாவதி"யின் கதையை எழுதியவர் எஸ்.எஸ்.வாசன். எம்.ஜி.ஆரின் 100 வது படத்தை தயாரித்தவரும் வாசன்.

பல சோதனைகளுக்கு இடையே "நாடோடி மன்னன்" படத்தை சொந்தமாக பிரமாண்டமாகத் தயாரித்ததுடன், டைரக்டராகவும் பணியாற்றி, திரையிட்டார். "படம் வெற்றியடைந்தால் நான் மன்னன். தோல்வி அடைந்தால் நாடோடி" என்று எம்.ஜி.ஆர். குறிப்பிட்டிருந்தார். படம் மாபெரும் வெற்றி பெற்று, வசூலைக் குவித்தது. எம்.ஜி.ஆர். திரை உலகின் முடிசூடா மன்னரானார்.

1972 ஒக்டோபர் 18 ஆம் திகதி "அண்ணா தி.மு.க" என்ற கட்சியை எம்.ஜி.ஆர். தொடங்கினார். கட்சி ஆரம்பித்து ஏழே மாதங்களில், திண்டுக்கல் பாராளுமன்ற இடைத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. 1977 மார்ச் மாதம் நடைபெற்ற தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. மகத்தான வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது.

தனது கடைசிப் படமான "மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்" படத்தில் பாக்கியிருந்த ஒரு சில காட்சிகளை முடித்துக் கொடுத்துவிட்டு, 1977 ஜுன் 30 ஆம் திகதி தமது 60 வது வயதில், தமிழக முதலமைச்சராக எம்.ஜி.ஆர். பதவி ஏற்றார்.

தான் இறக்கும் வரை தொடர்ந்து 3 முறை முதலமைச்சராக இருந்த இவரது ஆட்சியின்போது, சத்துணவுத் திட்டம், இலவச சீருடை, காலணி வழங் கும் திட்டம, இலவச பாடநூல் வழங்கும் திட்டம் என பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து, இலவசங்களுக்கு அடித்தளமிட்டார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் உட்பட 5-க்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் எம்.ஜி.ஆரின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டன.

1984 இல் நோய்வாய்ப்பட்டு, சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது நடந்த தேர்தலில் வெற்றி பெற்று 3 ஆவது முறையாக முதலமைச்சரானார் எம்.ஜி.ஆர்.

தமிழகத் தேர்தல் வரலாற்றிலேயே, பரப்புரைக்குச் செல்லாமலேயே, முதலமைச்சரான பெருமை இவர் ஒருவருக்கு மட்டுமே உண்டு. இருந்தும், தன்னுடைய முழு பதவிக்காலம் முடிவதற்குள் 1987-ம் ஆண்டு பதவியிலிருக் கும்போதே உயிரிழந்தார். அவருடைய மறைவுக்குப் பிறகு எம்.ஜி.ஆருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. எம்.ஜி.ஆர் மறைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும், இன்றும் போற்றப்படும் தலைவர்களில் ஒருவராக அவர் திகழ்ந்து வருகிறார்.

facebook

# சுண்டெலியின் பயம்



முன்னொரு காலத்தில் ஒரு காட்டில் முனிவர் ஒருவரின் குடிசை இருந்தது. அதன் அருகே ஒரு சின்ன மலை இருந்தது. அந்த மலையினருகே உள்ள ஒரு துவாரத்தில் சின்ன சுண்டெலி ஒன்று வாழ்ந்து கொண்டிருந்தது. அந்தக் காட்டில் பூனையின் நடமாட்டம் அதிகம் இருந்தது. ஆகவே, அது மிகவும் பயத்துடன் வாழ்ந்து வந்தது.

ஒருநாள் ஒரு பூனையின் பிடியிலிருந்து தப்பிய சுண்டெலி, ஆச்சிரமத்தில் உள்ள முனிவரைச் சரண் அடைந்தது. முனிவர் அதை அன்புடன்கவனித்தார். பயப்படாதே! என்று ஆறுதல் கூறினார். நான் உனக்கு என்ன உதவி செய்ய வேண்டும்? என்று கேட்டார். சுவாமி நான் பூனைகளைக் கண்டு அதிகமாகப் பயப்படுகிறேன். என்னையும் ஒரு பூனையாக மாற்றி விட்டால், நான் பயப்படவேண்டிய அவசியம் இல்லை அல்லவா? என்றது சுண்டெலி. முனிவர் சிற்றெலியைப் பெரும் பூனையாக மாற்றினார். ஒரு மாதம் சென்றது. பூனை அவர் முன் வந்து நின்றது. சுவாமி, பூனையாக இருப்பதிலும் பிரச்சினை. ஓநாய்கள் என்னை விரட்டுகின்றன என்றது.

பூனையின் எண்ணத்தை அறிந்து கொண்ட முனிவர் அதை ஓநாயாக மாற்றினார். ஓநாய் சந்தோஷமாகத் திரும்பிச் செனறது.

ஒருமாதம் சென்றவுடன், மீண்டும் ஓநாய் திரும்பி வந்து முனிவரைச் சரண் அடைந்தது. என்ன விடயம்? என்றார் முனிவர். கரடிகள் தொல்லை தருகின்றன! என்றது ஓநாய். அதைக் கரடியாக மாற்றி அனுப்பி வைத்தார் முனிவர். மீண்டும் ஒரே மாதத்தில் திரும்பியது கரடி. இப்போதும் பிரச்சினையா? என்று புன்சிரிப்புடன் கேட்டார் முனிவர். ஆம் சிறுத்தைகள் என்னைக் கடிக்க வருகின்றன என்றது.

ஓஹோ! என்ற முனிவர் அதை ஒரு சிறுத்தையாக உருமாற்றினார். ஒருமாதம் சென்றவுடன் சிறுத்தை திரும்பி வந்தது. சிங்கங்கள் என்னைக் காட்டை விட்டு வெளியேறு என்று உத்தரவிடுகின்றன என்றது. காரணம்? என்ன என்று முனிவர் கேட்டார். பலசாலிகள் ஒரே காட்டில் இருக்கக் கூடாது என்பதுதான் அதன் எண்ணம் என்றது. முனிவர் அதைச் சிங்கமாக மாற்றினார். சிங்கம் ஒரு மாதம் சென்ற பிறகு, சுவாமி, நகரத்திலிருந்து வந்த அரசன் ஒருவன், சிங்க வேட்டை ஆடினான். தப்பிப் பிழைத்தது நான் மட்டும்தான்! என்றது. முனிவர் சிங்கத்தை அரசனாக்கினார். அதன்பின் இரண்டு மூன்று மாதங்கள் வரை அரசன் முனிவரைப் பார்க்கவில்லை. ஆறு மாதத்துக்குப்பின் அரசன், கிழிந்த துணிமணிகளுடன் வந்து முனிவரைப் பார்த்தான். என்ன ஆயிற்று உனக்கு? என்றார் முனிவர். எதிரி நாட்டு அரசன் போர் தொடுத்தான். எனக்குப் போர் செய்யவே பயமாக இருந்தது. இருப்பினும் என் சார்பாக எல்லோரும் போர் புரிந்தனர். கடைசியில் எதிரிகள் அரண் மனைக்குள் புகுந்து என்னைக் கைது செய்தனர். பாதாளச் சிறையில் அடைத்தனர். நான் தப்பி வந்து விட்டேன் என்றான். இப்போது நான் எனன செய்ய வேண்டும், உனக்காக எதிரியுடன் போராட வேண்டுமா? என்றார் முனிவர். அந்த அரசன் அமைதியாக இருந்தான். முனிவர் சொன்னார். சிற்றெலியாக இருந்த உன்னை அரசர் வரை உயர்த்தினேன். ஆனாலும் உன்னுள் இருந்த எலித்தன்மை மாறவில்லை. பயத்துடனே இருந்தாய். இனி, நான் உனக்கு உதவுவதற்காக எது செய்தாலும், அது உனக்கு உதவவே உதவாது. இதுவரை எலியின் மனதையே பெற்றிருக்கும் நீ, இனியும் எலியாக இருப்பதே நல்லது என்று கூறி அரசனை எலியாக மாற்றினார் முனிவர்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 605

Search for people, places and things Nagendram Home

விஜிதரன் கணேஸ்





சாளின்




சயந்தன் சேனாதிராஜா




சோபிதன்




நேவிலி நேரு



தமிழன் புகழ்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 16

*சிந்தனைக்கு....*

## கடவுளிடம் எதை வேண்டுவது?

கஷ்டங்கள் வரும் பொழுது கடவுளின் ஞாபகம் சேர்ந்து வருகிறது.கவலைகளும் கஷ்டங்களும் தொடர்ந்தால் கடவுளிடம் மனமுருகி வேண்டியவையும் கிடையாது போனால் கோபம் கூட வருகிறது.கேட்டும் கிடைக்காத போது கடவுள் நம்பிக்கையும் கேள்விக்குறி ஆகிவிடுகிறது.

கேட்டுப் பெற்றுக்கொள்வதற்கும் எம்மைக் காப்பதற்கும் மட்டும் தான் கடவுள் இருக்கிறரா?சரி கேட்பவற்றை எல்லாம் கொடுக்கும் கடவுள் இருக்கிறாரா?சரி கேட்பவற்றை எல்லாம் கொடுக்கும் கடவுள் இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம்.நாம் எல்லாவற்றையும் கேட்க முயலுவோம். எமக்கு எல்லாமே கிடைக்குமானால் இன்னொருவனுக்கு ஒன்றுமே கிடைக்காமல் போகும்.இது நியாயமாகுமா?இதையும் மீறி எல்லோருக்கும் எல்லாமே கிடைத்து விடின் பூவுலகம் எவ்வாறு இயங்க முடியும்.

ஒன்றின் இழப்பிலே இன்னொன்று கிடைப்பதும் தோல்விகளும் வெற்றிகளும் மாறிமாறி ஏற்படுவதும் எதிர்பார்ப்பவற்றில் சில கிடைக்காமல் போவதும் எதிர்பாராமலேயே சில கிடைக்கப்பெறுவதும் சர்வ நிச்சயமானது.

கடவுளிடம் எம்மை சரியான பாதையில் வழிநடத்துமாறு கேட்போம்.எமது மனோபலத்தையும் எதையும் தாங்கி சமாளிக்கும் மன உறுதியையும் வளர்த்து விடக் கேட்போம்.எமது சந்தோசங்களையும் முன்னேற்றங்களையும் கடவுளிடம் பகிர்ந்து கொள்வோம்.எமது கவலைகளையும் பிரச்சினைகளையும் அவரிடம் முறையிட்டு ஆறுதலும் தெளிவும் பெறுவோம்.எல்லாம் வல்ல இறைவன் உலகை சரியான பாதையில் வழி நடத்துவார்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

## "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும்"

இன்று உலகளாவிய ரீதியில் உடற் பருமன் அதிகரிப்பு, உயர் குருதியமுக்கம் மற்றும் நீரிழிவு போன்ற நோய்கள் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமிருக்கின்றன.

இவ்வாறு ஒருவரிலிருந்து மற்றொருவருக்கு தொற்றா நோய்களின் **(non communicable disease)** பாதிப்புள்ளானவர்கள் இருதய மற்றும் பலவகையான நோய்த் தாக்கங்களால் இலகுவில் பாதிக்கப்படும் அபாய நிலை உருவாகலாம். எனவே மேற்குறிப்பிட்ட பாதிப்புக்குள்ளாகாமல் இருப்பதன் மூலமே ஒருவர் சுகதேகியாக வாழ முடியும். புகைத்தல் மற்றும் மதுசாரம் அருந்துதல் என்பனவும் உயிர்கொல்லி நோய்களை உருவாக்கும்.

### ஒருவர் எவ்வாறு தனது உடற்பருமனை சாதாரண அளவில் பேணலாம்?

- உண்மையில் உடற்பருமனானது "உடற்திணிவுச் சுட்டெண்" **(Body Mass Index – BMI )** என்னும் அலகினாலேயே அளக்கப்படுகின்றது.
- ஒவ்வொரு மனிதனும் சரியான அளவில் தனது உடற்திணிவுச் சுட்டெண்ணை (BMI) பேணுவதன் மூலம் உடற்பருமனை சாதாரண அளவில் பேணிக் கொள்ளலாம்.
- அவ்வாறாயின் ஒவ்வொருவரும் உடற்திணிவுச் சுட்டெண் பற்றியும் உணவுப் பழக்கங்கள் பற்றியும் உடற்பயிற்சிகள் பற்றியும் அறிந்திருத்தல் அவசியமாகும்.
- ஆரோக்கியமான உணவுப்பழக்கவழுங்களும் உடற்பயிற்சிகளுமே ஒருவரது உடற்பருமனை பேணுவதற்கு அடிப்படையான காரணிகளாகும்.அத்துடன் புகைத்தல் மற்றும் மது அருந்துதலை முற்றாக நிறுத்த வேண்டும்.

### உடற்திணிவுச் சுட்டெண் (Body Mass Index – BMI) என்றால் என்ன ?

- **BMI** ஆனது ஒருவரது உடல் நிறையையும் உயரத்தையும் அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு கணிக்கப்படுகிறது.
- உடற்திணிவுச் சுட்டெண்

$$(BMI) = \frac{\text{நிறை (kg)}}{\text{உயரம்(cm) x உயரம் (cm)}}$$

### BMI பற்றிய சாதாரண அளவுகள் என்ன ?

- ஆசியாக் கண்டத்தில் வசிக்கும் மக்களின் **BMI** ஆனது எவ்வளவாகப் பேணப்பட வேண்டும் என்பவை பற்றி பின்வருமாறு கூறுகின்றது.
- BMI ஆனது 18.4 $kg/m^2$ க்கு குறைவாக இருந்தால் அவர் குறைவான உடற்பருமன் உடையவராக (under weight) கருதப்படுவார்.
- அதே சமயம் BMI ஆனது 18.5$kg/m^2$ தொடக்கம் 23 $kg/m^2$ வரையானவர்கள் சாதாரண உடற்பருமனை உடையவர்களாக அழைக்கப்படுவர்.
- ஆனால் BMI ஆனது 23$kg/m^2$ தொடக்கம் 27.5$kg/m^2$ க்கு வரையானவர்கள் அதிக உடற்பருமனை உடையவர்களாகவும் (over weight ) 27.5 $kg/m^2$ க்கு மேற்பட்டவர்கள் அதிகளவு உடற்பருமனை உடையவர்களாகவும் (obese) கருதப்படுவர்.
- எனவே ஒவ்வொருவரும் தனது **BMI** ஐ கணக்கிட்டு அதை 18.5 $kg /m^2$ இல் இருந்து 23 $kg/ m^2$ வரையில் பேணிக் கொள்வது அத்தியாவசியமாகின்றது.

### BMI ஆனது 18.5 $kg/m^2$ இல் குறைவாக (under weight) இருந்தால் எவ்வகையான பாதிப்புக்கள் ஏற்படும்?

- இவர்கள் உடற்பருமன் குறைந்தவர்கள் (under weight) என அழைக்கப்படும்.
- இவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கலாம். இதனால் அடிக்கடி கிருமித் தொற்றுக்கு உள்ளாக நேரிடும்.
- இவர்களுக்கு குருதிச்சோகை நோய் (anemia) ஏற்படலாம். எனவே அதிக களைப்பு, மறதி, வினைத்திறனுடன் வேலை செய்ய முடியாமை போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும்.
- மற்றும் என்புருக்கி (osteoporosis) நோய் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்படலாம். இதனால் மூட்டு நோ, உடல் நோ, முறிவு போன்ற பிரச்சினைகள் உருவாகலாம்.

### BMI ஆனது 23 $kg /m^2$ இலும் அதிகமாக (over weight/ obesity) இருந்தால் எவ்வகையான பாதிப்புக்கள் உருவாகும்?

- இவர்களே பல வகையான தொற்றா நோய்களால் (non communicable disease) பாதிக்கப்படும் அபாயமுடையவர்கள்.
- உயர் குருதி அமுக்கம்,நீரிழிவு, மாரடைப்பு, அதிக கொலஸ்ரோல், பாரிச வாதம் போன்ற ஆட்கொல்லி நோய்களின் தாக்கங்கள் இவர்களை இலகுவாக ஆட்கொள்ளும்.
- முற்றும் சாதாரண சுவாசத்தில் பிரச்சினைகள் கருக்கட்டல் / குழந்தை பிறத்தலில் பிரச்சினைகள் சிறுநீரக நோய்கள் மூட்டுவாதங்கள் மற்றும் சில வகையான புற்று நோய்களாலும் இலகுவில் பாதிக்கப்படும் நிலை உருவாகக்கூடும்.

### ஒருவரின் உடல் நிறையை எப்போது பராமரிக்க தொடங்க வேண்டும்?

- உடல்நிறையை பராமரிப்பதானது ஒருவர்தனது தாயின் கருவறையில் உருவாகியதிலிருந்து ஆரம்பமாகின்றது.
- கர்ப்பிணித் தாய் ஒவ்வொரு மாதமும் தன் நிறையை அளந்து கொள்வதோடு ஆரோக்கியமான உணவுகளை உண்ண வேண்டும்.
- குழந்தையின் நிறையானது சாதாரண அளவில் இருக்க வேண்டும்.குழந்தை நிறை குறைந்து இருப்பின் அவர்கள் பெரியவர்கள் ஆகும்போது உயர்குருதியமுக்கம் மற்றும் இதயநோய்களுக்கு உள்ளாக நேரிடலாம்.அதேபோல் குழந்தை நிறை கூடுதலாக இருப்பின் அவர்கள் அவர்கள் எதிர்காலத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்படலாம்.
- குழந்தை பிறந்த பின் தாய்ப்பால் ஊட்டப்பட வேண்டும்.5, 6 மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்கப்பட வேண்டும்.அதேபோல் இரண்டு வருடங்களின் பின் தாய்ப்பால் கொடுப்பதும் நல்லதன்று.
- ஒவ்வொரு மாதமும் குழந்தையின் நிறை அளக்கப்பட்டு நிறை சம்பந்தமான வரைபில் வரையப்பட வேண்டும்.குழந்தையின் நிறையை சாதாரண அளவில் பேணுவது பெற்றோரின் பொறுப்பாகும்.
- குழந்தைகளுக்கான உணவு தெரிவு செய்யும் போது கூட அது நிறை உணவாகவும் கொழுப்பு மற்றும் உப்பு குறைந்ததாகவும் இலகுவில் சமிபாடடையக் கூடியதாகவும் தெரிவு செய்ய வேண்டும். இவை நாளாந்தம் நாம் உண்ணும் சாதாரண உணவுகளை கொண்டு அமைக்கப்படுவதுடன் அதிகளவில் புரதம் மற்றும் பழங்கள் மரக்கறிகள் அடங்கியதாக இருத்தல் சிறந்ததாகும்.
- குறைந்தது ஒரு வயது வரை குழந்தைகளுக்கு டொபி சொக்லட் மற்றும் உப்பு போன்ற உணவுகள் சேர்க்கப்படுதலை முற்றாக தடுத்தல் நன்று.
- பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கும் 3 வேளைகளும் உணவு வழங்கப்பட வேண்டும்.மாணவர்களுக்கு நிறை உணவு பற்றிய அறிவுரைகளை வழங்குவதுடன் அவர்கள் பாடசாலைக்கு கொண்டு வரும் உணவுகளை கண்காணிப்பதும் அவர்கள் சரியான உணவுகளை உட்கொள்வதை உறுதி செய்வதும் ஆசிரியர்களின் கடமையாகும்.
- அவர்கள் வளர்ந்த பின் தமது உணவை ஆரோக்கியமாக அமைத்து கொள்வது தமது பொறுப்பாகின்றது. இதன் மூலம் எமது உடல் நிறையை நாம் பேணிக் கொள்ளலாம்.

### நாம் எவ்வாறான உடற்பயிற்சிகளை செய்வது சிறந்தது?

- உடற்பயிற்சியானது சிறு வயது முதல் தொடர்ச்சி யாக செய்தல் சிறந்ததாகும்.
- பாடசாலைப் பருவத்தில் மாணவர்களை புத்தகப் படிப்புடன் மட்டுமல்லாது உடற்பயிற்சிகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடச் செய்வது ஆசிரியர்களின் கடமையாகும்.
- வளர்ந்தவர்கள் தமது உடற்பயிற்சியை தாமாகவே தெரிவு செய்ய வேண்டும். இவை உடலை வருத்தி கஷ்டப்பட்டு செய்யப்படுபவை அல்ல. நமது அன்றாட வாழ்க்கையில் நாம் செய்யும் நடத்தல், ஓடுதல், சைக்கிள் ஓடுதல் என்பனவும் உடற்பயிற்சியின் அங்கங்களாகும்.

சாதாரணமான ஒருவர் வாரத்தில் 5 நாட்களாவது இவ்வாறான உடற்பயிற்சிகளை செய்வது நன்று. ஒரு நாளில் குறைந்தது 30 நிமிடங்கள் நடந்தால் போதுமானது.ஆனால் நடக்கும் போது அவருக்கு சற்று வியர்க்கும் வகையிலும் அவரது இதயத்துடிப்பு 100 நிமிடம் வரை அதிகரிக்கும் வகையிலும் சற்று விரைவாக நடக்க வேண்டும். இது சாதாரணமாக 3.6km தூரத்தை 30 நிமிடத்தல் நடத்தலாகும்

- அதே சமயம் BMI ஆனது 30 $kg/m^2$ இலும் அதிகமானவர்கள் ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மணித்தியாலமாவது மேற்குறிப்பிட்டவாறு நடத்தல் அவசியமானதாகும்.
- மேலும் நாம் அன்றாட வாழ்க்கையின் போதும் நமது நடவடிக்கைகளை உடற்பயிற்சியுடன் தொடர்புடையதாக அமைத்துக் கொள்வது நல்லது.
- உதாரணமாக :அருகிலுள்ள கடைகளுக்கு செல்லும் போது நடந்து செல்லுதல்.
- வேலை செல்பவர் பஸ்சில் செல்பவராயின் சற்றுத் தூரம் நடந்து சென்று தொலைவிலுள்ள பஸ் தரிப்பிடத்திலிருந்து பஸ்சை பெறலாம். இறங்கும் போது சற்று தொலைவில் இறங்கி நடந்து செல்லலாம்.
- அலுவலகங்களில் உள்ள இருக்கைகளை முடிந்தளவு இடைவெளி கூடியதாக அமைத்துக் கொண்டால் இன்னும் ஒருவருடன் தொடர்பு கொள்கையில் எழுந்து நடக்கக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும்.
- வார இறுதி நாட்களில் தோட்டவேலை வீட்டை சுத்தம் செய்யும் வேலைகளை தாமே செய்யலாம்.
- ஓய்வு நேரங்களின் போதும் உல்லாசப்பயணங்களின் போதும் சிறிதளவேனும் நடக்கக் கூடிய வகையில் உங்களது நேர அட்டவணையை தயார் செய்து கொள்வது சிறந்தது.

**Dr.பி.மயூரதன்**